www.padippakam.com


# புதிய பூமி

PUTHIYA POOMI

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.

புதிய பூமி

சுற்று 09 மே/ஜூன் 2001 பக்கம் 12 விலை 10/= சுழற்சி 40


## நவகொலனிய ஆராதனை

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருக்கும் எங்கள் பிதாவே!
உங்கள் திவ்விய நாமம் போற்றப்படுவதாக:
உங்கள் ராஜ்ஜியம் வருவதாக.
எங்கள் செல்வம் மிக்க ஆபிரிக்காவில்
விரும்பி அழைக்கும் ஆபிரிக்காவில்
காலனியஆட்சிக் காலத்தில் நடந்ததைப் போலவே
இப்போதும் உங்கள் விருப்பங்கள் நிறைவேற்றப்படுவதாக.
இன்றைய நாளில் எங்கள் தினக் கூலிக்குரிய டாலரைத் தாருங்கள்.
எங்களது தவறுகளை மன்னித்தருளுங்கள்.
உங்களுக்கும் எங்களுக்கும் சவாலாக உள்ள சூழலை
வெற்றி கொள்ள உதவி தாருங்கள்.
கருணையை வழங்கி உறுதுணையாக இருந்து
நாங்கள் என்றும் பணிவுடனும்
நன்றியுடனும் இருக்க ஆத்ம பலத்தை அளியுங்கள்.
என்றென்றும் எப்போதும் ஆமென்!

*கூகி வா தியாங்கோ*

*கென்யாவின் பிரபல நாவலாசிரியரின் சிறைக்குறிப்புப் புத்தகத்திலிருந்து.*
*நன்றி- சிலுவையில் தொங்கும் சாத்தான்.*

### நம்பிக்கையில்லாப் பிரேரணை :

# அரசை தண்டிக்கவா? ஆட்சி மாற்றத்துக்கா?

**மக்கள் விரோத அரசாங்கங்கள் சாத்தியமான சகல வழிகளிலும் பதவி நீக்கம் செய்யப்படவேண்டும் என்பதில் அபிப்பிராயபேதம் இருக்க முடியாது. ஐ.தே. கட்சி ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவரவிருப்பதாக அறிவித்திருக்கிறது. அவ்வாறான நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டு அரசாங்கம் பதவி கவிழ்க்கப்பட்டு தற்போதிருக்கின்ற பொருளாதார சுமையிலிருந்து ஓரளவாவது நிவாரணம் கிடைக்காதா என்று எண்ணுவோர் அதிகப்பேர் இருக்கின்றனர்.**

உத்தேச நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஏனைய கட்சி எம்.பிக்களின் ஆதரவை தேடுவதில் ஐ.தேசியக்கட்சியின் தலைமைத்துவம் மும்முரமாக இருக்கிறது. அப் பிரேரணையைக் கொண்டுவராமல் செய்வதற்கும், தோற்கடிப்பதற்கும் பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கம் தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. குறிப்பாக ஜே.வி.பி. எம்.பிக்களையும், தமிழ்க்கட்சிகளின் எம்.பிக்களையும் தமக்கு ஆதரவாக வைத்திருக்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

மே தினத்தன்று உரையாற்றிய ஜே.வி.பி செயலாளர் டில்வின் சில்வா ஐ.தேசியக்கட்சி, பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவந்தால் அதனை ஜே.வி.பி ஆதரிக்கும் என்று சூசகமாக கூறியிருந்தார். ஆனால் தற்போது அந்நிலையிலிருந்து ஜே.வி.பி பின்வாங்கியிருப்பதாக தெரிகிறது. ரெலோவும் [illegible] ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்துள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். ஈ.பி.டி.பி எம்.பிக்கள் அரசாங்கத்தை ஆதரிப்பர். பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களிடையே சிலர் நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஐ.தேசிய கட்சியுடன் சேர்ந்திருக்கும் மலையக எம்.பிக்கள் ஆதரவளிப்பர். அரசாங்கத்துடனிருக்கும் இ.தொ.கா எம்.பிக்கள் ஐ.தேசிய கட்சி ஆதரவாக திருப்ப பலத்த முயற்சிகள் எடுக்கப்படுவதாக அறியமுடிகிறது.

யுத்தத்தால் பாதிக்கப்படுகின்ற பெரும்பாலான சிங்களமக்களையும், தமிழ்மக்களையும் நம்ப வைக்கும் நோக்கில் அரசாங்கம் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பது பற்றி அழுத்திக் கூறுகிறது. அரசாங்கத்தின் இந்நிலைப்பாடு மாற்றமடையாது நம்பிக்கையில்லா பிரேரணைக்கு முடிவு ஏற்பட வேண்டியதில்லை. பிரதமரும் பிரதி பாதுகாப்பு அமைச்சரும் யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு கூறிவருகின்றனர்.

பொதுஜனஐக்கிய முன்னணி மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் எதனையும் நிறைவேற்றவில்லை என்பதனையே ஐக்கிய தேசியக் கட்சி கூறிவந்தாலும் தற்போதைய மிதமிஞ்சிய பொருளாதார சுமையை பிரதான முதலீடாகக் கொண்டே நம்பிக்கையில்லா பிரேரணையை முன்னெடுக்கவிருக்கிறது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றுடன் பொதுஜனஐக்கிய முன்னணி செய்துகொண்ட உடன்படிக்கைகளின் நிபந்தனைகளின் பிரதி விளைவாக எமது ரூபா மதிப்பிறக்கம் செய்யப்பட்டு, விலைவாசிகள் அதிகரித்த வண்ணமிருப்பதாக ஐ.தேசியக் கட்சி கூறுகிறது. நம்பிக்கையில்லா பிரேரணையின் மூலம் அரசாங்கம் பதவி கவிழ்க்கப்பட்டால் அவ்வுடன்படிக்கைகளை இரத்து செய்துவிட்டு, ஐ.தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் மக்களை பொருளாதார ரீதியாக பாதிக்காத புதிய உடன்படிக்கைகளை ஐ.தேசியக் கட்சி செய்யும் என்று ஐ.தேசியக் கட்சி கூறுகிறது. ஐ.தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றியடையுமா தோல்வியடையுமா என்பது ஒருபுறமிருக்க, இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணமான உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் எம் நாட்டை ஆட்டிப்படைக்கும் பொருளாதார நிகழ்ச்சி நிரலை எம் நாட்டிற்கு ஐ.தேசியக் கட்சியே அறிமுகம் செய்தது.

அந்நிகழ்ச்சி நிரலை ஐ.தேசியக் கட்சி இன்றும் நிராகரித்துவிடவும் இல்லை. இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணமான ஏகாதிபத்திய உலகமயமாதலை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் பிடியை ஐ.தேசியக் கட்சி நிராகரிக்காமல், அதற்கு மாற்று பொருளாதார முறையை ஏற்காமல் நாட்டுமக்களை இன்றைய பொருளாதார சுமையிலிருந்து எவ்வாறு மீட்கமுடியும் என்று ஐ.தேசியக் கட்சியால் கூறமுடியுமா?

உலகமயமாதலை எதிர்த்து தேசிய பொருளாதாரத்தை காப்பதில் ஆகக்குறைந்தது மலேசிய பிரதமர் மகதிர் முகமதுவின் நிலைப்பாட்டை ஐ.தேசியக் கட்சி எடுக்குமா?

நாட்டுமக்களையும், வளங்களையும் அழிக்கும் யுத்தத்தினை ஐ.தேசியக் கட்சி எவ்வாறு நிறுத்தப்போகிறது? யுத்தத்திற்கு பெருந்தொகைப் பணம் செலவிடப்படுவதாலும் எமது பொருளாதாரம் பாதிப்படைகிறது. அவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த சமாதான பேச்சுவார்த்தையின் அடிப்படையிலான அர்த்தமுள்ள அரசியல் தீர்வுக்கு ஐ.தேசியக் கட்சி தயாராக இருக்கிறதா? உலகமயமாதலின் பொருளாதார முறைகளை ஏற்றுக் கொண்ட இனப்பிரச்சனை தீர்வுக்கு சரியான நிலைப்பாடு இல்லாத [illegible] இன்றைய பொருளாதார சிக்கலை தீர்க்க முடியாது. நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றின் மூலம் இன்றைய அரசாங்கத்திற்கு பொருளாதாரப் பிரச்சனையையும், இனப்பிரச்சனையையும் தீர்க்க வேண்டுமென அழுத்தம் கொடுக்காலாம். அதன் மக்கள் விரோத நிலைப்பாட்டிற்கு அதனை பதவி விலக்கி தண்டிக்கலாம். ஆனால் இன்றைய அரசிற்கு மாற்றீடு ஐ.தேசியக் கட்சி அரசாங்கமாக இருக்க முடியாது. அதனுடைய பொருளாதார கொள்கைகள், இனப்பிரச்சனை தீர்வு பற்றிய கொள்கைகளுக்கு எதிராகவும் தொடர்ந்து போராட மீண்டும் புதிய பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் யூ.என்.பியைத் தண்டிக்க வேண்டியிருக்கும். ஏனெனில் அதன் கொள்கையால் இன்றைய பொருளாதார சிக்கலிலும், யுத்த நிலையிலும் அர்த்தமுள்ள மாற்றங்களை கொண்டு வர இயலாது.

ஐ.தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு தமிழ் கட்சிகளும், ஜே.வி.பியும் ஆதரவு கொடுத்தாலன்றி வெற்றியடையாது. அது வெற்றியடைந்தால் மக்கள் விரோத பொது ஜன ஐக்கிய முன்னணியை தண்டித்த திருப்தியை கொள்ளமுடியுமேயன்றி, மக்களின் கஷ்டங்களுக்கு தீர்வு

## குடிசன மதிப்பீட்டில் 'மலையகத் தமிழர்' என்று பதிய வலியுறுத்துவோம்.

குடிசனமதிப்பீட்டின் போது இந்திய வம்சாவளித் தமிழர் அனைவரும் 'இந்தியத் தமிழர்' என்றே பதிய வேண்டும் என்று இ.தொ.காவும் பல மலையக அமைப்புகளும் அறிக்கை விட்டுள்ளன. சில மலையகப் படித்தவர்களும் 'இந்தியத் தமிழர்' என்றே பதிய வேண்டும் என்று விரும்புகின்றனர். மலையகத் தமிழ் மக்கள் என்று பதிவு செய்து கொள்ள உத்தியோகபூர்வ அரச ஏற்பாடுகள் இல்லாதபடியால் இலங்கைத்தமிழர்கள் என்று பதியாமல் இந்தியத் தமிழர் என்று பதிய வேண்டும் என்று சொல்வது மேலோட்டமாக தெரிந்தாலும் 'இந்தியத் தமிழர்' என்று பதியும்படி கேட்பதில் உள்நோக்கங்கள் இருக்கின்றன.

இந்தியத் தமிழர் என்ற தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக காட்டினால்தான் அரசியல்ரீதியாக பேரப்பேச்சை தங்களுக்கு சாதகமாக கொள்ள முடியும் என்பது மலையகத் தலைவர்கள் எனப்படுபவர்களின் விருப்பம். இந்திய அரசிடமிருந்து சலுகை பெறும் நோக்கமும் இருக்கிறது. இந்தியத் தமிழர் என்ற இனரீதியான அடையாளத்துக்காக அரசினால் ஒதுக்கப்படும் விகிதாசார சலுகைகளை அனுபவிக்க வேண்டும் என்பது மலையகப் படித்தவர்களின் விருப்பம். இந்திய அரசிடமிருந்து சலுகைகளை பெறலாம் என்ற நப்பாசை.

இலங்கை மலையகத்தமிழர்கள் தங்களை இலங்கைத் தமிழர்களாக பதிவு செய்து கொண்டால் தனியான தேசிய இனம் என்ற அடையாளத்தை நிலைநாட்டிக் கொள்ள முடியாது. அதற்காக 'இந்தியத் தமிழர்' என்று பதிய வேண்டுமா? 'இந்தியர்' என்ற அந்நியப்படுத்தும் அடைமொழியை தூக்கிவிட்டு கடந்த 40 வருடகாலமாக மலையகத்தமிழ்மக்கள் என்ற அடையாளத்தை நிலைநாட்டி வருவதாக நம்பும் பெரும் எண்ணிக்கையிலான மக்களின் விருப்பத்திற்கு மாறாக 'இந்தியத் தமிழர்' என்ற அடையாளத்தை திணிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசின் உத்தியோகபூர்வ ஆவணங்களில் 'இந்தியத் தமிழர்' என்று இருப்பதன் காரணத்தால் அதனை அடையாளமாக கொள்ள வேண்டுமா?

இந்தியர்கள் என்ற அடையாளம் இருக்க வேண்டும் என்பது இந்திய தூதரகத்தினதும், சில இந்திய வர்த்தகர்களினதும் விருப்பம். அதனை ஒரு ஜனநாயகபூர்வ முடிவாக 10 லட்சத்திற்கு மேற்பட்ட மக்களின் மீது அவர்களுக்கு விருப்பமில்லாத பெயர் முத்திரை குத்தமுடியாது.

முழு இந்திய வம்சாவளி தமிழர்களும் மலையகத்தமிழர்கள் என்றே அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு அடிப்படை ஆதாரங்கள் நிறையவே இருக்கின்றன. கடந்த 40 வருடங்களுக்கு மேல் 'மலையகத் தமிழர்' என்ற அடையாளம் கட்டி வளர்க்கப்பட்டுள்ளது.

எனவே குடிசன மதிப்பீடு உட்பட சகல ஆவணங்களிலும் இனரீதியான அடையாளங்கள் பதியப்படுகின்றபோது 'மலையகத்தமிழ்மக்கள்' என்ற இன அடையாளமும் இடம்பெற வேண்டும். மலையகத் தமிழ்மக்களை இலங்கைத்தமிழர்கள் என்று பதியக்கூடாது என்பதில் இருக்கும் நியாயங்கள் இந்தியத் தமிழர் என்று பதியக் கூடாது என்பதிலும் இருக்கிறது.

## நகைக் கடை ஊழியர்களின் மே தினக் கோரிக்கை

கொழும்பு செட்டியார் தெரு நகைக்கடை ஊழியர்கள் வாரம் ஒரு நாள் லீவு வழங்குமாறு இவ்வருட மே தினத்தன்று கோரிக்கை விடுத்துள்ளனர். டொல்பின் நலன்புரி சங்கமும் இன்னும் சில அமைப்புகளும் இணைந்து வாராம் ஒரு நாள் லீவு வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி மே தினத்தன்று செட்டியார் தெருவில் ஊர்வலத்தையும் நடத்தியுள்ளனர்.

இந்தக் கோரிக்கைக்கு செட்டியார் தெருவிலுள்ள பெரும்பாலான நகை வியாபாரிகள் சம்மதம் தெரிவித்துள்ள போதும் சில பெரிய நகைக்கடை உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். வாரம் ஒரு நாளைக்கு கூட கடைகளை மூடி ஊழியர்களுக்கு லீவு கொடுத்தால் வியாபாரம் பாதிக்கப்படும் என்று அந்த சில பெரிய நகைக்கடை வியாபாரிகள் கூறுகின்றனர். கடைகள் காரியாலய ஊழியர்கள் சட்டத்தின் கீழ் ஊழியர்களுக்கு இருக்கும் வாராந்த லீவு பெறும் உரிமையை அவர்கள் மறுக்கிறார்கள். அத்துடன் அந்த லீவு கோரிக்கை முன்வைத்து கடைமுதலாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய டொல்பின் நலன்புரிசங்க உறுப்பினர்களுக்கு ஓரிரண்டு வியாபாரிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். அவர்களுக்கு எதிராக 'வேறுவகையில்' பொலிஸ் முறைப்பாடு செய்து அவர்களை கவனிக்கப் போவதாக தெரிவித்துள்ளனர்.

செட்டியார் தெருவின் வரலாற்றில் ஒரு போதும் செய்யாத மே தின ஊர்வலத்தையும் கூட்டத்தையும் செய்ததுமல்லாமல் லீவு கோரிக்கையையும் முன்வைத்தவர்களை தொடர்ந்து இயங்கவிடாது தடுக்க வேண்டும் என்றும் சில வியாபாரிகள் கூறியுள்ளனர்.

ஆனால் ஊழியர்களின் கோரிக்கை மிகவும் நியாயமானது என்பதுடன் அக்கோரிக்கையை நிறைவேற்றுவதால் வியாபாரிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்பது விஷயமறிந்தவர்களுக்கு புரியும். அவர்களின் சட்டரீதியான உரிமை என்பதுடன் ஊழியர்கள் ஓய்வில்லாமல் வேலை செய்வதால் உடல்ரீதியாகவும், மனோரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். அதனால் அவர்களின் வேலைத்திறன் பாதிக்கப்படுவது மட்டுமன்றி அவர்களின் ஆயுளும் பாதிக்கப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# உர்த்த மாணவர்களையே பாதிக்கும் சர்வதேச தனியார் பாடசாலைகள்

எஸ். எல். எம். அன்ஷார்

தனியார் பாடசாலைகளிலும் சர்வதேச பாடசாலைகள் என்ற பெயர்களுடன் இயங்கும் பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்கள் அவர்களது பாடசாலைகளுக்கான கொடுப்பனவுகளை கொடுக்க முடியாது கஸ்டப்படுகின்றனர். உயர் மேல்மட்ட வர்க்கத்தைச் சேர்ந்த மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்கள் அவர்கள் படிக்கின்ற தனியார், சர்வதேச பாடசாலைகளுக்கான படிப்பு கட்டணங்கள், செலவுகள் என்பவை அதிகரித்துக் கொண்டிருப்பதால் அவற்றை சமாளிக்க முடியாதிருக்கின்றனர்.

உயர்மட்ட வர்க்கத்தினர் அவர்களின் வர்க்க நிலைப்பாட்டின் காரணமாக தனியார் பாடசாலைகளிலும், சர்வதேச பாடசாலைகளிலும் அவர்களின் பிள்ளைகளை படிப்பிக்கின்றனர். இவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவானவர்கள். அரச பாடசாலைகளில் அனுமதி மறுக்கப்பட்ட நிலைமையில் அதிகமானவர்கள் அவர்களது பிள்ளைகளை தனியார் பாடசாலைகளிலும் சர்வதேச பாடசாலைகளிலும் படிப்பிக்கின்றனர். கொழும்பு நகர்புறங்களில் அரச பாடசாலைகளுக்கு அருகில் நிரந்தரமாக வசிபதற்கான அத்தாட்சிகளை அதிகமானவர்களால் காட்டமுடிவதில்லை. அத்துடன் அப்பாடசாலைகளில் கேட்கப்படும் டொனேசன் தொகையையும் கொடுக்க முடிவதில்லை. இவ்வாறான நிலைமையில் நடுத்தரவர்க்கத்தினர் அவர்களது பிள்ளைகளை தனியார் பாடசாலைகளிலும் சர்வதேச பாடசாலைகளிலும் படிப்பிக்கின்றனர். அதிகமான அரச பாடசாலைகளில் படிப்பு தரமும், வசதிகளும் குறைவு என்ற காரணத்தைச் கூறிக்கொண்டும் சிலர் தனியார், சர்வதேச பாடசாலைகளை நாடுகின்றனர். சிலர் சமய வாழ்கை முறையின் அடிப்படையிலும் சில சர்வதேச பாடசாலைகளை நாடியுள்ளனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மிகவும் மோசமான பொருளாதார நிலைமை காரணமாக தனியார் பாடசாலைகளும், சர்வதேச பாடசாலைகளும் கட்டணங்களை உயர்த்தியுள்ளன. அதனை தவிர ஏனைய செலவுகளும் அதிகரித்துள்ளன. இதனால் அப்பாடசாலைகளில் கல்வி கற்கும் நடுத்தர வர்க்க பெற்றோர்கள் சமாளிக்க முடியாது அதிருப்தியுற்றிருக்கின்றனர்.

நம் நாட்டில் இலவசக்கல்வியை இல்லாதொழிக்கும் நோக்கத்துடனேயே தனியார்,சர்வதேச பாடசாலைகள் அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்பட்டன. அரசாங்க கல்விமுறையும் உலக வங்கியின் ஆலோசனையுடன் மாற்றியமைக்கப்பட்டுவருகிறது. உயர்கல்வியும் தனியார் மயமாக்கப்படவேண்டும் என்று உலகவங்கி ஆலோசனை வழங்கியுள்ளது.

சில சர்வதேச கல்லூரிகளைத் தவிர பெயரளவிலேயே அதிகமான சர்வதேச கல்லூரிகள் இயங்கி வருவதாக முறைப்பாடுகள் செய்யப்படுகினறன. மூலைமுடுக்கெல்லாம் முளைத்துள்ள பல சர்வதேச பாடசாலைகளில் வசதிகளும் இல்லை. கல்வித்தரமும் இல்லை என்று கூறப்படுகிறது. சில பாடசாலைகளில் ஆங்கிலமொழியில் தேர்ச்சி பெறாதவர்கள் ஆங்கிலமொழிமூலம் படிப்பிப்பதால் மாணவர்கள் கஸ்டப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சில பாடசாலைகளில் மாணவர்களை சீராக வளர்ப்பதற்குரிய ஒழுக்கம். நடத்தை என்பனவும் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஒரு கல்விமுறையில் அதிகம் பயனடைபவர்களாகவும், அதனைச் சுற்றி வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்களாகவும் இருப்பவர்கள் மத்தியதரத்தினரே. அவர்களின் கல்வி பாதிக்கப்படுவது என்பது நடைமுறையிலுள்ள கல்வி பாதிக்கப்பட்டுவிட்டது. அல்லது பறிக்கப்பட்டுவிட்டது என்பதாகவே இருக்கும். பலவிதமான காரணிகளால் அவரக்களுக்கான இலவசக்கல்வியும் பறிக்கப்பட்டு ஈற்றில் தனியார்கல்வியும் மறுக்கப்படுகிறது. உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் உலகமயமாக்கல் திட்டத்திற்கு இசைவாக மூன்றாம் உலகநாடுகளில் கல்வித்துறையில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்களின் விளைவாகவே நடைபெறுகிறது.

இந்தியாவில் தனியார்துறை கல்வி மிகவும் நிறுவனப்படுத்தப்பட்ட நிலைமையில் இயங்கிவருகிறது. அது ஓரளவிற்காவது இந்திய தேசிய நலனை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அதனையும் சீரழித்து உலகமயமாதலுக்கு இசைவான மாற்றங்களை ஏற்படுத்த உலகவங்கி முயற்சி செய்து வருகிறது. அதற்கு எதிராக இந்திய புத்திஜீவிகள் போராட்ட இயக்கங்களை முன்னெடுத்து வருகின்றனர். இலங்கையில் தனியார் கல்வி ஊக்குவிக்கப்பட்டபோதும் சர்வதேச பாடசாலைகள் அறிமுகம் செய்யப்பட்டபோதும் வலுவான எதிர்ப்பியக்கங்கள் முன்னெடுக்கப்படவில்லை. அதனால் அவை அவைக்கு ஏற்ற திசையில் முன்னேறின. இன்று அவற்றால் ஈர்க்கப்பட்ட மாணவர்களையும், பெற்றோர்களையும் பெரிதும் பாதிக்கின்றன.

# உளவு விமானமும் எசமானும்

பெல்கிறேட் மீது குண்டு வீசப்பட்டபோது சீனத் தூதரகத்தின் மீதும் வீசப்பட்டது. அது அமெரிக்க விமானிகளுக்குத் தவறாக அடையாளங்காட்டப்பட்ட இலக்கு என்று சாட்டுக் கூறப்பட்டது. சம்பவத்துக்கு வருத்தம் தெரிவிக்க அமெரிக்காவுக்கு வெகுகாலம் எடுத்தது. ஆனாலும் தாங்கள் செய்தது தவறு என்பதை அவர்கள் என்றுமே ஏற்கவில்லை. பிற தகவல்களின்படி. இத்தாக்குதல் சீனாவை இலக்கு வைத்தே மேற்கொள்ளப்பட்டது. இந்த வருடம் மார்ச் மாத முடிவில் அமெரிக்க உளவு விமானம் ஒன்று சீன எல்லைக்குள் அத்துமீறிப் புகுந்ததால் சீன விமானங்களால் மறிக்கப்பட்டு தரை இறக்கப்பட்டது. ஆனாலும் அமெரிக்கா தன்மீது தவறு இருப்பதை ஏற்கவில்லை. மாறாகச் சீனாதான் குற்றவாளி என்ற தோரணையில் பேசிய சீன விமானி இறந்ததற்கு வருத்தம் தெரிவிக்கவே நான்கு நாட்களுக்கும் மேல் எடுத்தது. சனாதிபதி புஸ் மிகவும் பிடிவாதமாக அமெரிக்க உளவுகாரர்கள் இருபத்துநான்கு பேரும் உடனே திருப்பி அனுப்பப்படவேண்டும் எனவும் விமானமும் உடனே திருப்பித் தரப்படவேண்டும் எனவும் இல்லாவிட்டால் சீன-அமெரிக்க உறவு பாதிக்கப்படும் எனவும் மிரட்டினார். கடைசியாக சிளின்றன் மன்னிப்புக் கேட்ட பெல்கிறேட் சம்பவம் போலவே இக்கதையும் முடிந்தது. சீனா மீது உளவு விமானத்தை அனுப்பினால் சீன அமெரிக்க உறவு பாதிக்கப்படாது. ஆனால் அந்த விமானம் சீனா வசம் அகப்பட்டால் உறவு பாதிக்கப்படும். இது தான் ஏகாதிபத்தியத் திமிரின் நியாயம். சீனா வலிய நாடு. பிராந்தியத்துக்கு மசியவில்லை. எனவே சீனாவை வலிமையிழக்கச் செய்வதில்தான் அமெரிக்காவின் கவனம் தொடர்ந்தும் இருக்கும்.

# இன்னமும் போர்மூலம் அமைதியா?

விடுதலைப் புலிகள் தங்கள் நான்கு மாத காலப் போர்நிறுத்தத்தை கைவிட்டுவிட்டனர். அது அறிவிக்கப்பட்டுச் சில மணி நேரங்கட்குள் அரசாங்கப் படைகள் தமது புதிய அக்னி கில போர் நடவடிக்கையை அறிவித்து நடைமுறைப்படுத்தி விட்டார்கள். புலிகளின் போர் நிறுத்தக் காலத்தில் அரச படைகளின் கினிஹிர போர் நடவடிக்கைகளின் மூலம், முன்பு இழந்த பிரதேசங்கள் சிலவற்றைப் பிடித்தது போலவே பெரும் வெற்றிகளைப் பெறலாம் என்ற கனவு பொய்த்துவிட்டது போலவே தெரிகிறது.

விடுதலைப் புலிகளின் போர்நிறுத்தம் பலவீனத்தின் விளைவானது என்று பிரசாரம் செய்வது ஒரு விடயம். அதை அப்படியே நம்பிவிடுவது இன்னொரு விடயம். இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தின் போர் முயற்சிகளுக்கு வழங்கி வரும் மறைமுக ஆதரவும் அரசாங்கத்தின் தவறான அணுகுமுறையையே ஊக்குவிக்கின்றது. விடுதலைப் புலிகள் மீது பிரித்தானிய அரசாங்கம் விதித்த தடையை தனது போர் நடவடிக்கைகளுக்கான அங்கிகாரம் என்றே இலங்கை அரசு நம்ப விரும்புகிறது என்று தெரிகிறது.

விடுதலைப் புலிகளின் நான்கு மாதப் போர் நிறுத்தத்தை அரசாங்கம் சத்தியாக்கிரகம் என்று நினைத்ததோ தெரியாது. இன்றுவரை விடுதலைப் புலிகளின் தற்காப்பு நடவடிக்கை ஒவ்வொன்றையும் போர்நிறுத்தத்தின் மீறல் என்றே சொல்லி வந்திருக்கிறது. இது போக, அமைச்சர் கதிர்காமர் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகட்கு அடிப்படையான பரிந்துரைகள் ஆவணத்தைப் பற்றித் திரித்துப் பேசியது கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது. இதைச் சுட்டிக் காட்டிய தென்னிலங்கை ஏடுகள் ஏனோ இந்திய அரசாங்கம் இதன் பின்னணியில் இருப்பதைப் பற்றி அதிகம் பேசவில்லை. நோர்வே அமைதிப் பேச்சுக்களை இயலுமாக்குவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பது இந்தியாவின் நோக்கமாக இருந்துவந்திருக்கிறது. இலங்கை அரசும், இன்று அதையே ஏற்றுக்கொண்டு, அதைத் தன்னுடைய நிலைப்பாடு என்று உரத்துக் கூறி வருகிறது. நோர்வேயின் பங்களிப்பு இன்னவகையில் தான் என்று இப்போதே தீர்மானிக்கக் கூடியநிலையில் இலங்கை அரசோ புலிகளோ இல்லை என்றே தெரிகிறது. ஏனெனில் போர் நிறுத்தம், அதை நடைமுறைப்படுத்தும் முறை, அமைதிப் பேச்சுவார்த்தை, உடன்பாடுகளை இரு தரப்பினரும் தெளிவாக அறிந்து ஏற்பது, தீர்வை நடைமுறைப்படுத்துவது என்பன பல வேறு கட்டங்களில் நடக்க உள்ளவை. இவை ஒரு நாளில் நிறைவேறப் போவதில்லை.

அரசாங்கமும் புலிகளும் சமாதானத்தையும் நியாயமான நிலைக்கக் கூடிய தீர்வையும் பற்றி அந்தரங்க சுத்தியுடன் நடந்து கொள்வார்களே என்றால், நோர்வேயின் பங்களிப்பு குறைந்த பட்ச அளவிலேயே நின்று விடலாம். ஏமாற்றும் மோசடியும் பரஸ்பர அவநம்பிக்கையும் மிக நீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளபோது, நோர்வேயின் பங்களிப்பின் அளவு [illegible] முடியாது.

நோர்வே தவிர்ந்த வேறெந்த நாடும் சமாதான முயற்சிகளில் உதவுமானால் அதை வரவேற்பதாக அரசாங்கம் அறிவித்து அடுத்தடுத்த நாளில் புதிய போர்நடவடிக்கை தொடங்கி இருக்கிறது. இதன் பாடங்கள் என்ன? நோர்வேயை ஓரங்கட்டுவதில் பல வேறு சக்திகள் மும்முரமாக இருந்து வந்துள்ளன. இந்திய அரசாங்கம் இதில் முக்கியமானது. இலங்கைக்குள் ஜனதா விமுக்தி பெரமுன, சிஹல உறுமய இன்னும் பிற தீவிர சிங்களப் பேரினவாதிகளுடைய எதிர்ப்பும் தணியவில்லை. அரசாங்கம் பேரளவில் நோர்வேயின் முயற்சிகளை ஏற்றாலும் அதன் நடைமுறை பெரும் சந்தேகங்களையே கிளப்புகிறது.

இதே வேளை, யூ.என்.பி. தனது பழைய கூத்தை இன்னொருமுறை மேடையேற்ற ஆயத்தமாகி விட்டது. பேச்சுவார்த்தைகட்கும் இந்த ஆட்சிக்கும் யூஎன்.பிக்கும் இடையிலான பிணக்குகளுக்கும் யூஎன்.பி. முடிச்சுப் போட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு பாராளுமன்றத்தில் யூ.என்.பி. நடந்து கொண்ட அருவருப்பான முறை ஒன்றும் புதியதல்ல. 1957 முதல் இது இரண்டு பெரிய கட்சிகளும் ஆடிவரும் நாடகம். எனவே மக்கள் இந்தக் கட்சிகளையோ இனவாதக் கட்சிகளையோ நம்பி இருக்க முடியாது.

# நாலு நடக்கும் உலகிலே

## புத்தம் சரணம் கச் ஆமி

புத்த பிக்கு ஒருவர் ராணுவத்திற் சேரப் போகிற செய்தி படத்துடன் வெளியான போது எனக்குள் ஒரு யோசனை. தன் காவி உடையுடன் தான் அவர் போரிடுவாரா? காவி நிறத்தில் அவருக்குச் சீருடை வழங்கப்படுமா? நாட்டைக் காக்க சிங்கள பௌத்தம் எல்லாரையும் போர்புரியுமாறு மகாநாயக்க தேரர்களே சொல்கிறார்கள். எனவே பெருந் தொகையான பிக்குமாரைக் கொண்ட ஒரு பெரும் படைப்பிரிவை உருவாக்கலாமே? அதற்கு பிக்கு றெஜிமென்ற் அல்ல சங்க றெஜிமென்ற் என்று பேரிடலாம். தெரியாமல் சொல்லி விட்டேன். ஆச்சி எனக்குக் கரி நாக்கு என்று சொல்லுகிறவர். சொன்னமாதிரி நடந்து விடுமோ என்று யோசனையாக இருக்கிறது.

## பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

தமிழ்ச் சங்க மண்டபத்தில் பேராசிரியர் சிவத்தம்பிக்கு இன்னொருமுறை பாராட்டு விழா. அவருக்குப் பாராட்டு விழா புகழுரைகளில் எல்லாம் நம்பிக்கை இல்லை. என்றாலும் அன்பின் ஆணையை மீறாமல் போய் வருவார். இம்முறை விழாவை ஏற்பாடு செய்தவர் வேறு யாருமில்லை. அவருடைய நீண்டகால இரகசிய அபிமானியும் கம்பருக்கு அடுத்தபடியாக மனதிற்குள் அவரையே தமிழ் இலக்கிய மேதையாக உபாசிக்கிற க.வாரிதி. தன்னடக்க மிகுதியால் க.வா. தன்னை வெளிக்காட்டவில்லை. அதை அறிந்ததாகவும் பேராசிரியர் காட்டிக் கொள்ளவில்லை. என்னே பெருந்தன்மை!

## ஆறுமுகம் தொண்டமான்: யாரிடமிருந்து பாதுகாப்பு?

ஆறு மாதங்கள் முன்பு பொலிசாரால் பிடிக்கப்பட்ட ஒரு விடுதலைப்புலி இப்போதுதான் தனது நோக்கம் என்னவென்று சொல்லியிருக்கிறார். அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்குக் குறி வைக்கவே அவர் அனுப்பப்பட்டிருக்கிறதாக அரசாங்கத் தகவல்கள் கூறுகின்றன.

இதற்கும், காட்டிக் கொடுக்கப்பட்ட தொழிலாளர் போராட்டத்துக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்று நம்பலாமா? இது விடுதலைப் புலிகளைக் காட்டி அமைச்சரைக் கட்டுப்படுத்தும் முயற்சியா? அல்லது அமைச்சரின் அரசியல் தேவைக்காகச் செய்யப்பட்ட ஏற்பாடா? அல்லது உண்மையாகவே அமைச்சருடைய உயிருக்கு மிரட்டலா? மிரட்டல் இருந்தால் அனேகமாக அது அவரால் துரோகமிழைக்கப்பட்ட லட்சக் கணக்கான மலையகத் தொழிலாளர்களிடமிருந்து அல்லவா அது முதலில் வர முடியும். ஆனால் நடப்பவற்றைப் பார்த்தால் நாடகக் காட்சிகள் போலல்லவா இருக்கிறது.

## அரசியல் பபூன் பதவிக்கு விண்ணப்பித்தவர்

"புதிய சமதர்மம்" நவசமசமாஜக் கட்சியின் ஏடு. மார்ச் மாதம் அதன் ஆசிரியர் தலையங்கத்தில் ஜனதா விமுக்தி பெரமுனை இன்று பாராளுமன்ற சுகபோகம் வருடியதால் அரசியல் பபூன்களாக மாறியுள்ளனர் என மிகவும் சரியாகவே சொல்லப்பட்டுள்ளது.

நவசமசமாஜக்கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேல் மாகாண சபையின் சபாநாயகராவதற்காக அவர்களுடைய உதவியை நாடிய போதும் தேர்தல் உடன்படிக்கையை நாடி அவர்கள் பின் அலைந்த போதும் அவர்கள் அவரை உதாசீனப்படுத்தியதன் மூலம் அவரும் அவர்கள்போன்ற ஒரு அரசியல் பபூனாகாமல் தடுத்து உதவினார்கள் அல்லவா. அதற்கு நவசமசமாஜக்கட்சி அவர்கட்கு நன்றி சொல்ல வேண்டாமா?

ஜே.வி.பி. போலி இடதுசாரிகள் என்று இப்போது கண்டுபிடித்துள்ள நவசமசமாஜக்கட்சிக்கு இந்த ஞானம் எப்போது வந்தது? புதிய இடதுசாரி முன்னணியைக் குழப்பும்போது நவசமசமாஜக் கட்சியினர் பபூன்களின் எண்ணத்துக்கு ஏற்றபடிதானே கூத்தாடினார்கள். இப்போது ஜே.வி.பி சேர்க்கஸ் பாராளுமன்றத்திற்குள் கூத்தடிக்கப் போய்விட்டது. கலாநிதி கோமாளியாகாவிட்டாலும் முட்டாளாக்கப்பட்டார் என்பது மட்டும் நிச்சயம்.

## டெல்லியில் குரங்குகள்

ஆயிரக்கணக்கான குரங்குகள் மார்ச் மாதம் முதல் டெல்லிக்குள் புகுந்து அட்டகாசம் செய்து வருவதாகத் தகவல்கள் வந்துள்ளன. இவை பழக்கடைகளை மட்டும் இலக்கு வைக்கவில்லை. அலுவலகங்களுள் இருந்து ஆவணங்களையும் எடுத்துக் கிழிக்கின்றன. இன்று போலி ஆயுத ஊழல் சிக்கலில் மாட்டியுள்ள இந்துத்துவ அரசாங்கத்தைக் காக்க அனுமாரே அவரது வானர சேனையை அனுப்பியிருக்கிறாரோ தெரியாது. குரங்குகள் மீது கடும் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாமல் குரங்குகள் பற்றிய இந்து மத நம்பிக்கைகள் தடுக்கின்றன என்றும் கூறப்படுகிறது. என்னவாக இருந்தாலும் டெல்லியில் அட்டகாசம் பண்ணுகிற அதிகார வர்க்கத்தையும் நாட்டை அமெரிக்காவுக்குக் காட்டிக் கொடுக்கிற கும்பலையும்விடக் குரங்ககளால் அதிகம் கெடுதல் இருக்குமா? குரங்குகள் ஒரு போகத்துக்கு வந்து போய் விடும். ஊழல் பெருச்சாளிகள்?

## சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்?

தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் எல்லாமே தமிழ் மக்களுக்காக எதுவும் செய்ய இயலாதவைதான். அவர்கள் என்றுமே மக்களுக்காகப் போராடப் போவதில்லை. வடக்கு கிழக்கில் துன்புறும் மக்கள் மத்தியில் செயற்படவும் போவதில்லை. அவர்கள் வடக்குக் கிழக்குக்குச் சென்று போராட்டங்களை நடத்த வேண்டும் என்றும் பதவிகளை இராஜிநாமா செய்ய வேண்டும் என்று புதிய சமதர்மத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள், உரிமைக்குப் போராடப் போவதாகச் சொல்லி மக்களிடம் வாக்குக் கேட்கவில்லையே. அவர்கள் தங்கள் வழமையான பிழைப்பை நடத்துகிறார்கள். அவர்களுக்கு ஆலோசனை சொல்கிற நவசமசமாஜக் கட்சிக்கு எப்போது பதவி ஆசை கசந்து போனது? இன்னமும் தன் பேருக்குப் பின்னால் ஜே.பி. என்று எழுதித்தான் அக் கட்சித் தலைவர் தன்னை அறிவித்துக்கொள்கிறார்!

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
PUTHIYA POOMI REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA. புதிய பூமி

## உலகப் பாட்டாளி வர்க்கமும் புதிய சர்வதேசியமும்

2001ம் ஆண்டு மே தினம் 115வது மே தினமாகும். இம்முறை பல நாடுகளிலும் மிகவும் புரட்சிகரமான நிலையில் நினைவு கூரப்பட்டுள்ளது. மூன்றாம் உலக நாடுகளில் தார்மிக உரிமை எதுவுமில்லாத முதலாளித்துவ கட்சிகளும், அரசாங்கங்களும் மேதின களியாட்டங்களை நடத்தியுள்ளன. அதேவேளை புரட்சிகர சக்திகளின் மேதின நிகழ்ச்சிகள் மிகவும் காத்திரமாக நடைபெற்றுள்ளன. ஒப்பீட்டளவில் மேற்கு நாடுகளில் தொழிலாளர் வர்க்கம் மிகவும் புரட்சிகரமாக அதன் மேதின நிகழ்வுகளை முன்னெடுத்துள்ளன. அந்நாடுகளில் மேதின ஊர்வலங்களில் கலந்து கொண்ட தொழிலாளர்கள் ஆத்திரமூட்டப்பட்ட நிலையில் பொலிசாருடனும், பாதுகாப்பு படையினருடனும் மோதல்களில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்கு நாடுகளில் தொழிலாளர்கள் உற்பத்தி முகாமைத்துவத்துடன் பங்கெடுப்பதுடன் சுரண்டப்படாத நிலையில் வாழ்வதாக முதலாளித்துவ தொடர்பூடகங்களுடன் பொருளியல் நிபுணர்களும் கூறிவருகின்றனர். தற்போதைய தாராளவாத அரசியல், பொருளாதார பண்பாட்டை ஊக்குவிக்கும் ஏகாதிபத்திய உலகமயமாதலினால் மனிதகுலத்திற்கு ஏற்படுகின்ற நரகங்களை கண்டுணர்ந்து அங்கு தொழிலாளர்கள் தற்போதைய சமூக அமைப்பு முறைக்கு எதிராக போராடுகின்றனர்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோஷலிச அரசுகளின் சரிவுகள் அங்குள்ள தொழிலாளர் வர்க்கத்தின் அனுசரணையுடன் ஏற்படவில்லை. தொழிலாளர் வர்க்க ஏகாதிபத்திய சதிகளினாலே அச்சரிவுகள் ஏற்பட்டன. சோஷலிச நாடுகளிலிருந்த பிற்போக்கு சக்திகளின் துணையுடனேயே அவை நிறைவேறின. அச்சரிவிலிருந்து மீள்வதற்காக அந்நாட்டு தொழிலாளர் விவசாயிகள் மீள்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு அடிப்படையாக இருக்கின்ற உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக நிறுவனம் போன்றவற்றிற்கு எதிராக உலகெங்கும் போராட்டங்கள் நடைபெறுகின்றன. கடந்த வருடமும் இவ்வருடமும் அமெரிக்காவில் நடைபெற்ற உலக வர்த்தக நிறுவன மாநாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து உலகெங்குமிருந்து மக்கள் நடவடிக்கையாளர்கள் அமெரிக்காவுக்கு சென்று ஆர்ப்பாட்டங்களைச் செய்துள்ளனர்.

ஏகாதிபத்திய உலகமயமாக்கல் என்ற பேரில் பன்நாட்டு கம்பெனிகளின் செயற்பாட்டின் மூலம் நாடுகள் மீண்டும் அடிமைப்படுத்தப்படுகின்றன. நேரடியான காலனியாதிக்கத்திலிருந்து விடுபட்டதாக நம்பிக்கொண்டிருந்த நாடுகளுக்கு மீண்டும் சுதந்திர போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது உணர்த்தப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அரசாங்கங்கள் ஒரு புறமும், கட்சிகளும் இயக்கங்களும் ஒரு புறமும் மக்கள் இன்னொரு புறமும் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

பாட்டாளிவர்க்கப் புரட்சிப் போராட்டங்கள் சமூகமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்ற அதேவேளை தொழிற்சங்க இயக்கங்களினூடாக-வும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தேச விடுதலைப் போராட்டங்களும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களும் நடைபெறுகின்றன. அவற்றையெல்-லாம் அடக்கி ஒடுக்குவதற்கு இன்று சர்வதேச ரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்-ளப்படுகின்றன. விடுதலை இயக்கங்களை தடைசெய்வது முதல் 'பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை' என்ற பேரில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் வரை ஏகாதிபத்தியம் நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளது. இந்நிலையில் விடுதலைப்போராட்டங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களுக்கான அடிப்படை கொள்கைகளையும் நடை-முறைகளையும் கொண்டிருக்க வேண்டியதன் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது. விடுதலைப்போராட்டங்களில் ஏகாதிபத்தியங்களிடையேயான முரண்பாடுகளை பாவிப்பது வெறும் தந்திரோபாயமேன்றி மூலோபாயமாக இருக்க முடியாது.

இலங்கையின் இனப்பிரச்சனை கூட இன்று சர்வதேசமயப்படுத்தப்பட்டு விட்டதாக பெரிதும் சந்தோஷப்படுவதற்கில்லை. வெளிநாட்டு சக்திகளின் விருப்பு வெறுப்புக்கு ஏற்பவே இங்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கிறன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்வதும் இந்நதியா இலங்கை அரசுடன் நெருங்கியிருப்பதும் ஏகாதிபத்தியங்களும் மேலாதிக்க சக்திகளும் மக்களின் பக்கம் இருப்பதற்கான எந்தவொரு நியாயப்பாடும் இல்லை என்பதனை உணர்த்தியதற்கான மேலும் சில சந்தர்ப்பங்கள் ஆகின்றன.

போராட்டங்கள் அனைத்தும் மையப்படுத்தப்பட்ட கேந்திரத்தை கொண்டி-ருக்காவிடினும் மையப்பட்ட நோக்கத்தை கொண்டு முன்னெடுக்கப்படுகின்றன. ஏகாதிபத்தியம், முதலாளித்துவம், இனவாதம், பாஸிஸம் போன்றன ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. அவற்றுக்கு பதில் புதிய சர்வதேசியமும், கம்யூனிஸமும், சோஷலிஸமும் என்பது மறுப்பதற்கில்லை. ஏகாதிபத்தியத்தின் அழிவிலேயே முழு மானுடத்தினதும் விடுதலையும் தங்கியிருக்கிறது.

மாமேதை கார்ல்மாக்ஸ் கூறிய சர்வதேசியமே ஏகாதிபத்திய உலகமய-மாதலுக்கு பதிலாகும். அது மீண்டும் மீண்டும் பொய்யென உணர்த்தப்படுகின்றது. உலக பாட்டாளி வர்க்கத்திற்கு முன்னால் கடமைகள் குவிந்து கிடக்கின்றன. உறங்கு நிலையில் இருந்தமையை தயாரிப்பாக கொண்டு முன்னேற முடியும் என்பதற்கு இந்த 115வது மே தினம் நம்பிக்கையூட்டியிருக்கின்றது.

# ஜனதா விமுக்தி பெரமுன : நினைப்பும் மறப்பும

இந்த ஏப்ரல் மாதம் ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) முதற் கிளர்ச்சியின் முப்பதாம் ஆண்டு நிறைவானது. இந்த நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்புமுனையான நிகழ்வின் நினைவு நாளாக ஏப்பரல் கிளர்ச்சி நாள் ஜே.வி.பி.யால் கொண்டாடப்பட்டது. இக் கொண்டாட்டத்தின் போது, கடந்த சில ஆண்டுகளாகவே ஜே.வி.பியின் கூட்டங்களில் காணப்படும் பகட்டும் பாராளுமன்ற அரசியலுக்கே உரிய ஆரவாரமும் வீம்புப் பேச்சும் இம் முறையும் காணப்பட்டன. ஜே.வி.பியின் அரசியல் 1990க்குப் பிறகு ஒரு மாற்றத்தை எதிர்நோக்கியிருந்தது என்பதில் அதிசயம் இல்லை. அந்த மாற்றம் அதன் கடந்த கால அனுபவத்தின் விளைவானது என்பதும் உண்மை. எனினும் ஒருவர் தன் தவறுகளிலிருந்து சரியான பாடங்களைத்தான் கற்க வேண்டும் என்று ஒரு கட்டாயமும் இல்லையே. எனவே ஜே.வி.பியும் அதன் கடந்த கால அரசியலை விமர்சித்துச் சரியான பாதையில் போகும் என்ற நிர்ப்பந்தம் இருக்கவில்லை. இதற்குத் தடையாக இருந்தது எது என்று யோசித்தால் ஜே.வி.பி யின் தலைமையின் சிந்தனையைப் பேரினவாதமும் சிறுமுதலாளி வர்க்க (குட்டி பூர்ஸ்வா) சிந்தனையும் தொடக்கத்திலிருந்தே ஆக்கிரமித்து வந்ததை நாம் காணலாம்.

1977ல் றோகண விஜேவீர சிறையால் விடுவிக்கப்பட்டவுடன் வெளியிட்ட முதலாவது முக்கிய அரசியல் அறிக்கையில் ஜே.வி.பியை ஒரு ட்ரொட்ஸ்கிய அமைப்பாக அறிவித்தார். முன்னாள் சமசமாஜக்கட்சிக்காரரும் பின்னாள் புரட்சிகர சமசமாஜக்கட்சி ஒன்றின் தலைவரும் இன்றைய அரசியல் இல்லாத தொழிற்சங்கவாதியுமான பாலா தம்பு இந்த ட்ரொஸ்கிய உறவுக்குப் பாலம் அமைத்தார். அவர் மூலமாக ஜே.வி.பிக்கு எண்ணிக்கை நிச்சயமற்ற நான்காம் அகிலங்களில் ஒன்று அங்கீகாரம் வழங்கியது. இந்த ட்ரொட்ஸ்கிய ஞானஸ்நானத்தின் வெளிப்பாடாக விஜேவீர இடதுசாரி இயக்கத்திற்குச் சாவுமணி அடிக்கும் முயற்சியில் மும்முரமாகத் தன்னை ஈடுபடுத்தினார்.

1978முதல் 1980வரை சகல இடதுசாரிகளையும் ஸ்ரீ.ல.சு.கட்சியையும் தாக்குவதில் யூ.என்.பியை விட மும்முரமாக உழைத்து தொழிலாளி வர்க்கத்தையும் அதன் போராட்டச் சக்தியையும் நலமடிக்கும் ஏகாதிபத்திய முயற்சிகளுக்கு ஜே.வி.பி. அரிய பங்கை ஆற்றியது.

யூ.என்.பிக்கு அடுத்த அரசியற் கட்சியாக வருகிற நோக்கம் ஜே.வி.பிக்கு இருந்தது. அதைச் சாதிக்க யூ.என்.பியை வலுப்படுத்தும் காரியங்களை அது அறிந்தே செய்தது என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

ஒரு பேரினவாதக் கட்சியாகத் தன்னை அறிவித்துக் கொள்ளாவிட்டாலும் ஜே.வி.பியின் தொடக்க நிலையிலிருந்தே அதனுள் பேரினவாதத்தின் விச வித்துக்கள் ஆழப் புதைந்திருந்தன. அரசியற் தேவைகளை ஒட்டி அவை மலையகத் தமிழருக்கு விரோதமான சிந்தனையாக 1960களிலும் 1970களின் முற்பகுதியிலும் வெளிப்பட்டன. 1980களின் பின் வடக்கு கிழக்குத் தமிழர்கட்கு எதிரான நிலைப்பாடாக அவை விரிந்து படர்ந்தன.

1987ல் இலங்கை-இந்திய உடன்படிக்கையை ஒட்டி, ஜே.வி.பி. தனது பழைய இந்திய விரோதத்தையும் தமிழர் விரோத அரசியலையும் இணைத்து அதன்மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்ற பேராவலும் அதை வெகுசனப் போராட்டத்தன்மையே இல்லாத ஒரு வன்முறை- மிரட்டல்-தனிமனித பயங்கரவாதச் செயல்களின் கலவை மூலம் வெல்லலாம் என்ற தப்புக் கணக்கும் ஜே.வி.-பியை அதன் 1988-89 கால போராட்டத்திற்கும் அதன் விளைவான பேரழிவுக்கும் இட்டுச் சென்றன.

1971 கிளர்ச்சியில் ஜே.வி.பி. வாலிபர்களை நம்பிப் 'புரட்சி' செய்ய நினைத்தது. பாட்டாளி வர்க்கத்தை நிராகரித்தது. வெகுசனப் போராட்டத்துக்குப் பதிலாக அதிரடித்தன்மை கொண்ட கிளர்ச்சியை நம்பியது. மாக்ஸிய லெனினியத்தை மறுத்து அசட்டுத் துணிச்சலையே போராட்ட மார்க்கமாக்கியது. மாக்ஸியத்தை ஆழமாகக் கற்க வேண்டிய தேவையை மட்டுமன்றி வெகுசனப் போராட்ட அனுபவங்கள் மூலம் அறிந்து விருத்தி செய்யவேண்டிய தேவையை நிராகரித்தது. ஐந்து விரிவுரைகளில் மாக்ஸியம் போதித்த பெருமை விஜேவீர தலைமைக்கு உரியது. இந்த ஐந்து விரிவுரைகளில் இரண்டு பச்சையான சிங்களப் பேரினவாத வரலாற்று அறிவும் மலையக மக்கள் மீதான குரோதமும் சார்ந்தன. இந்தவிதமான உபாயங்கள் மூலம் சிங்கள வாலிபர்கள் பலரைக் கவர முடிந்தது.ஆனால் ஒரு வெகுசன இயக்கமாகவோ புரட்சிகர சக்தியாவோ அவர்களை வளர்க்க முடியவில்லை.

ஐந்து விரிவுரைகளில் மாக்ஸியம் போதித்த பெருமை விஜேவீர தலைமைக்கு உரியது. இந்த ஐந்து விரிவுரை-களில் இரண்டு பச்சை-யான சிங்களப் பேரின-வாத வரலாற்று அறிவும் மலையக மக்கள் மீதான குரோதமும் சார்ந்தன.

அரசாங்கம் எதிர்பாராத தருணத்தில் பொலிஸ் நிலையங்களைக் கைப்பற்றி முக்கிய அரசாங்கத் தலைவர்களைச் சிறைப் பிடித்து அரசியல் அதிகாரத்தைப் பிடிப்பதை விட விரிவான போராட்டத் திட்டம் ஜே.வி.பியிடம் இருக்கவில்லை என்பதை ஏப்ரல் 5ம் திகதிக்குப் பின் அவர்கள் வசமான சில பகுதிகளில் அவர்களது நடத்தை பற்றி அவர்களது தலைமையின் அறியாமையின் விலையே ஆகும். எனினும் வெகுசனங்களிடமிருந்து தனிமைப்பட்ட நிலையில் போராடிய ஜே.வி.பி. தோற்றதும் போதாமல் அரச இயந்திரத்தின் கொடிய கரங்களுக்குப் பல ஆயிரம் இளைஞர்களைப் பலியாக்கியது. இந்தப் படுகொலையையும் இராணுவத்தின் கொலைவெறியையும் மிக வன்மையாகக் கண்டித்தோர் மாக்ஸிய-லெனினியவாதிகளே. திரிபுவாதிகளும் சமசமாஜிகளும் அதைக் கண்டிக்கத் தயங்கினார்ககள்.

ஜே.வி.பி. தலைமை 1971 போராட்டத்திலிருந்து பயனுள்ள எதையும் கற்றதாகத் தெரியவில்லை. நீதி விசாரணையின் பின் சிறைத் தண்டனை பெற்ற பல ஜே.வி.பி. தலைவர்கள் (மகிந்த விஜேசேகர போல) ஸ்ரீ.ல.சு. கட்சிக்குத் தாவினர். சிலர் மெல்ல மெல்லத் தாராளவாத அரசியல் வழியாக வந்து முடிவில் (விக்டர் ஐவன் போல) பெரு முதலாளியத்தின் கட்சியான யூ.என்.பியுடன் சமரசம் செய்தார்கள். சிலர் குழுககளாக அமையமுயன்று முடிவில் உதிரிகளாகி அரசியலில் செயலற்றுப் போனார்கள். (லயனல் போபகே போல) மிஞ்சியிருந்த தலைவர்களும் விஜேவீரவிடமிருந்து ஒவ்வொருவராக விலக நேர்ந்தது. இதற்கு காரணம் ஜே.வி.பியிடம் 1980களின் நடுப்பகுதியில் மாக்ஸியம் என்று பாசாங்கு செய்யக் கூட விடயம் இருக்கவில்லை என்பதே. இதன் பின்பு ஜே.வி.பி எப்படியாவது அதிகாரத்தைப் பிடிப்பது என்பதை விட வேறு தெளிவான அரசியல் மார்க்கமற்ற ஒரு குழுவாகவே இயங்கியது.

பாராளுமன்ற இடதுசாரிகளின் பூரணமான சீரழிவும் யூ.என்.பிக்கு எதிரான ஒரு வலிய மாற்றுச் சக்தியாக ஸ்ரீ.ல.சு.கட்சியால் செயற்பட முடியாத சூழ்நிலையும் மாக்ஸிஸ லெனினியச் சக்திகள் ஒன்றிணைந்து செயற்படமுடியாது பலவீனப்பட்டுப் போன நிலைமையும் ஜே.வி.பிக்கு ஒரு அரசியல் வெளியை உருவாக்கின. இந்த வெளியில் ஜே.வி.பி. தனது பேரினவாத சந்தர்ப்பவாத அரசியலை விதைத்து 1988 - 89ல் அதையே அறுவடை செய்தது.

ஜே.வி.பிக்கு தனிமனித பயங்கரவாதம் என்றால் என்ன புரட்சிகர வன்முறை என்றால் என்ன என்ற தெளிவு அன்றும் இருக்கவில்லை. இன்று வரை ஏற்படவும் இல்லை. தங்களுடைய போராட்டங்கள் மக்களால் நிராகரிக்கப்பட்ட காரணத்தை விளங்கிக் கொள்ள இனியும் ஆயுதமேந்திப் போராட இயலாது என்ற நிலையில் பல்கலைக் கழக வளாகங்களுள் அவர்களது குண்டர் அரசியல் மூலம் அதிகாரத்தைத் தக்கவைக்க இயலாத நிலையில் அவர்களுக்குப் பாராளுமன்றத் தேர்தலில் சில இடங்களை வெல்லும் வாய்ப்பு உண்டு என்று தெரிய வந்தது. எனவே புரட்சி அரசியலை மூட்டை கட்டி வைத்துவிட்டுப் புலுடா அரசியலில் முழுமூச்சுடன் இறங்கினார்கள். 1994க்கும் 2000க்கும் இடையில் அவர்களது பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை ஒன்றிலிருந்து பத்தாகியது. இதை எப்படி நூறாக்கி இருநூறாக்கிப் பாராளுமன்ற அதிகாரத்தைப் பிடிக்கலாம் என்பதே இப்போது அவர்களுடைய கணக்கு. அது சரி வருமா என்பது இன்னொரு கதை. சரிவந்தாலும் அதன்பின் என்ன செய்வார்கள் என்று எனக்கோ உங்களுக்கோ தெரியாது. ஏன் அவர்களுக்கே தெரியாது. ஏனென்றால் ஜேவி.பியிடம் இன்றைய சமூக நெருக்கடிக்கு எப்படி முகம் கொடுப்பது என்பது பற்றிய தெளிவு இல்லை. 'எங்களைத் தெரிவு செய்யுங்கள். நாங்கள் எல்லாப் பிரச்சனையையும் தீர்ப்போம் என்பதையே கிளிப்பிள்ளைகள் போல் சொல்லி வருகிறார்கள். அரசாங்கத்தைக் கவிழ்ப்பதில் அவர்கள் யூ.என்.பியுடன் நெருக்கமாக ஒத்துழைக்கிறார்கள். தமிழ்த் தேசிய இனப் பிரச்சனையை மறுப்பதில் சிங்கள உறுமயவை மிஞ்சி நிற்கிறார்கள்.

தொடர்ச்சி பக்கம் 11

படிப்பகம்

www.padippakam.com




# மலையகத் தமிழர் எதிர்நோக்கும் மற்றொரு அபாயம்

19ம் நூற்றாண்டில் காலனித்துவ ஆட்சியாளர்கள் தமது குடியேற்ற நாடுகளில் உருவாக்கிய பெருந்தோட்டங்களில் வேலை செய்ய அழைத்துச் செல்லப்பட்ட இந்தியர்கள் இலங்கை, மலேசியா, பீஜி, மொரிசியஸ், தென்னாபிரிக்கா முதலிய நாடுகளில் குடியேறினர். தமிழகத்துக்கு அண்மையில் உள்ள நாடென்பதாலும் ஆரம்ப காலங்களில் சில பருவகாலங்களில் மட்டுமே தொழிலாளர்கள் தேவைப்பட்டமையாலும் இலங்கையில் இந்தியத் தமிழர்கள் நிரந்தரமாகக் குடியேறிக் கொள்ளவதில் நீண்ட தாமதம் ஏற்பட்டது. 1830-1930 காலப்பகுதிக்கான குடிவரவு குடியகல்வுப் புள்ளி விபரங்கள் தொழிலாளர்கள் இலங்கைக்கு வருவதும் போவதுமாக இருந்ததைச் சுட்டிக்காட்டின. ஆயினும் 1930-1950 காலப்பகுதிக்கான புள்ளி விபரங்கள் இம் மக்களில் கணிசமான தொகையினர் இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டதைக் காட்டின.

இவ்வாறான நிரந்தரமான குடியேற்றம் முற்றாகவே மலையக மாவட்டங்களை மையப்படுத்தியே அமைந்தது. 1930 தொடக்கம் இம்மக்களின் வாக்குரிமைக்காகப் போராடிய இயக்கங்கள் இந் நிரந்தரமான குடியேற்றம் தமிழகத்துடன் கொண்டிருந்த தொடர்புகள் முற்றாக நிறுத்தப்பட்டிருந்த நிலைமை என்ற காரணிகளின் அடிப்படையிலேயே தமது அரசியல் உரிமைகளைக் கோரினர். ஆனால் இப்போராட்டங்கள் நிரந்தரமமாகக் குடியேறி இந் நாட்டையே சொந்த மண்ணாகக் கொண்டிருந்த 10இலட்சம் மக்களுக்கு முழுமையாக அரசியல் உரிமைகளையும் குடியுரிமைகளையும் பெற்றுக் கொடுக்கத் தவறின. 1949ஆம் ஆண்டின் இந்தியர் பாகிஸ்தானியர்களுக்கான குடியுரிமைச் சட்டத்தின் கீழ் குடியரிமை பெற விண்ணப்பித்தவர்கள் தொகை 8இலட்சத்திற்கும் அதிகமாயினும் இறுதியில் 1963ஆம் ஆண்டளவில் 134 000 பேர் மட்டுமே இலங்கைக் குடியுரிமையைப பெற்றனர். பெரும்பாலான இந்தியத் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையில் பிறந்து நிரந்தரமான ஒரு இலங்கைச் சமூகமாக மாறிவிட்ட போதிலும் குடியுரிமை பெற உரித்துடைய சமூகமாகக் கருதப்படவில்லை. குடியுரிமை யில்லாவிடினும் ஒரு குறிப்பட்ட புவியியற் பிரதேசத்தில் -மலையக மாவட்டங்களின் பெருந்தோட்டங்களில் -செறிந்து வாழும் சமூகமாக உருப்பெற்றிருந்த மலையக மக்கள் சமூகம் 1960களிலும் அதன் பின்னரும் 1964, 1970 ஆகிய ஆண்டுகளில் செய்யப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தங்கள் (சிறிமாவோ-சாஸ்திரி சிறிமாவோ- இந்திரா அவற்றைத் தொடர்ந்து இவ்வொப்பந்தங்களை நடைமுறைப்படுத்த உருவாக்கப்பட்ட பாராளுமன்றச் சட்டங்கள் என்பவற்றின் விளைவாக இறுதியாக ஏழு இலட்சம் இந்திய வம்சாவழித் தமிழர்கள் இந்தியா செல்ல நேரிட்டது. இவ்வொப்பந்தங்களைச் செய்த அரசாங்கங்கள் சம்பந்தப்பட்ட மக்களைக் கலந்தாலோசிக்கவில்லை. இந்திய அரசு தனது பழைய உறுதியான இக் கொள்கைகளைக் கைவிட்டு முதன் முறையாக இலங்கை வாழ் இந்தியர்களை ஒப்பந்த ரீதியாக ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தது என்பதெல்லாம் இதனோடு தொடர்புடைய விடயங்களே. மொத்தத்தில் இங்கு வலியுறுத்திக் கூறப்படும் விடயம் 1960களில் இந்திய வம்சாவழித் தமிழர்கள் உருவாகி வந்த ஒரு முக்கிய காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த நடவடிக்கைகள் இந்தியர் சமூகம் பிளவுபடுத்தப்பட்டு ஒரு பிரிவினர் தாயகத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இத்தகைய ஒப்பந்த நடவடிக்கைகள் இந்தியர் சமூகத்தைப் பிளவுபடுத்தியதுடன் இலங்கையில் வாழ்ந்த இந்தியச் சிறுபான்மையினர் தொகை ரீதியாகப் பலவீனப்படுத்தப்பட்டனர். மேலும் இரு தசாப்த கால (ஏறத்தாழ) நாடற்றவர் நிலையில் வாழ்க்கை மேம்பாட்டுக்கான கல்வி பயிற்சி முதலீடு என்பவற்றில் இச் சமூகத்தினர் முழு மனதுடன் ஈடுபடவில்லை. எதிர்காலத்தில் இந்தியா திரும்ப வேண்டியிருக்கும் என்ற அனுமானத்தின் பேரிலேயே முழுச் சமூகமும் சிந்தித்துச் செயலாற்றியது. இந்திய மக்கள் தொகையில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சி ஒரு காலத்தில் தொகையில் இரண்டாவது சிறுபான்மையினராக இருந்த இந்தியத் தமிழர் நான்காவது இடத்துக்கு மாறினர்.

ஒப்பந்தங்களின் ஒரு விளைவாக தொகைரீதியாக ஏற்பட்ட வீழ்ச்சியின் ஒரு முக்கிய விளைவினை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டும். எப்போதுமே ஒரு இனக் குழுவினரின் தொகை கணிசமானதாக அமையும்போது அவர்களுடைய அரசியல் வலிமை கூடுவதுடன் அம்மக்கள் பெரும்பான்மையினருடன் ஒன்று கலந்து விடுவதற்கான வாய்ப்புகள் குறைவு. 1830 முதல் 1980வரை அதிகம் கேட்டிராத இந்த ஒன்று கலக்கும் செய்முறை (Assimilation Process) பற்றி இன்று நாம் அதிகம் கேள்விப்படுகின்றோம். குறிப்பாக காலி, மாத்தறை, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இந்தியத் தமிழர்கள் பெரும்பான்மையினரோடு கலந்துவிடுவர் என்ற கருத்துக்குப் பலமான ஆதாரங்கள் உண்டென அண்மைக்கால ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இருபதாம் நூற்றாண்டில் எமது வரலாற்றினோட்டத்தில் ஏற்பட்ட ஒரு முக்கிய பிரதிகூலமான விளைவாக இதனைக் கருதுதல் வேண்டும்.

இத்ததைய இரண்டறக் கலக்கும் போக்கு இந்திய மக்களின் முழுக் கலாசார அடையாளத்தையும் சிதைத்து விடக்கூடியது. நீண்டகால கலாசாரத்தையும் அதனையிட்டுப் பெருமை கொண்டும் வாழ்ந்த தமிழர்கள் மத்தியில் ஓரளவுக்கேனும் ஏற்பட்டு வரும் இப்போக்கு இலங்கையில் எஞ்சியிருக்கின்ற (12இலட்சம்-



பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

மதிப்பீடு) இந்தியர்களை மேலும் பிளவுபடுத்தி அதனை வலிமை குன்றிய சமூகமாக மாற்றிவிடும் அபாயகரமான இயல்புடையது என்பதை அவையோருக்கு வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

இத்தகைய இரண்டறக் கலப்பு என்னும் உபாயத்துக்கு நாம் துணைபோக முடியாது. இதில் ஒரு முக்கிய விடயம் இன்றைய தீவிர சிங்களவாத இயக்கங்கள் தமிழர்களை இரண்டறக் கலக்கச் செய்து தமிழினத்தை இல்லாதொழிக்கும் ஒரு கொள்கையை முன்வைக்காத நிலையில் சில சூழ்நிலைக் காரணிகளால் இந்தியத் தமிழர்களே இரண்டறக் கலப்பதற்கு ஆயத்தமாகியுள்ளனர் என்பது கரையோர மாவட்ட இந்தியர்களைப் பொறுத்தவரையில் உண்மையேயாகும். வேறுமுறையில் கூறினால் இத்தகைய இரண்டறக் கலந்துவிடும் போக்கு அதிகம் தென்படுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இலங்கை பல இனங்களைக் கொண்ட பன்மைச் சமூகத்தைக் கொண்ட ஒரு நாடு என்று ஏற்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் இப்பிரச்சினை நோக்கப்படல் வேண்டும். இந்த அடிப்படையிலேயே வேலைவாய்ப்புகளில் இனவிகிதாசாரம் அரசியல் யாப்புக்கான 13ஆம் 16ஆம் திருத்தங்கள் என்பன கொண்டுவரப்பட்ட நிலையில் இந்தியத் தமிழர் என்ற இனப்பிரிவும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. வேலை வாய்ப்புக் களில் குடித்தொகை விகிதா சாரத்துக்கு ஏற்ப 5.5வீதம் ஒதுக்கப்பட்டமையும் இதனடிப்படையிலேயே ஆகும். இந்நிலையில் ஏனைய சகல இனத்தவர் போன்று இந்தியத் தமிழர்களும் தமது இன கலாசார அடையாளங்களைப் பேணவும் வளர்க்கவும் உரித்துடையவர்கள்.

மேலும் இரண்டறக் கலப்பதற்கு இடமளிப்பதால் விசேட சலுகைகள் எதனையும் பெற்றுவிட முடியாது. பாமர் (Farmer) என்ற ஆய்வாளர் கூற்றின்படி இரண்டறக் கலந்து பெரும்பான்மையினத்தவராக மாறி விட்டவர்களும் சாதி வேறுபாடுகாளால் பிடிக்கப்பட்டுள்ள சமூக அமைப்பில் பிரதான சமூகநீரோட்டத்துடன் இணைக்கப்படாது ஒரு புதிய சாதியினராக இரண்டாம் நிலையில் வைத்தே கணிக்கப்பட்டனர்.

மலையக அரசியல் தலைவர்கள் கற்றறிவாளர் மற்றும் சமூகத் தலைவர்கள் இவ்விடயத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் என்பதுடன் இவ்வாறான இரண்டறக் கலத்தலின் உண்மை நிலைமை பற்றி அறியப் புதிய ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

மலையக மாவட்டங்களில் குறிப்பாக தென்மேற்குப் பிராந்திய மாவட்டங்களில் எந்த அளவுக்கு இப்போக்கு தென்படுகின்றது?

அண்மைக் காலங்களில் இப்போக்கு விரிவடைந்து செல்கின்றதாயின் அதற்கான காரணங்கள் என்ன?

இரண்டறக் கலந்து அடையாளங்களை இழக்க நேரிடுவதால் மலையக இந்திய சமூகம் எதிர் நோக்கக் கூடிய பாதகமான விளைவுகள் என்ன?

இரண்டறக்கலத்தல் பற்றி மக்கள் மத்தியல் விழிப்புணர்வை ஏற்படுத்த என்ன செய்யலாம்? இப்போக்கினைத் துாண்டும் காரணிகளை எவ்வாறு வலுவிழக்கச் செய்யலாம்?

இதுபோன்ற விடயங்களில் (Themes) ஆய்வுகள் இன்று தேவைப்படுகின்றன.

நன்றி:
துரைவி நினைவலைகள்
(கட்டுரை தொகுப்பு நூல்.)

## மலையக மக்கள் சக்தியின் விலை?

அட்டனில் இ.தொ.கா.ம.ம.மு என்பவற்றுடன் இன்னும் பல சங்கங்களும் சேர்ந்து மலையகத்தில் ஓரணி மேதினத்தை நடத்தின. அதில் மக்களை கலந்து கொள்ளச்செய்வதற்காக வாகனப் போக்குவரத்து சாப்பாடு என்பன இனாமாக வழங்கப்பட்டதுடன் சில இடங்களில் தலா ரூபாய் 100ம் சந்தோசமாகவும் வழங்கப்பட்டுள்ளது. மலையக தொழிற்சங்கங்களுக்குப் பின்னால் இருப்பதாக காட்டப்பட்ட மக்கள் சக்திக்கு விலை இதுதான் என்பது புரிகிறது.

தேர்தல்கள் வந்தால் தோட்டக் கமிட்டி தலைவர்களுக்கு கோட்டாப் பணம் தேர்தல் தினத்தன்று கசிப்பு என்று தொடங்கிய விலைகள் இன்று கூட்டங்களுக்கு ஆள்பிடிக்கவும் காசை இறைக்க வேண்டியிருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் இறைக்கப்படுவதும் மக்களின் பணம் தான்.தொழிலாளர்களின் தொழிற்சங்க சந்தாப்பணம்தான்.

## சிஹல உருமய தலைவர் இந்திய தாசனா?

இந்தியாவுக்கு எதிராக கதைத்தும் எழுதியும் வந்த பௌத்த சிங்கள பேரினவாதிகள் இந்தியாவின் வலைக்குள் விழுந்திருக்கின்றனர். சிஹல உருமயவின் தலைவர் திலக்கருணாா ரட்ண கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்துடன் நெருங்கிய நல்லுறவை வைத்திருப்பதாக விசயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர் மிகவும் கிரமமாக இந்திய தூதரகத்திறகு சென்று வருவதாக பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கை தமிழ்த் தலைவர்களுக்கு பாசாங்கு காட்டும் இந்தியாவின் இந்துத்துவம் பௌத்தத் துவத்துடன் எப்படி கைகோர்த்து நிற்கிறது என்பதை தெரிந்து கொண்டால் இலங்கையின் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு இந்துத்துவம் ஒத்தாசை புரியும். ஒத்தாசை புரியுமென்று நம்பியவர்கள் கைவிடப்பட்டுள்ளதாக இன்னும் ஏற்றுக்கொள்ளாதிருப்பதேன்?

## ஜே.வி.பி.யின் வருத்தம்

மன்னாரில் பொலிஸ்காவலில் இரு தமிழ்ப் பெண்களை வன்கலவிக்கு உட்படுத்தியது உலகின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. அம்னெஸ்ற்றி இன்ற்றர்நாசனல் சனாதிபதி குமாரதுங்கவை உரிய நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தியிருக்கிறார்.

அதேசமயம் ஜனதா விமுக்தி பெரமுனவின் பேச்சாளர் விமல் வீரவன்ஸ இது வருந்தத்தக்க சம்பவம் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு நாம் அவருக்கு நன்றி உடையோமாக இருப்போமாக.

அவர் இது கண்டிக்கத்தக்கது என்றோ குற்றவாளிகள் உடனே தண்டிக்கப்படவேண்டும் என்றோ பொலிஸாரே இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றோ சொல்லவில்லை. ஏன் சொல்ல வேண்டும்?

## டொமினிக் ஜீவா அண்ணாச்சி, டம்பம் எல்லாம் என்னாச்சு?

அண்ணாச்சி டொமினிக் ஜீவா பாரிஸ்வரை போய் அசத்திவிட்டு வந்திருக்கிறார் அல்லவா. தலித்தியச் சிங்கமாக இன்று தன்னை அறிவித்துள்ள இந்தக் காகிதப்பூ இலக்கியவாதிக்கு இப்போது கம்பன் பேர் சொல்லிச் சம்பாதிக்கிற பேர்வழியுடன் நல்ல ஒட்டு.

கம்பன் தான் உலகின் முதலாவது தலித் இலக்கியவாதி என்று இவர் சொல்லுவாரா? அவர் சொல்லுவாரா?தன்னை எந்தக் கொம்பனும் ஒன்றும் பண்ணமுடியாது என்று போகிற இடமெல்லாம் ஜம்பம் பேசுகிற ஜீவா கம்பன் பிசினஸ் முன்னால் கை கட்டி நிற்பது என்ன?

படிப்பகம்

www.padippakam.com



# யாருக்கான கல்வி? எதற்கான கல்வி?

நம்முடைய கல்விமுறை பல மாற்றங்களைக் கண்டுள்ளது. நாம் அறிந்த இன்றைய கல்விமுறை அதாவது பாடசாலைக் கல்விமுறை ஆங்கிலேயர் மூலமாக நம்மை வந்தடைந்தது. தான் கொலனியச் சூழலில் கொலனிய நிருவாகத் தேவைகளை முதன்மைப்படுத்தி உருவான கல்வி முறை கொலனியத்தின் கீழ் ஏற்பட்ட சமூக மாற்றங்களை உள்வாங்கியும் அதன் பின்பான மாற்றங்கட்கு அமையவும் மாற்றங்கட்கு உட்பட்டது.

எனினும் கல்வி புகட்டும் முறை பாடசாலை வகுப்பறை சார்ந்தே பேசப்பட்டாலும் கடந்த இருபது இருபத்தைந்து வருட காலத்திற்குள் நமது பாடசாலைக் கல்வி முறையில் ஏற்பட்டுள்ள சீரழிவு காரணமாக கல்விமுறையில் சீர்திருத்தத்தைப் புகுத்தினாலும் அது எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தும் எனும் நிலைக்கு நாம் வந்துள்ளோம்.

கடந்த ஐம்பது வருடகாலத்திற் கல்விமுறையில் ஏற்பட்ட சில சாதகமான அம்சங்களைக் கவனிப்பில் எடுக்காமல் இன்றைய கல்வி முறையை மதிப்பிடுவது நியாயமாகாது. எல்லோருக்குமான இலவசக்கல்வி என்ற கொள்கையும் பட்டப் படிப்பு வரை அதன் நீடிப்பும் கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்கியது. கட்டாயக் கல்வியும் அதனோடு சேர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டதால் 'தோட்ட முதலாளிகளது வர்க்க நலன் சார்ந்து வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்ட மலையகமும் சில பின்தங்கிய கிராமப் பிரதேசங்களும் போக' அடிப்படையான கல்வி பெருவாரியானவர்கட்கு எட்டியது எனலாம். எழுதவும் வாசிக்கவுமான

இன்று தகவல்யுகம் பற்றியும் கணினியின் முக்கியத்துவம் பற்றியும் நிறையப் பேசப்படுகிறது. கணனிக் கல்விமூலம் வாழ்வில் முன்னேறலாம் என்று பலர் நம்பவைக்கப்பட்டுள்ளனர். கணனிகளின் பயன்பற்றியோ அவற்றின் அவசியம் பற்றியோ நவீன தகவல்வழங்கல் பரிமாறல் வசதிகளின் வலிமை பற்றியோ மாற்றுக்கருத்து ஏதும் இல்லாமலேயே நமது நாட்டில் விருத்தி செய்யப்பட்டு வருகிற கணனி அறிவு நமது நாட்டின் சுயசார்புக்கோ பொருளாதார மேம்பாட்டுக்கோ தொழில் வளர்ச்சிக்கோ உற்பத்திப் பெருக்கத்துக்கோ உதவாது என்று தைரியமாகக் கூற முடியும்.

அறிவை மட்டுமே அடிப்படையாகக் கொண்டால் நம் கல்வி முறை ஆசியாவில் வெற்றிகரமான ஒன்றாகவே கொள்ளலாம்.

கல்வியின் தரத்தைப்பொறுத்தவரை தாய்மொழிக் கல்வி நடைமுறைப்படுத்தப்படும் வரை உயர் கல்விக்குமான வாய்ப்பு நகரம் சார்ந்தும் ஓரளவு வசதி படைத்தும் இருந்தவர்கட்கே எட்டியது எனலாம். எனவே இலவசக்கல்வியுடன் தாய்மொழிக் கல்வி இணைந்த பின்பே பரந்துபட்ட அளவில் தரமான கல்வி நாட்டின் பல பாகங்களையும் எட்டியது என்பது தெளிவு. அதேவேளை நாட்டில் குறிப்பாக கிராமியச் சமூகச் சூழலில் இருந்து வந்த நிலவுடைமைச் சமூக உறவுகள் சமூக அடிப்டையிலும் பொருளாதார அடிப்படையிலும் பிற்பட்ட மக்கள் பிரிவுகள் முழுமையான கல்வி வாய்ப்புகளைப் பெறமுடியாது தடுத்தன. 1956ல் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் அதற்கு ஏதுவாகவிருந்த சமுதாய விழிப்புணர்வும் இடதுசாரிச் சிந்தனைகளது விழிப்புணர்ச்சியுமே பிற்படுத்தப்பட்ட நிலையில் இருந்த மக்களது கல்வி உயர்கல்வி உயர் உத்தியோகங்கட்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தின. எனினும் ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தும் இருந்தன.

நகரங்கட்கும் கிராமங்கட்கும் இருந்து வந்துள்ள பொருளாதார இடைவெளியும் உடலுழைப்புக்கும் அலுவலக வேலைகட்கும்இடையில் இருந்த சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வும் நமது கல்விமுறையின் சமனற்ற வளர்ச்சியை ஊக்குவித்தன. நாட்டின் பொருளாதார வளர்ச்சியின்மையின் நடுவே கல்வி பெற்றோர் தொகையின் வேகமான வளர்ச்சி படித்தோரின் வேலையின்மையையும் தொழில் (குறிப்பாக மருத்துவம் எந்திரவியல்) சார்ந்த கல்விக்கான பெரும் வேண்டுதலை உருவாக்கியது. இதன் பின்னணியிலேயே 1970-71ல் முன்வைக்கப்பட்ட தரப்படுத்தல் முறையையும் இன்றைய ற்யூட்டறிகளின் தோற்றத்தையும் பாடசாலைகளைப் புறமொதுக்குமளவான வளர்ச்சியையும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

1977ல் யு.என்.பி அதிகாரம் வந்த பின்பு தனியார் மயமாக்கல் பொருளாதாரத் துறையில் நேரடியாகவே புகுந்தது. கல்வித்துறையில் அது மறைமுகமாகவே ஊக்குவிக்கப்படது. பல்கலைக்கழக மட்டத்தில் தனியார் மருத்துவக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டுப் பிற மாணவர்களும் ஆசிரியர்களும் பல வேறு தொழிற்றுறைகளில் இருந்தவர்களும் எதிர்த்ததும் ஒத்துழைக்க மறுத்ததும் காரணமாக முடிவுக்கு வந்தது. அதேவேளை நாட்டில் காளான்கள் போல பெருகியுள்ள "சர்வதேசப் பாடசாலைகள" எனப்படும் தனியார் பாடசாலைகள் வசதி படைத்தவர்கட்கும் ஊழல்மிக்க ஆட்சிகளின் கீழ் உருவான புதிய பணக்காரர்கட்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பிவைக்க வசதியான அமைப்புக்களாயின. இத்தகைய பாடசாலைகள் எல்லாவற்றிலும் ஏற்கக்கூடிய கல்வித்தரம் இல்லாவிடினும் நமது கல்விமுறையின் சீரழிவால் சர்வதேசப் பாடசாலைகள் வருமானம் மிக்க தனியார் துறைச் சமூக நிறுவனங்களில் என். ஜி. ஓக்களுக்கு நிகராக நிற்கின்றன.

இவற்றை விட அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் கூட்டு முயற்சியாக இங்கு தனியார் பல்கலைக்கழகங்கள் முளைவிடத் தொடங்கியுள்ளன.

சிங்களமொழிப் பற்றும் பௌத்த மத விழுமியங்களும் பற்றிப் பேசுகிற பெரும்பான்மை இன மேற்தட்டு மாந்தர் தங்கள் குழந்தைகளைத் தனியார் பாடசாலைகளில் ஆங்கிலவாயிலான கல்விக்கும் தொடர்ந்து மேற்படிப்புக்கு



பேராசிரியர். சி. சிவசேகரம்.

வெளிநாடுகட்கும் அனுப்பி வருகின்றனர். புதிதாக உருவாகும் அயல் ஒத்துழைப்புப் பல்கலைக்கழகங்கள் மூலம் அவர்களில் சிலருக்கு அதே விதமான வசதி குறைந்த செலவிற் கிட்டுகிறது. இன்று தாய்மொழிக்கல்வி பற்றிய அக்கறை குறைந்து விட்டது. மருத்துவம் தொழில்நுட்பம் வணிகவியல் நிருவாகம் போன்ற பல துறைகளில் ஆங்கிலத்தின் ஆதிக்கத்துக்குப் பூரண அரச அங்கீகாரம் கிடைத்துள்ளது.

தாய்மொழிமூலம் உயர் கல்வி என்பது ஒரு சடங்காகவும் ஒரு சிலர் சிறிது காசு சம்பாதிக்கும் ஒரு வழியாகவும் முடங்கி விட்டது. ஏனெனில் தொழில்நுட்பத்துறைப் பட்டதாரிகளில் கணிசமானோர் வெளிநாட்டு வேலைகளை நாடுகிறார்கள். நமது நாட்டின் தொழில் விருத்தி குறைவதனால் வெளியார் கம்பனிகளுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ சேர்ந்து வேலை செய்யவேண்டி உள்ளது. உள்நாட்டு உற்பத்தி தேய்கிற அதேவேளை நவீனமாதல் உலகமயமாதல் திறந்த பொருளாதாரம் என்கிற பேர்களில் வெளிநாட்டு ஆதிக்கம் மேலும் வலுப்பெறுகிறது.

நமது கல்விமுறை இந்தச் சீரழிவுக்கு எவ்வாறு முகங்கொடுக்கப்போகிறது என்பது நம் முன்னுள்ள முக்கியமானகேள்வி. இன்று நமக்கு முன்வைக்கப்படுகிற புதிய கல்வித்திட்ட ஆலோசனைகளில் பயனள்ள கருத்துக்கள் சில உள்ளன. ஏட்டுப் படிப்பை விட நடைமுறை சார்ந்த விடயங்கட்கு அழுத்தம் தர வேண்டும் என்பது அவற்றுள் முக்கியமானது. ஆயினும் அதை நடைமுறைப்படுத்துவதற்கான வசதியோ வளங்களோ அனேகமாக உண்மையான நோக்கமோ அரசாங்கத்திடம் இல்லை. அதை நடைமுறைப்படுத்தப் பாடசாலை ஆசிரியர்களை மீள்பயிற்சிக்கு உட்படுத்துகிற தேவை பெரிது. மேலும் பாடசாலைக் கல்விமுறையின் தொடர்ச்சியான உயர்கல்வி தொழிற்பயிற்சிகட்கான திட்டங்கள் என்ன அவை எவ்வாறு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களுடன் பொருந்துகின்றன என்பன பற்றிப் போதிய கவனம் எதுவும் இல்லாமலே கல்வி சீர்திருத்தம் இன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதிலும் முக்கியமாக சர்வதேச நிதி நிறுவனங்கள் இலவசக் கல்விச் செலவு பற்றி விதிக்கும் கட்டுப்பாடுகட்கு அமையவே நமது கல்விக் கொள்கை திசை திருப்பப்படுகிறது என்பது கவனிக்க உகந்தது.

இன்று தகவல்யுகம் பற்றியும் கணினியின் முக்கியத்துவம் பற்றியும் நிறையப் பேசப்படுகிறது. கணனிக் கல்விமூலம் வாழ்வில் முன்னேறலாம் என்று பலர் நம்பவைக்கப்பட்டுள்ளனர். கணனிகளின் பயன்பற்றியோ அவற்றின் அவசியம் பற்றியோ நவீன தகவல்வழங்கல் பரிமாறல் வசதிகளின் வலிமை பற்றியோ மாற்றுக்கருத்து ஏதும் இல்லாமலேயே நமது நாட்டில் விருத்தி செய்யப்பட்டு வருகிற கணனி அறிவு நமது நாட்டின் சுயசார்புக்கோ பொருளாதார மேம்பாட்டுக்கோ தொழில் வளர்ச்சிக்கோ உற்பத்திப் பெருக்கத்துக்கோ உதவாது என்று தைரியமாகக் கூற முடியும்.

கொலனிய யுகத்தின் கல்வியைப் போல கொம்பியூட்டர் யுகத்தின் கல்வியும் இந்த நாட்டின் கல்வியின் பயன் இன்னொரு நாட்டின் கொள்ளைச் சுரண்டற்காரர்களுடைய தேவைகள் சார்ந்தே அமைகிற அபாயம் மிகவும் நிசமானது. இந்தப் பின்னணியில் வைத்து நாம் நமது கல்வி முறையையும் அதன் எதிர்காலத்தையும் பற்றிச் சிந்திப்பது அவசியம். நமது கல்வி வணிக மயமாகிவிட்டது. பரீட்சைப் பெறுபேறுகளே கல்வித் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பண்டங்களாகிவிட்டன. இக் கல்வி மாணவர்களது தனிப்பட்ட மேம்பாட்டுக்கோ சமூக மேம்பாட்டுக்கோ போதியதுமல்ல உகந்ததுமல்ல. இன்றைய பாடசாலைகள் இரண்டு தசாப்தங்கட்கும் முந்திய சமுதாயத் தன்மையுடைய அமைப்புக்களாக இல்லை. சமூக மேம்பாட்டுக்கும் சமூக உணர்வுக்கும் நிறுவனம் என்ற அடிப்படையிலோ அவை ஆற்றும் பங்கு மிகவும் குறுகிவிட்டது. பல்கலைக்கழகக் கல்வியும் அதே விதமாகச் சீர்குலைந்து வருகிறது.

இன்று நமது கல்விமுறை நயமாக நமது நாட்டினதோ அதன் மக்களினதோ நலன்களை முதன்மைப்படுத்துகின்ற ஒன்றல்ல. அது ஒரு நவகொலனிய யுகத்தின் ஏகாதிபத்தியத்தின் எசமானர்களது கட்டளை கட்கமைய இயங்கக்கூடிய சிற்றூழியர்களை உற்பத்தி செய்யும் ஒரு கருவியாக மாறி வருகிறது. இதிலிருந்து நாம் விடுதலை பெறுவது எவ்வாறு என்பதே நம் முன்னுள்ள சவால்.

எல்லாவற்றையும் கேள்விக்குட்படுத்தவும் எதையும் ஆராய்ந்து அறியவும் எந்த நிபுணத்துவத்தையும் எதிர்த்து வாதாடவும் ஆற்றலும் உறுதியும் கொண்ட ஒரு இளம் பரம்பரை உருவாக நாம் என்ன செய்ய முடியும்? நமது கல்வி நிறுவன அமைப்புக்களின் வரையறைகட்குள் இது இயலுமானதாகத் தெரியவில்லை. சமூக ஈடுபாடும் சமூக நீதிக்கான வேட்கையும் அநீதிகட்கெதிரான கோப உணர்வும் விமர்சன மனோபாவமும் சமூக மாற்றத்திற்கான செயலூக்கமும் வெகுசனச் சார்பான நடைமுறையும் மாணவப் பருவத்திலேயே பயிராக்கப்பட வேண்டும்.

எல்லாவற்றையும் கேள்விக்குட்படுத்தவும் எதையும் ஆராய்ந்து அறியவும் எந்த நிபுணத்துவத்தையும் எதிர்த்து வாதாடவும் ஆற்றலும் உறுதியும் கொண்ட ஒரு இளம் பரம்பரை உருவாக நாம் என்ன செய்ய முடியும்? நமது கல்வி நிறுவன அமைப்புக்களின் வரையறைகட்குள் இது இயலுமானதாகத் தெரியவில்லை. சமூக ஈடுபாடும் சமூக நீதிக்கான வேட்கையும் அநீதிகட்கெதிரான கோப உணர்வும் விமர்சன மனோபாவமும் சமூக மாற்றத்திற்கான செயலூக்கமும் வெகுசனச் சார்பான நடைம்முறையும் மாணவப் பருவத்திலேயே பயிராக்கப்பட வேண்டும்.

சமூக உணர்வற்ற கல்விமான்களும் தொழில்வல்லுனர்களும் இயந்திரங்களை விடக் கீழானவர்கள். கல்வித் துறையில் உள்ளவர்கள் இதுபற்றிக் கவனமாகச் சிந்தித்து நமது நாட்டின் எதிர்காலத்துக்கு ஒளியூட்டும் புதிய தலைமுறையை உருவாக்குவது பற்றிச் சிந்திக்க வேண்டும்.. நல்ல செயற்பாடுகள் வகுப்பறைகட்கு உள்ளும் வெளியும் நிகழ்த்தப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# பயங்கரவாதத்தின் முகங்கள்

தேசபக்தன்

1. பயங்கரவாதம் பற்றிய கேள்விகள்

பயங்கரவாதம் பற்றிச் சர்வதேச அரங்கில் நிறையப் பேசப்படுகிறது. பயங்கரவாத ஒழிப்புக்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பயங்கரவாதம் ஒழிகிறபாடாகத் தெரியவில்லை. பயங்கரவாதம் என்றால் என்ன என்பதைச் சரிவரத் தீர்மானிக்காமல் அதன் காரணங்கள் எவை என அறியாமல் ஆயதமேந்திய போராட்டங்களைப் பயங்கரவாதம் என்று கூறமுடியுமா? அப்படியானால் சகல போர்களும் இரண்டு அல்லது மேற்பட்ட தரப்பினரின் பயங்கரவாதமாகி விடுகின்றன அல்லவா? போர்களில் பயங்கரவாதமற்றவை என்று எதையாவது அடையாளங்காண போர்கட்கான சில சட்ட வரம்புகளை வரையறுத்து அவற்றை மீறுவதைப் பயங்கரவாதம் என்று வைத்துக் கொள்ள முடியுமா? இங்கே சில பிரச்சனைகள் எழுகின்றன. விமானத்திலிருந்து குண்டு எறிந்து போரிடுவது சட்டவரம்புகட்கு உட்பட்டதானால் குண்டு எறியும் விமானம் உள்ள ஒரு படையும் வசதி இல்லாத ஒரு படையும் போரிடுவதற்கான விதி எவ்வாறு அமைய முடியும்? சமனற்ற இரு எதிராளிகளின் மோதலுக்கு ஒரு பொது விதியை வகுக்க முடியுமா, ஏற்கப்பட்ட போரின் விதிகளின் மீதும் பயங்கரவாதம் தொடர்பான பல கேள்விகளை எழுப்பலாம்.

ஏற்கப்பட்ட போர் விதிகள் யாரால் இயற்றப்பட்டன? ஆயுத வலிமையும் படை வலிமையும் ஆதிக்கமும் கொண்டவர்களாலேயே இன்றுவரை அவை வகுக்கப்படுகின்றன. எனவே பயங்கரவாதம் என்பது என்ன என்ற கேள்விக்குரிய விடையும் அவர்களால் அவர்களது வசதிக்கு ஏற்பவே வகுக்கப்படுகின்றன.

இக் கட்டுரையில் பயங்கரவாதமாக முதலாளிய அரசுகள் அடையாளங் காட்டுகிற நடவடிக்கைகள் எவை என்று பார்ப்போம். பயங்கரவாதமாக அவை அடையாளங் காண மறுக்கிற நடவடிக்கைகள் சிலவற்றைச் சுருக்கமாக ஆராய்வோம். பின்பு பயங்கவாதம் என்று ஏற்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய முதலாளிய அணுகுமுறையின் முரண்பாடுகளை அவதானிப்போம். அத்துடன் மனித உரிமை வாதிகளின் நிலைப்பாடுகளையும் கணிப்பிலெடுப்போம். இவற்றைப் பயங்கரவாதம் பற்றிய மாக்ஸிய லெனினிய நிலைப்பாட்டுடன் ஒப்பிடுவோம். இறுதியாகப் பயங்கரவாதத்தின் காரணங்களைக் கருத்திற் கொண்டு பயங்கரவாதத்தை உண்மையாகவே முடிவுகட்டுவதற்கான வழிகள் எவை என்று அவதானிப்போம்.

2. அடையாளங் காணப்பட்ட பயங்கரவாதம்

சமூகத்தின் எந்த ஒரு பகுதியினரின் மீதும் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறையோ கொடுமையோ கொலையோ தனிமனிதச் செயலாக உள்ளபோது அது குற்றச் செயலாகக் காணப்படுகிறதே ஒழியப் பயங்கரவாதம் எனப்படுவதில்லை. பயங்கரவாதம் என்ற சொல் சமூகத்தின் ஒரு பிரிவினரைத் தமது நோக்கங்கட்கு இசைய வைக்கவோ தம்மைப் பணியவைக்கவோ ஒரு குழுவினரால் கிரமமாக மேற்கொள்ளப்படும் பலவாறான வன்முறைகளை உள்ளடக்கும். இப்படிப்பட்ட பயங்கரவாதச் செயல்கள் எவை எனத் தெளிவாகவே பல இடங்களிலும் அடையாளங் காணப்பட்டுள்ளது.

ஒரு சமூகப் பிரிவினர்மீது மட்டுமன்றித் தனி மனிதர்மீது பிரயோகிக்கப்படுகிற மிரட்டல், துன்புறுத்தல், ஆட்கடத்தல், சட்டவிரோதமாக மறியலில் வைத்தல், உடைமைகட்குச் சேதம் கொள்ளையடிப்பு, உடல்சார்ந்து மட்டுமல்லாது உள்ளம் சார்ந்த சித்திரவதை, கொலை என்றவாறான செயல்கள் அவை நிகழுகிற சூழ்நிலையின் அடிப்படையில் பயங்கரவாதமாகின்றன. இவ்வாறான வன்செயல்கள் அடுக்கடுக்காக நிகழும் போதும் ஒரு சமூகத்தின் பகுதியோ முழுமையோ அவற்றுக்கு இலக்காகும் போதுமே பயங்கரவாதம் என்ற கருத்தாக்கம் சமூக அளவில் முக்கியத்துவம் பெறுகிறது. தொடர்ந்து செயற்படும் கொள்ளைக்காரர்களும் பயங்கரவாதிகளாக அடையாளங் காணப்பட்டிருக்கின்றனர். ஆனால் இக் கொள்ளையடிப்பு சட்ட விரோதமானதாகவும் சமுதாய அமைப்பிற்கு ஏற்காத சிலவாறான நடைமுறைகளையும் கொணடிருக்கும் போதே பயங்கரவாதமாகக் காணப்படுகிறது.

முன் குறிப்பிட்ட வன்செயல்களிற் பல அரச அதிகாரத்தின் பேரில் மேற்கொள்ளப்படுகிறபோது அவை சட்ட வரையறைக்கு உட்பட்டு நடக்குமாயின் அவை பயங்கரவாதச் செயல்களாகா. மரண தண்டனையோ சிறைத் தண்டனையோ சொத்துக்களின் பறிமுதலோ சட்டப்படி நடைபெறலாம் என நாம் அறிவோம். மட்டுமன்றி நாட்டின் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டும் நோக்கிலும் சட்ட வரம்புகள் மீறப்பட இடமுண்டு.

அவ்வாறான மீறல்கள் அதிகபட்சம் மனித உரிமை மீறல்கள் எனவோ தனிமனிதக் குற்றச் செயல்களாகவோ ஏற்கப்படுகின்றனவே ஒழியப் பயங்கரவாதம் எனப்படுவதில்லை.

இரண்டு நாடுகளிடையே போர் மூளும்போது அங்கு போரின் விதிகட்கு அமைய நடைபெறும் வன்முறைபோக அந்த வரம்புகளை மீறுகிற வன்செயல்கள் பயங்கரவாதம் எனப்படுவதில்லை. அங்கும் மனித உரிமை மீறல்கள் போர் விதிகட்கு முரணான குற்றங்கள் அடிப்படை உரிமை மீறல்கள் என்றவாறாகவே குற்றச் செயல்கள் அடையாளங் காணப்படுகின்றன.

சட்டத்துக்கு உட்பட்டோ உட்படாமலோ அரசாங்கங்கள் மேற்கொள்ளுகிற நடவடிக்கைகள் மட்டுமன்றி அரசாங்கங்களின் சார்பாகவோ அனுசரணையுடனோ மேற்கொள்ளப்படுகிற நடவடிக்கைகளும் பயங்கரவாதமாகக் கருதப்படுவதில்லை. அதே வேளை ஒரு அரசாங்கம் ஒரு அரச விரோதக் குழுவுக்கு எதிராகத் தாக்குதல் மேற்கொள்ளும்போது அதற்கு எதிராகத் தற்காப்பாகவேனும் தொடுக்கிற தாக்குதல் பயங்கரவாதமாகிறது. உதாரணமாக 1971ல் ஜே. வி. பி. யின் ஆயதக் கிளர்ச்சி முற்றாக நசுக்கப்பட்டநிலையிலும் ஜே.வி.பி.யின் தற்காப்பு நடவடிக்கைகள் கூட பயங்கரவாதச் செயல்களாவே காட்டப்பட்டன. ஒரு இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்று அடையாளம் காட்டப்பட்ட பிறகு அதன் எந்தச் செயலையும் பயங்கரவாதம் என்று முத்திரை குத்துவது எளிதாகிவிடுகிறது. அதேவேளை அரசாங்கத்தின் படைகள் நடத்திய பல கொடுமையான செயல்களில் எதுவுமே பயங்கரவாதம் என வருணிக்கப்படவில்லை. இவ்வாறான அணுகுமுறையே 1988- 1989 கால இடைவெளியிலும் கடைப்பிடிக்கப்பட்டதையும் நாம் அறிவோம்.

அரச பயங்கரவாதம் என்ற கருத்தாக்கம் பொதுவாகவே அரசாங்கங்களால் தவிர்க்கப்படுகிறது. எனினும் சில சூழ்நிலைகளில் குறிப்பிட்ட அரசாங்கங்களின் மீது இக் குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது பற்றிப் பின்னர் கவனிப்போம்.

இஸ்ரேல் பலஸ்தீனிய மக்கள் மீது ஆயதப் பிரயோகம் செய்ததையோ தென்னாபிரிக்க வெள்ளை நிறவெறி ஆட்சி நாட்டின் பெரும்பான்மையினர் மீது கட்டவிழ்த்து விட்ட வன்முறையோ பலவாறாகக் கண்டிக்கப்பட்ட சூழ்நிலைகளிலும் அச் செயல்களைப் பயங்கரவாதம் என்று கண்டிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை முன்வரவில்லை. அதே வேளை முதலாளிய நாடுகளின் வற்புறுத்தலின் பேரில் ஒவ்வொரு உண்மையான விடுதலை இயக்கத்தினதும் ஆயுதப் போராட்டம் பயங்கரவாதம் என்று பலவேறு சர்வதேச அரங்குகளில் கண்டிக்கப்பட்டுள்ளது.

எனவே பயங்கரவாதம் என்பது பயங்கரவாதச் செயல்களை வைத்து மட்டுமல்லாமல் அவை யாரால் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் நாம் அவதானிக்கலாம்.

3. கோணல் அளவு கோல்கள்

இந்தோனீசிய சர்வாதிகாரி சுகார்த்தோவின் படைகள் 1965ல் ஐந்து லட்சத்துக்கும் அதிகமானவர்களைக் கொன்று குவித்போது ஆயிரக் கணக்கான கம்யூனிஸ்ட் சந்தேக நபர்களே கொல்லப்பட்டனர் என்று செய்தி அறிவித்த அமெரிக்க ஏடுகள் அனேகமாகப் பத்தாயிரக் கணக்கானோரே கம்பூச்சியாவில் க்மெர்ரூஜ் அமைப்பினராற் கொல்லப்பட்டிருந்தும் அத் தொகையைஇருபது லட்சம் என்று பெருக்கிக் காட்டியது பற்றி உலகப் புகழ் பெற்ற போராசிரியர் நோம் சொம்ஸ்கி சுட்டிக் காட்டியுள்ளார். அதாவது அமெரிக்க சார்பு அரசாங்கம் செய்கிற இன ஒழிப்பு நூற்றில் ஒன்றாகக் குறைத்துக் காட்டப்படும் அதே சமயம் அமெரிக்காவுக்கு ஏற்காத அரசாங்கம் செய்வது நூறு மடங்காக்கப்படும் என்பதை அவர் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

வன்செயல்களின் அளவு எப்படித் திரிக்கப்படுகிறது என்பது ஒருபுறமிருக்க அவை எப்படி வியாக்கியானம் செய்யப்படுகின்றன என்பதும் கவனிக்கத் தக்கது.

உள் நாட்டில் அரச பயங்கரவாதத்தைச் சட்டரீதியாவோ அல்லது நாட்டின் நலன்களின் பேரிலோ நியாயப்படுத்தி அரச விரோதச் செயல்களுக்குப் பயங்கரவாத அடையாளம் இடுவது மட்டுமல்லாது பிற நாடுகளின் விடயத்திலும் முன்னுக்குப் பின் முரணான நிலைப்பாடுகள் கடைப்பிடிக்கப்படுவதை நாம் காணலாம்.

ஒரே வகையான வன்முறைகளும் அவற்றுக்குப் பொறுப்பான இயக்கங்களும் வெவ்வேறு விதமாக அளவிடப்படுவதை நாம் காணலாம். உதாரணமாக சில நாடுகளின் ஆட்சிகளைக் கவிழ்க்க சி. ஐ. ஏ யால் ஒழுங்கு செய்யப்பட்ட வன்முறைகளும் சி. ஐ. ஏ. உதவி பெற்று இயங்குகிற வன்முறை அமைப்புக்களும் அவர்களுடைய பார்வையில் விடுதலைக்கோ சனநாயகத்துக்கோ சர்வாதிகார எதிர்ப்புக்கோ போராடுகிற விடுதலை இயக்கங்கள். இவை சட்ட விரோதமான முறையில் இயங்கலாம். ஏனெனில் இச் சட்டங்கள் கூட அமெரிக்க ஏகாதிபத்தியம் மதிக்காத அதாவது சம்பந்தப் பட்ட சூழலில் மதிக்காத சட்டங்களே. அதே வேளை தென் வியற்நாமின் தேசிய விடுதலை இயக்கம் முதல் குர்திய விடுதலை இயக்கம் வரை எல்லா விடுதலை இயக்கங்களையும் அமெரிக்கா பயங்கரவாத இயக்கங்களாகக் காட்டுகிறது. அதுவுமல்லாமல் இந்த இயக்கங்களைத் தடை செய்யும்படி பிற அரசாங்கங்களையும் வற்புறுத்துகிறது. இது அமெரிகாவுக்கு மட்டுமல்லாமல் பிற மேலாதிக்கச் சக்திகளுக்கும் பொருந்தும்.

சில சமயங்களில் விடுதலைப் போராளிகளாக அடையாளங் காணப்பட்ட சக்திகள் வெகு விரைவிலேயே பயங்கரவாதிகளாக அடையாளம் மாறுகின்றனர். இந்த நிலை விடுதலைப் புலிகள் தொடரபாக இந்திய அரசாங்கத்திற்கும் கொசோவோவில் அமெரிக்காவால் துண்டிவிடப்பட்ட அல்பானிய வன்முறைப் போராளிகட்கும் பொருந்தும். உண்மையில் இந்த இயக்கங்களின் போக்கு மாறுவதோ அரசாங்கங்களின் தன்மை மாறுவதோ இந்த மதிப்பீட்டின் மாற்றத்திற்கான காரணமில்லை. சம்பந்தப்பட்ட அரசாங்கங்களின் உடனடியான தேவைகள் காலத்துடன் மாறுகின்றன. அவ்வளவு தான்.

சில சமயங்களில் ஒரு வல்லரசு ஒரு இயக்கத்தைப் பகிரங்கமாகப் பயங்கரவாத இயக்கம் என்று கண்டித்துக் கொண்டே மறைமுகமாக அதற்கு உதவிகள் வழங்குவதையும் காண்கிறோம். உதாரணமாக அமெரிக்கா அங்கோலாவின் உள்நாட்டுப் போரில் யூனிற்றா இயக்கத்தை நிராகரித்த பின்பும் கொங்கோவின் மொறட்டு ஆட்சி மூலம் யூனிற்றாவுக்கு ஆதரவு வழங்கப்பட்டது. ஒரு இயக்கம் பயங்கரவாத இயக்கமாக அடையாளங் காணப்படுவதும் அது பற்றிய பல்வேறு சட்டசீதியான தடைகளும் பிற பிரகடனங்களும் வெகுசன நுகர்வுக்காகவும் சில அரசியல் வசதிகட்காகவுமே நடைபெறுகின்றன. ஏகாதிபத்திய நாடுகளே பிராந்திய மேலாதிக்கவாதிகளே தங்களுடைய ஆதிக்கத்திற்குத் தடையாக நிற்கிற எந்த இயக்கத்தையும் நசுக்குவதற்குத் தயங்க மாட்டார்கள் என்பதே உண்மை.

எந்தப் பயங்கரவாதத்தை அவர்கள் எதிர்ப்பதாகப் பேசுகிறார்களோ அதே விதமான பயங்கரவாதத்தை அவர்களே தூண்டிவிடுவதை நாம் காணுகிறோம். ஒரு நியாயமான போராட்டத்தின் போது தவிர்க்க முடியாமலோ தற்காப்புக்காகவோ மேற்கொள்ளப்படுகிற வன்முறையைக் கூடப் பயங்கரவாதம் என்று கருதுகிற அரசுகள் வெகுசனங்கட்கு எதிரான கொடுமைகள் அடுக்கடுக்காக நடத்தப்படும்போது அவற்றைக் கண்டு கொள்ளாததையும் அறிகிறோம். நமக்கு இதில் முரண்பாடு தெரியலாம். அவர்களுக்கு எதுவுமே இல்லை. ஏனெனில் பயங்கரவாதம் எது என்பதும் மனித உரிமைகள் எவை என்பதும் அவர்களுடைய நலன்களைக் காப்பாற்றப் பயன்படுகிற பிரசார ஆயதங்களே ஒழிய வேறில்லை.

3. மாக்ஸியமும் பயங்கரவாதமும்

மாக்ஸியவாதிகள் ஆயுதமேந்திய போராட்டத்தை ஏற்கின்றனர். ஆனால் பயங்கரவாதத்தை ஒரு போராட்ட முறையாக ஏற்கவில்லை. மாக்ஸியப் போராட்ட முறை வெகுசனச் சார்பானது. அது மக்களையே பிரதான போராட்டச் சக்தியாகக் கொள்கிறது. எனவே ஆயுதமேந்திய போராட்டம் எனும் போதும் ஆயுதங்களைவிட மக்களே முதன்மை பெறுகின்றனர். வன்முறை முதலிலும் அதிகமாகவும் மக்களை ஒடுக்குகிறவர்களாலேயே பிரயோகிக்கப்படுகிறது. சமுதாய மாற்றத்திற்கான வெகுசனப் போராட்டங்கள் வன்முறை மூலமே ஒடுக்கப்படுகின்றன. இந்தப் பிற்போக்கு வன்முறைக்கு எதிராக மக்கள் ஆயதமேந்திப் போராடுவது தவிர்க்க முடியாத தேவையாகிறது. எனவே எல்லா வன்முறையையும் ஒரே வகையானதாகக் கருதமுடியாது. விடுதலைக்கான போராட்டத்தின் தேவை சார்ந்த வன்முறை புரட்சிகர வன்முறையாகவும் நீதிக்கான யுத்தமாகவும் அடையாளங் காணப்படுகிறது. அதற்கு எதிரானது அடக்குமறையாளர்களது எதிர்ப் புரட்சிகர வன்முறையாகவும் அநீதியான யுத்தமுமாகிறது.

மக்கள் விரோத வன்முறை நேரடியாக வன்செயல்களாக மட்டுமே செயற்பட அவசியமில்லை. மக்களுடைய அத்தியாவசியத் தேவைகளை மறுக்கிற ஒவ்வொரு செயலுமே வன்முறை தான். 1986ல் யாழ்ப்பாண குடாநாட்டின் மக்களுடைய அத்தியாவசிய உணவு மருந்துப் பொருட்களை மறித்த செயலும் இன்று வரை ராணுவக் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கு விதிக்கப்படும் தடைகளும் ஆயுதமேந்திய வன்முறைக்குச் சிறிதும் குறைவானவையல்ல. இவை சாராம்சத்தில் பயங்கரவாதச் செயல்களே. இது போன்ற ஒரு முயற்சி நைஜீரியாவில் 1968ல் பியா.'.ப்ரா மாகாணத்தில் ஈபோ இனத்தவர் தனி நாடு கேட்டபோது மேற்கொள்ளப்பட்டு வெற்றி கண்டது. பட்டினியாலும் நோயாலும் பத்தாயிரக் கணக்கில் மக்கள் சாகடிக்கப்பட்டனர். ஒரு மாக்ஸியவாதியால் இதைப் பயங்கரவாதமாக இல்லாமல் வேறென்னவாகக் கருதமுடியும்?

ஒடுக்கமுறையாளர்கள் பயன்படுத்தும் வன்முறையின் தன்மை அதற்கு எதிராகப் போராடுகிறவர்கள் பயன்படுத்துகிற வன்முறையின் தன்மையைத் தீர்மானிக்கிறது. சில போர்ச் சூழ்நிலைகளில் விடுதலைப் போராட்ட இயக்கங்கள் தவறு செய்கின்றன. வழமையாகத் தனிமனித பயங்கரவாதமாகக் கருதுகிற செயல்கள் நடைபெறலாம். ஆனால் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்படும் சில பயங்கரவாதச் செயல்களை மட்டுமே வைத்து ஒரு போராட்டச் சக்தியைப் பயங்கரவாத இயக்கமாகக் கருத முடியாது. ஒவ்வொரு நடவடிக்கையும் அது நிகழ்வதற்குக் காரணமான சூழ்நிலையில் வைத்துக் கருதப்பட வேண்டும். மாக்ஸியவாதிகள் மக்களே வரலாற்றின் உந்து சக்தி என் நம்புகிறவர்கள். எனவே மக்களை மிரட்டியோ துன்புறுத்தியோ தமது போராட்டத்தை முன்னெடுப்பதை அவர்கள் ஏற்பதில்லை. மக்களுக்கும் அவர்களது உரிமைப் போராட்டங்கட்கும் எதிராக வன்முறை கட்டவிழ்த்துவிடப்படும்போது அவர்கள் கைகளைக் கட்டிக் கொண்டு இருக்க முடியாது. அரச யந்திரத்தின் போர்முறைகளை வெகுசன விடுதலை இயக்கங்கள் கையாள்வது இயலாதது. ஒரு போர்க் களத்தில் இரு சமமற்ற சக்திகள் மோதும்போது பொது விதிகட்கு இடம் இல்லை. கெரில்லாப் போர் முறை இடம்பெயரும் போர்முறை போன்றவை ஆயுத வலிமை குறைந்த ஒரு வெகுசனப் போராட்டச் சக்திக்கு ஏற்றவை. கண்ணி வெடிகள் போன்றவை முடிந்தளவுக்கும் பொது மக்களுக்குத் தீங்கு செய்யாத விதமாவே பயன்படுத்தப்பட வேண்டிய தேவையைப் புரட்சிகரப் போராளிகள் ஏற்கின்றனர்.

ஒரு போர் நடவடிக்கை பயங்கரவாதமா என்பது பற்றித் தீர்மானமாக எதையும் கூற முன்பு அந்த நடவடிக்கை யாரால் எவர்மீது எந்தச் சூழ்நிலையில் எத்தகைய நிர்ப்பந்கங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என்பதை ஒரு மாக்ஸியவாதி கணிப்பிலெடுக்கத் தவறலாகாது.

விறைப்பான முறையில் வாய்ப்பாடுகளாகவும் சூத்திரங்களாகவும் பயங்கரவாதத்தை வரையறுக்க முடியாது. ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைக்காகப் போராடுவது எப்படி என்று கட்டுப்படுத்த ஒடுக்கு முறையாளர்கட்கு அதிகாரம் இல்லை. அதே வேளை ஒரு போராட்டமுறை போராட்டத்தின்நோக்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமைக்கும் போராட்ட வலிமைக்கும் எத்தகைய பயனைத் தருகிறது என்பதைப் பற்றி வெகுசன விடுதலை இயங்கங்கள் விழிப்புடன் இருப்பது அவசியம்.

(தொடர்ச்சி பக்கம் 10இல்)

படிப்பகம்

www.padippakam.com



# கடுமையான சர்வாதிகாரியாக முயற்சி

## அண்ணன் காட்டிய வழி (7)

அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராவார் என்பது ஜெயவர்தன போட்ட கணக்கல்ல. ஆனாலும் அது அவருடைய அரசியல் தேவைகட்கு மிகவும் வசதியாக இருந்தது. யூ. என். பியே சிங்கள மக்களை அடையாளப்படுத்தும் கட்சி என்னும் படிமம் இதனால் வலுப்பெற்றது. பிரதான எதிர்க்கட்சி நாட்டைப் பிரிக்கக் கோருகிற ஒரு தமிழ்க் கட்சி என்பதால் இந்தப் பிரிவினை வாதத்தை முறியடிப்பதற்தாக யூ. என். பி. எடுத்த ஒவ்வொரு நடவடிக்கைக்கும் சிங்களப் பெரும்பான்மைத் தேசியஇனம் ஆதரவு தரவேண்டிய தேவை மேலும் வற்புறுத்தப்பட்டது.

பாராளுமன்றத்தைப் பாவித்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி செய்யக்கூடியது சொற்பமே. பாராளுமன்றத்தைத் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகட்கு எதிரான ஓர் பிரசாரக் களமாகப் பயன்படுத்தியிருக்கலாம். அதை எதிர்க்கட்சித் தலைவர் பதவி கையில் இல்லாமலும் செய்திருக்கலாம். தனிநாடு கோரிக்கையை நம்பகமானதாக்க பேரினவாதிகளின் ஆதிக்கத்தில் இருந்த பாராளுமன்றத்தில் குறைந்தபட்ச பங்களிப்பை மேற்கொள்வது என்று முடிவு செய்திருந்தால் அது கொள்கையில் உறுதியைக் காட்டியிருக்கும்.

தேர்தலுக்கு முன்பு அமிர்தலிங்கம் தலைமையிடம் எதையெல்லாம் தருவதாக ஜயவர்த்தன வாக்களித்தாரோ என்று நிச்சயமில்லை. ஆனால் வாக்களித் எதையும் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கும் விதமாக வழங்க எண்ணியிருக்கவில்லை என்பது நிச்சயம். பல்கலைக்கழக அனுமதியில் செய்யப்பட்ட மாற்றங்கள் சாராம்சத்தில் எதுவிதமான மாற்றமாகவும் அமையவில்லை. யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கட்கு இழைக்கப்பட்ட அநீதி இன்று வரை தொடர்கிறது. கிழக்கு மாகாண வன்னிப் பகுதி மாணவர்கள் இன்றைய அனுமதி முறைமூலம் பெற்ற சலுகைகள் யூ. என். பி. அதிகாரத்திற்கு வரமுன்னரே மாவட்ட அடிப்படை அனுமதி மூலம் கிடைத்தவை தாம். ஆயினும் தகுதியின் அடிப்டையில் மாணவர்களில் ஒரு சாராருக்கு அனுமதி வழங்கப்படும் என்பது மிக அற்ப அளவிலேயே யாழ் மாவட்ட மாணவர்கட்கு உதவியது.

வன்னியிலும் கிழக்கிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் யூ. என். பி. ஆட்சியில் மேலும் முனைப்புடன் மேற்கொள்ளப்படும் என்பது பற்றித் தமிழர்கட்கு அதிகம் ஐயத்துக்கு இடம் வைக்காமலே அரசாங்கம் நடந்து கொண்டது. 1977ம் ஆண்டு நடத்தப்பட்ட இனவாதத் தாக்குதலின் பின்பும் அமிர்தலிங்கம் தலைமை பயனுள்ள பாடம் எதுவும் கற்கவில்லை. யூ. என். பி. அரசாங்கம் சிங்கள எதிர்க்கட்சிகளை ஒன்றொன்றாக நசுக்க எடுத்த திட்டம் பற்றி இந்தத் தலைமை 1978 அளவில் அறிந்தது. ஆனால் யூ. என். பி.யின் இந்தச் சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்கும் முயற்சி பற்றி எண்ணக்கூட மேலும் நாலு ஆண்டுகளாயிற்று.

யூ. என். பி. யின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கு மற்றக் கட்சிகள் ஐக்கியப்படவேண்டிய தேவையை எதிர்க் கட்சித் தலைவர்கள் யாருமே சரிவர உணரவில்லை. திருமதி பண்டாரநாயக்கவுடைய அரசியல் உரிமைகளைப் பறிப்பதற்கு யூ. என்.பி. எடுத்த சட்டவழியிலான முயற்சிக்கு ஜே. வி. பி. 1978ல் ஆதரவு வழங்கியது. 1980ல் பொது வேலை நிறுத்தத்தை முன்னெடுத்த நவசமசமாஜக்கட்சி மற்றக் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறுவது பற்றி அதிகம் கவலை காட்டவில்லை. உண்மையில் அப் போராட்டத்தை திருமதி பண்டாரநாயக்கவின் மீதான பழிவாங்கல் நடவடிக்கைக்கு எதிரான ஒரு போராட்டத்துடன் இணைப்பதை நவசமசமாஜக்கட்சி விரும்பவில்லை. யூ. என். பி. சர்வாதிகாரத்துக்கு எதிராகத் தனித்தனியான வீரசாகசம் பழைய கோபதாபங்களை வைத்துப் பழிவாங்கல் ஒத்துழைப்பை விடச் சுயலாபம் என்றவாறான போக்குகள் யூ. என். பி. அரசுக்கு மிகவும் உதவின.

1978அளவிலேயே யூ. என். பி. ஆட்சி மூலம் தமிழ் மக்களுக்காக எதையும் சாதிக்க முடியாது என்பது தமிழ்த் தலைவர்கட்கு விளங்கியிருக்க வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டம் 1978ல் கொண்டுவரப்பட்டது. மிகவும் சிறியனவான உண்மையான தமிழ்த்தேசியவாத குழுக்களுக்கு எதிராக அப்படியான ஒரு அடக்கு முறைக்கு வசதி செய்யவே அச் சட்டம் உருவானது. இதன் விளைவாகத் தமிழ்த் தீவிரவாதப் போக்குகள் மேலும் வலுப் பெற்றனவே ஒழிய முறியடிக்கப்படவில்லை.

அமிர்தலிங்கம் 1970 - 1977 காலத்தில் ஊக்குவித்து வந்த பல இளைஞர்களுக்கு தமிழீழம் பெற்றுத் தரப்போகிற மாராளுமன்றத் தலைமை பற்றிய சந்தேகங்கள் 1977ம் ஆண்டே எழுந்து விட்டன. 1978ல் இந்தச் சந்தேகங்கள் உறுதிப்பட்டன. த.வி. கூ. தலைமைக்கோ மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலைமை. பாராளுமன்ற வழியிலோ சாத்வீகப் போராட்ட வழியிலோ தமிழீழத்தை வென்றெடுக்க முடியாது என்பதை அவர்கள் அறியாதவர்களல்ல. ஆனால் யூ. என். பி. திட்டமிட்ட முறையில் பேரின்வாத அடக்கு முறையை அதிகப்படுத்தும் ஒரு சூழ்நிலையில் ஒரு வெகுசனப் போராட்டத்தை வழிநடத்த முடியாமலும் ஆயுதமேந்திய கிளர்ச்சியில் முனைப்பாக நின்றோரை வெளி வெளியாகக் கண்டிக்க இயலாமலும் அவர்கள் தவித்தார்கள்.

யூ.என்.பி. யுடன் பேரம் பேச எதையும் வென்றெடுப்பதற்கு த. வி. கூட்டணியிடம் கையில் ஒன்றுமே இருக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் அரசியல் தரகர்களின் உதவியுடன் எதையும் செய்யலாம் என்ற நப்பாசை தோன்றியதில் வியப்பில்லை. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மருமகனான ஏ. ஜே. வில்சன் என்ற அரசியல் விஞ்ஞானப் போராசிரியருக்கும் தமிழ்த் தேசிய வாதத்துக்கம் இருந்த உறவு திருமண உறவு மட்டுமே. இடதுசாரி எதிர்ப்பில் ஆழ ஊறியிருந்த வில்சன் நீண்ட கால யூ. என். பி. விசுவாசியாவார். எஸ் ஜே. வி. செல்வநாயகத்தின் மருமகன் என்பதால் தமிழரசுக் கட்சியின் மேல் மட்டங்களில் அவருக்குத் தொடர்புகள் இருந்தன. 1965ல் தமிழரசுக் கட்சி - யூ. என். பி. ஐக்கியம் ஏற்பட்ட பின்பு இத் தொடர்புகள் சிறிது வலுப்பட்டன. தமிழ் மக்கள் சார்பாக ஜே. ஆர். ஜயவர்தனவுடன் பேரம் பேசும் தகுதி தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து நழுவி இந்த அரசியல் தரகரிடம் போனது. அக் காலத்தில் வில்சன் கனடாவில் குடும்பத்துடன் குடியேறிவிட்டாலும் அரசியல் யாப்பு தொடர்பான விடயங்களில் ஜே. ஆர். ஜயவர்தனவின் ஆலோசகராகச் செயற்பட்டு இடையிடை கொழும்புக்கு வந்து போய்க் கொண்டுமிருந்தார்.

தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்க் காங்கிரஸுக்கும் குடும்ப அரசியல் மரபு கொஞ்சம் இருந்தது. ஜி. ஜி. பொன்மபலத்தின் வாரிசு என்ற முறையில் குமார் பொன்னம்பலம் எதிர்பார்த்தவை கிட்டவில்லை. ஜி. ஜி. பொன்னம்பலத்துடன் தமிழரசுக்கட்சி செய்த சமரசம் தமிழ்க் காங்கிரஸின் செல்வாக்கு அடியோடு மங்கிய நிலையில் நடந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் தங்கள் பதவிகளைத் தக்க வைக்கிற தேவை தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்க் காங்கிஸ் பிரமுகர்கள் சிலருக்கும் இருந்தது. 1970ல் நல்லூர்த் தொகுதியிலும் வட்டுக்கோட்டைத் தொகுதியிலும் வெற்றி பெற்ற அருளம்பலமும் தியாகராஜாவும் அரசாங்கத்துடன் சேர்ந்து விட்டனர். ஆயினும் அத் தொகுதிகள் தமிழ்க் காங்கிரஸ் வழிவந்தவர்கட்கு உரியனவாகிவிட்டன.

1977ல் செல்வநாயகம் இறந்த பிறகு காங்கேசன்துறை தொகுதியைத் தனக்கே பெறுவதற்கு அவரது கடைசி மகன் சந்திரகாசன் மிகவும் விரும்பினார். ஆனால் அமிர்தலிங்கம் அந்த இடத்தைத் தனக்கே எடுக்கும்படி சில தனிப்பட்ட நிர்ப்பந்தங்கள் இருந்தன. 1970ல் வட்டுக்கோட்டை தமிழ்க் காங்கிரஸ் வென்ற தொகுதியாகிவிட்டது. அங்கே அமிர்தலிங்கம் கண்ட தோல்விக்குப் பின் அத் தொகுதியில் நிற்பதற்கு அவர் தயங்கியதிலும் நியாயம் உண்டு. காங்கேசன்துறையில் நின்று வெல்வது தந்தையின் முத்த அரசியல்



மைந்தனாக அவரை முன்னிறுத்தும். போக தனக்குச் சாவாலாக வரக்கூடிய ஒருவருக்கு இடமளிக்க அமிர்தலிங்கம் விரும்பவில்லை. எனவே சந்திகாசனின் பாராளுமன்றக் கனவு நனவாகவில்லை. கூட்டணியுடன் முரண்பட்ட குமார் பொன்னம்பலம் 1977 தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் தோல்வி கண்டார். அமிர்தலிங்கத்துக்குக் கிடைத்த சில தற்காலிக வெற்றிகளில் இவையும் அடங்கும்.

வட்டுக்கோட்டையில் 1977ல் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வென்ற திருநாவுக்கரசு இறந்ததால் அந்த இடத்தை நிரப்பும் தேவை ஏற்பட்டது. இந்த வாய்ப்பையும் சந்திரகாசன் நாடினார். 1979ல் அத் தொகுதி தமிழ்க் காங்கிரஸுக்கோ சந்திரகாசனுக்கோ வழங்கப்படாமல் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கனவானும் முன்னாள் அமைச்சருமான மு.திருச்செல்வத்தின் மகன் நீலன் திருச்செல்வத்துக்கே வழங்கப்பட்டது. இந்த நிலையில் யூ.என். பி. யின் புதிய 1978ம் வருட அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்துவிட்டதால் தேர்தல் இல்லாமலே அந்த வெற்றிடம் நீலன் திருச்செல்வத்தால் நிரப்பப்பட்டது.

தான் விதைத்ததை அமிர்தலிங்கம் அறுவடை செய்யும் காலம் வேகமாக நெருங்கியது. தமிழ் இளைஞர்கட்கெதிரான அரச வன்முறை வலுத்து வந்த அதே வேளை இளைஞர்கள் குழுக்கள் நடுவே தீவிரவாதப் போக்கும் வன்செயல்களும் வலுக்கத் தொடங்கின. கொள்ளைகளும் கொலைகளும் நடைபெற்றன. த.ஐ.வி. கூட்டணித் தலைமையால் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத சூழ் நிலை உருவானது. அவற்றுக்கு அனுதாபமாகத் தோன்றி அரசின் பகைமையைச் சம்பாதிக்கவும் துணிவின்றி அவற்றை விமர்சிக்க நெஞ்சில் உரமும் இன்றித் தடுமாறிய தலைமையால் தமிழ் மக்களுக்கு வழிகாட்ட இயலாது என்ற நிலை தெளிவாகத் தொடங்கியது. இந்த நிலைமையில் எல்லா விமர்சனங்களையும் பகைமையுடன் பார்க்கிற போக்கு அத் தலைமைக்கு உண்டானதில் அதிசயம் இல்லை.

1976ல் தனி நாடுகோரும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையொட்டி யாழ் குடா நாட்டில் த. ஐ. வி. கூட்டணிக்கும் மாக்ஸிய லெனினியவாதிகட்கும் இடையே பல பகுதிகளில் விவாதங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது பலருக்கு நினைவிருக்கலாம். இவ் விவாதங்களின் விளைவாகத் தமிழ்த் தேசியவாதத் தலைமையிடம் பொது மக்கள் பல சங்கடமான கேள்விகளை முன் வைக்கத் தொடங்கினர். . இச் சூழ்நிலையில் இவ்வாறான விவாதங்களை அமிர்தலிங்கம் தடை செய்ய நேர்ந்தது. ஆனால் 1979க்குப் பிற்பட்ட காலத்தில் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தேசியவாதக் கண்ணோட்டத்தில் எழத் தொடங்கிய விமர்சனங்கட்கு முகங் கொடுப்பதிலிருந்து தப்ப அவருக்கு வழி இருக்கவில்லை.

இதனால் அமிர்தலிங்கம் ஒரு கடுமையான சர்வாதிகாரி போல நடக்க முயன்றார். அதற்கு ஆதரவான ஒரு வலிய சக்தி அவருக்குப் பின்னால் இருக்கவில்லை. அந்தச் சூழ்நிலையில் அவருக்க எஞ்சியிருந்த ஒரே வாய்ப்பு யூ. என்.பி. ஆட்சி மூலம் வடக்கு - கிழக்குப் பகுதியில் தமிழ் மக்களுக்கான ஒரு நிர்வாக அலகைப் பெற முடியுமோ என்பதிலேயே தங்கியிருந்தது. தரகர் வில்சனின் தயவில் தளபதி அமிர்தலிங்கம் தங்கியிருக்க நேர்ந்தது. இதன் விளைவுகளை அவரும் அவரது கட்சியும் தமிழினமும் கூட அடுத்தடுத்த ஆண்டுகளில் அனுபவித்தன.

# தமிழர் சமூகமும் பழைமை வாதமும்

இலங்கைத் தமிழரின் இன்றைய துயரநிலை உலகறிந்த ஒன்றே. விபரிக்க முடியாத பன்முக அவலங்கள் தொடர்ந்த போதிலும் அவர்கள் மத்தியில் பழமைவாத நடைமுறைகள் கட்டிறுக்கத்துடன் தான் காணப்படுகின்றன. இப் பழமைவாதம் தமிழர் புலம் பெயர்ந்த நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது என்பது தான் கவனத்திற்குரியதாகும். சடங்குகள் சம்பிரதாயங்கள் கிரிகைகள் கோவில்கள் கும்பாபிசேசங்கள் போன்றன தாராளம். அவற்றில் போட்டி பொறாமை மட்டுமன்றி அவற்றை அமுலாக்க அடாவடித்தனங்கள் கூட இடம் பெறுகின்றன. இவை நம்பிக்கை, பெருமை, அந்தஸ்து, ஆடம்பரம் சார்ந்தவையாகக் கருதப்படுகின்றன. இவற்றை கலாச்சார அடையாளம் பேணல் என்றும் கூறப்படுகிறது. ஆனால் புலம் பெயர்ந்த நாடுகளில் சாதியமும் பெண்ணடிமையும் கொடி கட்டிப் பறப்பதனைப் பார்க்கும் போது இந்த நூற்றாண்டிலும் நமக்கு சமூக விடுதலை கிடைக்குமா என்றே எண்ணத் தோன்றுகின்றது. ஒரு உதாரணத்தைப் பார்க்கலாம். லண்டனில் திருமண சேவை மன்றம் (Goldchain Agency Ltd.) என்றொரு தமிழர் நிறுவனம் இயங்கி வருகின்றது. அதன் வேலை புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் ஆண் பெண் இருபாலாருக்கும் பொருத்தமான சோடிகளை விளம்பரம் மூலம் தேடிக் கொடுப்பதாகும். அதற்கு அறவிடப்படும் தொகை டொலர் கணக்கிலாகும். இது அல்ல இங்கே முக்கியம்.

முக்கியமான விடயம் விளம்பரத்தில் சாதி பற்றிய விபரம் தெளிவுபடுத்திக் கேட்கப்படுவதாகும். இதுபற்றிய ஒரு பக்க விளம்பரம் வீரகேசரி வார இதழில் வெளிவந்துள்ளது. அதில் மொத்தம் 86மணமகன்களுக்கு பெண் கேட்கப்பட்டிருந்தது. அதில் 76பேர் உயர்வேளாளர். 3பேர் பள்ளர். பத்தர் இருவர். கரையார், வண்ணார், கோவியர், செட்டி, நளவர், வேளாளகரையார் கலப்பு என்போர் தலா ஒருவர் என்றவாறு விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் மூன்று மொழிப் பத்திரிகைகளிலும் சிங்களவர் தமிழர் மலையகத் தமிழர் என்போருக்கான திருமணசேவை விளம்பரங்கள் சாதி கேட்கப்படுவது வாராவாரம் வழக்கமானதேயாகும். ஆனால் இப்போது புலம்பெயர்ந்த நாடுகளிலும் அப்பட்டமாகச் சாதி கேட்டு மணமகன் மணமகள் தேடும் விளம்பரங்கள் நிறுவன வடிவில் வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறன. மேற்படி 86 விளம்பரங்களில் ஒன்றில்கூட சாதிப் பெயர் இல்லாத அல்லது சாதி பார்க்கப்பட மாட்டாது என்பதைக் காணமுடியவில்லை. அது மட்டுமல்ல உயர் தொழில் எனக் கொள்ளப்படும் கணனிப் பொறியியலாளர் முதல் மருத்துவமனைத் தொழிலாளி வரை சகல தொழில் செய்வோரும் சாதி கேட்டு நிற்கும் அவலத்தையே அவ் விளம்பரம் எடுத்துக் காட்டி நிற்கிறது. சாதியம் ஒழிந்து வருவதாகக் கூறுவோரை மடையர்கள் என்பதா?அல்லது அறிவிலிகள் என்பதா?

மேலும் அவ் விளம்பரத்தில் உள்ள மற்றொன்று அழகான சிவந்த பெண் தேவை என்பதாகும். ஆழகுக்கும் சிகப்புக்கும் என்ன அர்த்தம். அதாவது அம்மன் போன்ற மூக்கும் முழியுமான பெண் என்பதன் பார்வைதான் என்ன? இவை நிலவுடைம ஆணாதிக்கத்தின் வெளிப்பாடு தான். இவ்வாறு சாதியத்தையும் பெண்ணடிமையையும் பகிரங்கமாவே கோரி நிற்கும் இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமையைச் சுமந்து கொண்டு எவ்வாறு இன விடுதலை, சமூக விடுதலை நோக்கி வீறு நடைபோடமுடியும்.

படிப்பகம்

www.padippakam.com



# நடைபெறும் ஏகாதிபத்தியத்தின் யுத்தத்தை தோற்கடிப்போம்

## 01-05-2001 ஆம் ஆண்டு இராகலையில் நிறைவேற்றப்பட்ட மேதின தீர்மானங்கள்

01- இலங்கையின் பேரினவாத, முதலாளித்துவ சக்திகளால் தொடக்கப்பட்ட தமிழ் இன அழிப்பு யுத்தத்தை இன்று ஏகாதிபத்திய, பிராந்திய, மேலாதிக்க சக்திகளே நடத்துகின்றன. உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது யுத்தத்தை எதிர்ப்பதாகும். யுத்தத்தை எதிர்க்காவிடின் உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பாக முடியாது. இலங்கையின் பேரினவாத. முதலாளித்துவ சக்திகளினூடாக ஏகாதிபத்திய, பிராந்திய மேலாதிக்க சக்திகளால் நடத்தப்படும் தமிழின அழிப்பு யுத்தத்தை எதிர்ப்போம். தோற்கடிப்போம்.

02- இந்நாட்டின் தேசிய இனங்களான சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத்தமிழ் மக்களிடையேயான ஐக்கியத்தை குலைத்து இந்நாட்டு மக்களையும் வளங்களையும் அழித்துவரும் யுத்தத்தை தோற்கடிப்பதன் மூலம் சிங்கள, பௌத்த பேரினவாதத்தை தோற்கடித்து யுத்தத்தை நிறுத்தி இனங்களுக்கிடையே சமத்துவத்தை நிலைநாட்டும் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ், முஸ்லீம், மலையகத்தமிழ் தேசிய இனங்களின் சுயாட்சி, சமத்துவம், சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யும் அரசியல் தீர்வை பேச்சுவார்த்தையின் மூலம் காண்பதற்கு திடசங்கற்பம் கொள்வோம்.

03- மலையகத் தமிழ்மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் அவர்களுக்கான தமிழ்-மொழியுரிமை, சுயாட்சிஉரிமை என்பவற்றை வென்றெடுப்பதன் மூலம் அவர்கள் சிங்கள-மக்களுடன் ஐக்கியமாக வாழும் சூழ்நிலையை ஏற்படுத்துவோம்.

04- உலக வங்கியின் திட்டங்களினால் எமது நாட்டிற்குள் திணிக்கப்பட்டுள்ள ஏகாதிபத்திய உலகமயமாக்கல், தனியார்மயம், தாராளமயம் என்பவற்றால் எமது நாட்டின் பொருளாதாரம் முற்றாக சீரழிக்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் தொழிற்துறைகள், விவசாயம், வர்த்தகம் என்பன மிகவும் பின்னடைந்துள்ளன. தொழிலாளர்களும் விவசாயிகளும், உற்பத்தியாளர்களும், சிறுவர்த்தகர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் அப்பாதிப்புகளிலிருந்து நாட்டையும், மக்களையும் மீட்க உலகமயமாதலை எதிர்ப்போம். எமது சுயபொருளாதாரத்தை அரசாங்கம் • தனியார்-கூட்டுறவு ஆகியவற்றின் பங்களிப்புடன் கட்டி வளர்ப்போம்.

05- தனியார் கம்பெனிகளின் கடுமையான சுரண்டலிலிருந்து தோட்டத்தொழிலாளர்களையும், தோட்டங்களையும் பாதுகாக்க திட்மிட்டு செயற்படுவோம். தோட்டத் தொழிலாளர்களுக்கு 400 ரூபா சம்பள உயர்வுடன் கூடிய புதிய சம்பளத் திட்டத்தையும் தொழில் உரிமைகளையும் உள்ளடக்கிய புதிய கூட்டு ஒப்பந்தத்தை செயய் தோட்டக் கம்பனிகள் முன்வரவேண்டும். இல்லாவிட்டால் தோட்டங்களைவிட்டு தோட்டக் கம்பெனிகள் வெளியேற வெண்டும். அதற்கான செயற்திட்டங்களை முன்வைத்து போராடுவோம்.

06- யூஎன்.பியைப்போன்று பொதுஜனஐக்கிய முன்னணியும் பேரினவாதத்தடன் இரண்டற கலந்துள்ளது ஏகாதிபத்தியத்தின உலகமயமாதலை அதன் நிகழ்ச்சி நிரலாக கொண்டுள்ளது தமிழ்மக்களுக்கு எதிரான யுத்தத்தை சமாதானம் என்பதை உச்சரித்துக்கொண்டே மிகவும் வேகமாகவும் உக்கிரமாகவும் நடத்துகிறது. அதனால் அமெரிக்கா, பிரிட்டிஸ், பிரான்ஸ் போன்ற ஏகாதிபத்திய சக்திகளினதும் இந்தியா போன்ற பிராந்திய மேலாதிக்க சக்திகளினதும் பிடிக்குள் நாட்டையும், மக்களையும் இறுக்கியுள்ளது. பல்தேசிய கம்பெனிகள் எமது நாட்டின் வளங்களை கொள்ளை அடிப்பதுடன் அவற்றின் ஏகாதிபத்திய வேலைத்திட்டங்களை விஸ்த்தரித்து வருகின்றன. அதனால் நாட்டின் அரசியல், பொருளாதாரம் மட்டுமன்றி எமது நாட்டின் தேசிய இனங்களின் தன்னடையாளங்கள் தனித்துவங்கள், பண்பாடுகள் பாதிக்கப்பட்டு வருகின்றன. இதனால் யூ.என்.பிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் எதிராகவும் போலி இடதுசாரி வேடமிட்டுள்ள ஜே.வி.பிக்கு எதிராகவும் தொழிலாளர்கள், விவசாயிகளினதும், சகல தேசிய இனங்களினதும் அபிலாசைகளை முன்னெடுக்கும் புதிய மக்கள் தலைமையை கட்டி-வளர்ப்போம். மலையகத் தமிழ்மக்களிடையே இருக்கின்ற மக்கள் விரோத யூ.என்.பிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடனும் ஒட்டிக்கொண்டிருக்கும் தொழிற்சங்க, பாராளுமன்ற தலைமைகளையும், இலங்கை தமிழ்மக்களிடையேயும் முஸ்லீம் மக்களிடையேயும் இருக்கும் யூ.என்.பி. பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பு, நேர்டியாவோ மறைமுகமாகவோ, ஏகாதிபத்திய, மேலாதிக்க சக்திகளுடன் இணைந்திருக்கும் சக்திகளை நிராகரிப்போம். இம்மக்களிடையே புதிய மக்கள் தலைமையை கட்டி வளர்ப்போம்.

07- நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ நடைமுறைகளால் மட்டுமன்றி தற்போதைய ஏகாதிபத்திய உலகமயமாதலின் கீழும் சகல துறைகளிலும் பெண்கள் மிகவும் கேவலமாக நடத்தப்படுகின்றனர். பெருந்தோட்டத்துறையை சேர்ந்த பெண்களும், ஆடை-தொழிற்சாலை சேர்ந்த பெண்களும் ஒப்பீட்டளவில் மோசமமாக சுரண்டப்படுகின்றனர். பெருந்தோட்டப் பெண்கள் பாலியல்ரீதியாக மட்டுமன்றி சம்பளம், வேலைநிபந்தனைகளாலும். இனரீதியாவும் மோசமாக அடக்கப்படுகினறனர். சாதீயம் போன்ற சமூகக் கொடுமைகளுக்கும் முகம் கொடுக்கின்றனர். அவரக்ளின் விடுதலைக்காகவும் விமோசனத்திற்காகவும் போராடுவோம்.

08- தொழிலாளர்கள், விவசாயிகள், தேசியஇனங்களின் விடுதலை, அபிவிருத்தி சமத்துவம் என்பவற்றை அடிப்படையாகக்கொண்ட இலங்கையின் சகல மக்களினதும் முற்போக்கான தனித்துவம். தன்னையடையாளங்கள் என்பவற்றை பேணுவதுடன் புதிய மக்கள் பண்பாட்டை கட்டிவளர்ப்போம்.

09- விஞ்ஞனம், கணணி. தொழில்நுட்பம் போன்ற பெயர்களில் ஊடுருவும் ஏகாதிபத்திய போலித்தனங்களையும் மக்கள் விரோத நிகழ்ச்சி நிரல்களை அம்பலப்படுத்துவோம். உழைக்கும் மக்களும் சகல அடக்கப்பட்ட மக்களும் சமத்துவமான உரிமைகளை அனுபவிக்கும் பூரணத்துவமான மனிதவாழ்க்கையை உறுதிசெய்வதற்கான புதிய விஞ்ஞான, கல்விமுறைகளை வகுத்து முன்னேற்றுவோம்.

10- உலக நாடுகளில் தனித்தனியாவும் கூட்டாகவும் இடம்பெறும் உலகமயமாக்கலுக்கு எதிரான போராட்டங்களுக்கும் தேசிய விடுதலை, இனவிடுதலை, தொழிலாளர் வர்க்க விடுதலை போராட்டங்களுக்கு எமது ஒத்துழைப்பை வழங்குவோம். அவற்றின் பகுதியாக எமது போராட்டங்களை முன்னெடுப்போம்.

11- யுத்தத்தினாலும் பேரினவாத நிகழ்ச்சி நிரலின் ஏனைய நடவடிக்கைகளாலும் இந்நாட்டில தமிழ்.முஸ்லீம், மலையகத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளுகின்ற இனஒடுக்கல்களையும், அடக்குமுறைகளையும் எதிர்ப்படுடன் கண்டிக்கிறோம். கைதுகள், சோதனைகள், தடுப்புக்காவல் என்ற பேரில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதையும் தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதைதயும் கண்டிக்கிறோம். நாடு, இறைமை என்ற போலிக் கூப்பாடுகளினால் அப்பாவி சிங்கள இளைஞர்கள் யுத்தகளத்திற்கு அனுப்பப்பட்டு பலி கொடுக்கப்படுவதையும் கண்டிக்கிறோம். அவசரகாலச் சட்ட விதிகள், பயங்கரவாத தடைச்சட்டம் என்பவற்றின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களாக தடுத்து வைக்கபபட்டிருக்கம் தமிழ், மலையகத் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய வேளண்டும் என்பதை அரசியல் கோரிக்கையாக முன்னெடுப்போம்.

## பழைய குருடி கதவைத் திறடி

பேரினவாத அரசியலுக்கு முகங்கொடுத்தே உருவானது தமிழரசுக் கட்சி. ஆனால் 1965ல் நாற்பத்தேழாம் ஆண்டில் எந்த யூ.என்.பி. மலையக மக்களை நாடற்றோராக்கியது என்று சினந்து தனிக்கட்சி தொடங்கினார்களோ அதே யூ.என்.பியுடன் கூட்டாளிகளாகினார்கள்.

1977முதல் 1983வரை யூ.என்.பி யிடம்பட்ட அவமானம் தமிழரசுக்கட்சியின் மறு அவதாரமான த.வி.கூட்டணிக்கு மறந்து போனதோ அல்லது சுரணைகெட்டுப் போனதோ தெரியவில்லை. மறுபடியும் யூ.என்.பியுடன் நேச உறவுக்கான முயற்சிகளில் கூட்டணி முனைப்பாகி உள்ளது. இந்த விதமான அரசியல் பேரத்தின் நோக்கம் என்ன? யூ.என்.பியை அதிகாரத்துக்கு மீட்டு யூ.என்.பியிடம் சலுகைகைகளை வாங்கலாம் என்ற கனவா?

தமிழ் மக்களின் எதிர்காலம் பேரினவாத அரசியலிலிருந்து விலகி நின்று வெகுசனப் போராட்டங்களை நடத்துவதிலேயே தங்கியுள்ளது. அதற்கு இன்றைய பாராளுமன்றத் தமிழ்க் கட்சிகளில் எதுவுமே ஆயத்தமில்லை. ஏனென்றால் அவர்களுக்குத் தெரிந்த அரசியல் அவ்வளவும் தான்.

## மக்கள் சேவையாளருக்கு அஞ்சலி

குரும்பசிட்டி இடம்பெயர்ந்தோர் நலன்காப்பு கழகத்தின் தலைவரும் வலிவடக்கு இடம்பெயர்ந்தோர் சங்க தலைவருமான திரு.பொ. சுப்பிரமணியம் மார்ச் மாதம் 26ஆம் திகதி காலமானார்.

புதிய ஜனநாயக கட்சியின் தலைமையில் நடைபெற்ற வலிவடக்கு காணி சுவீகரிப்புக்கு எதிரான போராட்டங்களில் முன்னணியில் கலந்து கொண்டார்.

கடந்த வருடம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தேசியப்பட்டியலில் புதியஜனநாயக கட்சியின் அபேட்சகராக பொ. சுப்பிரமணியம் அவர்கள் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கணக்காய்வாளரான அவரின் பொதுமக்கள் சேவை, போராட்ட வாழ்க்கை என்பவற்றின் அனுபவங்கள் பெறுமதியானவை.

# தமிழ் மக்களின் போராட்ட வரலாறு மறுபரிசீலனை செய்யப்படவேண்டும்

யாழ் மே தினக் கூட்டத்தில் தோழர் சி.கா.செந்திவேல்

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா ஒருபோதும் நீதி வழங்கப் போவதில்லை.பதிலாக இலங்கைமீது ஆதிக்கம் செலுத்துவதிலேயே இந்தியா கவனமாக இருக்கிறது. இந்தியா இலங்கை தமிழர்களுக்கு இழைத்த அநீதியை, துரோகத்தை ஒருபோதும் மறக்கமுடியாது. 1987 தொடக்கம் 1990வரை இந்தியப்படைகள் எமது மண்ணில் நடத்திய கொடூரத்தை நினைத்துப் பார்க்கவேண்டும். எமது தமிழ்த் தலைவர்களும் இந்தியா எமது தாய் நாடு என்ற நம்பிக்கையுடனும் இந்தியா ஒருபோதும் எம்மை கைவிடாது என்ற எதிர்பார்ப்புடனும் இருந்தனர். இந்தியா எமக்கு தமிழீழத்தை பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையுடன் இந்தியாவில் தஞ்சமடைந்திருந்த ஈழவேந்தன் விரட்டியடிக்கப்பட்டார். தென்னிலங்கையில் சிஹல உறுமய, வீரவிதான இயக்கங்கள் இந்தியாவின் ஆதரவுடன் செயறபட்டு வருகின்றன. நோர்வேயின் மத்தியத்துவத்துடன் இடம்பெறுவதாக பல முயற்சிகளை எடுத்துவருவது தெரிந்ததே.அம் முயற்சிகளைக் குழப்பி அல்லது இந்தியாவுக்கு ஏற்றவாறு திசைதிருப்பி இலங்கையில் இந்தியா அதன் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சிக்கிறது. ஏற்கனவே தமிழ் இயக்ககங்களின் உதவியுடன் ஆதிக்கத்தை நிலைநாட்ட எடுத்த இந்தியாவின் முயற்சிகள் ஈடேறவில்லை.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற புதிய ஜனநாயக கட்சியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவு சங்க தலைமை மண்டபத்தில் புதிய ஜனநாயக கட்சியின் வடபிரதேச செயலாளர் தோழர் க.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நவலங்கா தொழிலாளர் சங்க பிரதிநிதி தோழர் கா.பஞ்சலிங்கம், தாயகம் ஆசிரியர் க.தணிகாசலம், எஸ்.முருகேசு, கல்வயல் குமாரசாமி, எஸ். தவராசா, பசுபதி, இரத்தினம், செல்வராசா உட்பட பல தோழர்கள் உரையாற்றினார்கள்.

யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, சுயநிர்ணயஉரிமை போன்றவற்றை வலியுறுத்தி நடைபெற்ற மேற்படி மேதினக் கூட்டத்தில் சி.கா.செந்திவேல் மேலும் தெரிவித்ததாவது.

அமெரிக்காவையோ, பிரித்தானியாவையோ, இந்தியாவையோ நம்பி எமது விடுதலை போராட்டத்தை நாம் நடத்த முடியாது. அப்படி செய்தால் அவர்களின் சொற்படியே நாம் நடக்கவேண்டிவரும். கடந்த 20 வருடங்களாக சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் வரலாறு பற்றி எழுதப்படவேண்டும். அதற்கு தமிழர்கள் மத்தியில் பரந்தளவிலான வெகுஜன எழுச்சி ஏற்படவேண்டும். விவசாய, தொழிலாளி மக்கள் அனைவரும் ஐக்கியப்படவேண்டும். சிங்கள மக்கள் மத்தியில் எமது நியாயமான உரிமைகள் பற்றி தெளிவுபடுத்தப்படவேண்டும்.

சேர்.பொன். இராமநாதன், ஜீ.ஜீ.பொன்னம்பலம், அமிர்தலிங்கம், பிரபாகரன் உள்ளிட்ட தமிழர்களின் போராட்ட வரலாறு மறுபரிசீலனை செய்யப்படவேண்டும். ஆயுதம் ஏந்துவதற்கும் அப்பால் பரந்த அளவில் மக்கள் அணிதிரட்டப்பட்டு சுயநிர்ணய உரிமை வலியுறுத்தப்படவேண்டும்.

யுத்தத்தை நடத்திக்கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பது சாத்தியமற்றது. யுத்தத்தை நிறுத்தி தமிழ்மக்களின் சுயநிர்ணயஉரிமை, சமத்துவம், சுயாட்சி என்பவற்றின் அடிப்படையில் அரசியல் தீர்வு காணப்படவேண்டும். நவீன ரக ஆயுதங்களை வைத்துக்கொண்டு போராட்டத்தில் வெற்றி தோல்வியை தீர்மானிக்கமுடியாது. அதுபோலவே நவீன ஆயுதங்களை குவிப்பதன் மூலமும் ஒருபோதும் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது எனவும் குறிப்பிட்டார்.

படிப்பகம்

# ஹேராம்

இந்து பத்திரிகை நிறுவனத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவர் என்.ராம். இடதுசாரிப் போக்குள்ள புறொண்ட்லைன் இரு வார ஆங்கில செய்தி விமர்சன ஏட்டின் ஆசிரியரும் அவரே. சி.பி.எம். எனப்படும் இந்திய மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சியில் அவருக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு. அக் கட்சியில் அவர் என்ன இடத்தில் இருக்கிறார் என்பதுபற்றித் திட்டவட்டமாக எதுவும் சொல்ல முடியாது. இதே ராம், யூ.என்.பி. ஆட்சிக்காலத்தில் யூ.என்.பி. பிரமுகர்கள் பலருடன் நட்பைப் பேணியவர். குறிப்பாக காமினி திஸ்ஸநாயக்கவுடன் அவர் நெருக்கமான நண்பராக இருந்தார். 1994சனாதிபதி தேர்தலின்போது காமினி திஸ்ஸநாயக்க கொலை செய்யப்படும்வரை புறொண்ட்லைன் அவருக்கு மிக அனுதாபமாகவே தகவல் வெளியிட்டது. 1987ம் வருடஇலங்கை இந்திய உடன்படிக்கையையொட்டி இலங்கையில் பேரம்பேச வந்தவர்கட்கு உடந்தையாக ராமும் பங்கு பங்குபற்றினார். விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவின் பிரதான அரசியற் கட்சிகளுக்குமிடையில் பரஸ்பர நட்பு இருக்கவில்லை. எனினும் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டு விடுதலைப்புலிகள் மீதான சந்தேகம் வலுப்படும்வரை காங்கிரஸ் தவிர்ந்த தமிழகக் கட்சிகள் புலிகளுடன் வெளிவெளியாகப் பகைமை காட்டவில்லை. என்றாலும் தமிழ்மக்களின் பிரச்சனைபற்றிய இந்திய அக்கறைகள் தமிழக வாக்குவங்கியில் ஒரு கண்ணுடனேயே இருந்தன. அதற்கு இந்தியாவின் இரண்டு பழைய கம்யூனிஸ்ட் கட்சிகளும் விலக்கில்லை. பாராளுமன்றச் சந்தர்ப்பவாதம் எந்தப் பிரச்சனையில் தான் ஒரு நேர்மையான நியாயம் சார்ந்த உறுதியான நிலைப்பாட்டை எடுக்க விட்டிருக்கிறது? ராமின் அரசியல் சி.பி.எம்மின் அரசியலைவிடத் தூயதாக இருக்க என்ன தேவை? உண்மையில் சி.பி.எம்மின் வலதுசாரிப் போக்குடன் ராமை அடையாளம் காண்பதற்கு நியாயம் உண்டு. சில ஆண்டுகள் முன்பு புதிய பூமியில் ராம் பற்றி முன்வைக்கப்பட்ட சில கேள்விகள் கடந்த ஆண்டில் இன்னும் பூதாகரமாக எழுந்துள்ளன.

இந்திய இலங்கை வர்த்தக உடன்படிக்கையை ஊக்குவிப்பதில் ராம் புறொண்ட்லைனிலும் பிற நேர்காணல்களிலும் காட்டி வந்துள்ள ஊக்கம் பெரியது. அண்மையில் இலங்கையின் திரிபுவாதிகள் ஏற்பாடுசெய்த எஸ்.ஏ.விக்கிரமசிங்க நினைவுப் பேருரையில் ராம் ஒரு பாராட்டத்தக்க உரையை ஆற்றனார். பூகோளமயமாதல் என்பது எத்தகைய மோசடி என்பதை அவர் விளக்கினார். இதை அவர் இவ்வளவு உறுதியுடன் சொல்வதற்குச் சில காலம் எடுத்தது.ஏனெனில், இந்திய அரசியலில் பூகோளமயமாதல் பற்றிய நம்பிக்கை(1998ல் கிழக்காசிய பொருளாதார நெருக்கடி ஏற்படும்வரை) கொஞ்சம் வலுப்பெற்றே வந்தது. எனவே இடதுசாரிக்கட்சிகள் பூகோளமயமாதலுக்கான எதிர்ப்பைச் சிறிது அடக்கி வாசித்தார்கள். இன்று அந்த மாயை கலைந்து வருவதால் அது பற்றி நிறையப் பேசப்படுகிறது. எனினும் ராம் ஆற்றிய உரை பாராட்டத்தக்க விடயமாகும். ஏனெனில் இங்கு ராமுடைய இன்றைய நண்பர்களான பொதுசன முன்னணி அரசும் நாட்டின் சனாதிபதியும் இன்னமும் உலகமயமாதலின் மயக்கத்தில் கட்டுண்டுதான் கிடக்கிறார்கள்.

என்றாலும் இன்னொரு கேள்வி எழுகிறது. உலகமயமாதல் மூன்றாம் உலகை அமெரிக்காவினதும் பிற மேலை முதலாளிய நாடுகளது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிற சதி என்பதால் அது எதிர்க்கப்பட வேண்டும் என்பதை நாம் முற்றாக ஏற்கிறோம். அதே அளவுகோலின்படி இந்திய- இலங்கை வர்த்தக உடன்படிக்கையின் நோக்கம் என்ன? அது இந்தியாவின் தென்னாசிய மோலாதிக்க நோக்கத்தின் ஒரு பகுதி இல்லையா? இந்தியாவின் மேலாதிக்கம் சரி என்றால் அமெரிக்காவின் மேலாதிக்கமும் சரி என்று யாரும் நியாயமாக வாதிடலாம். போர் காரணமாகப் பலவீனப்பட்டுள்ள இலங்கை அரசின் மீது இந்தியா அரசியல் பொருளாதார நெருக்குவாரங்களைத் திணித்து வருகிறது. ராம் இதை எதிர்க்கத் தயங்குவது மட்டுமன்றி ஆதரிக்கிறர் என்பது தான் உண்மை.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வில் இந்தியாவின் ஆட்சியாளர்கள் போடுகிற எந்த ஒரு முட்டுக்கட்டையும் ராமுக்கு ஏன் தெரிவதில்லை? சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனான நேர்காணல்களில் சனாதிபதியை விடுதலைப்புலிகளுக்கு விரோதமான கருத்துக்களைக் கூறும்படி வற்புறுத்துகிற முனைப்பில் ராமின் கேள்விகளும் கருத்துக்களும் அமைந்திருந்தது நேர்மையான பத்திரிகையாளருக்கு உரியதா? விடுதலைப் புலிகள்மீது பிரித்தானிய ஆட்சி விதித்த தடை பற்றி புறொண்ட்லைன் குதூகலித்துள்ள அளவுக்கு காஸ்மீர் விடுதலை இயக்கங்கள் மீதான தடை பற்றிக்கூட மகிழ்ந்ததாகக் கூறமுடியாது. இது ஏன்? இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் பற்றி எழுத இன்று இந்தியாவின் பெரிய பத்திரிகை நிறுவனங்கள் பின்வாங்குகின்றன. புறொண்ட்லைனின் நிலைப்பாடு இந்துத்துவத்தின் குரலான இந்து பத்திரிகையின் நிலப்பாடாகவே தெரிகிறது என்றால் ராமின் இடதுசாரிச் சிந்தனைக்கும் அவரது தாத்தாவின் குடும்பத்தின் இந்துத்துவச் சிந்தனைக்கும் உள்ள இடைவெளிதான் என்ன?

புறொண்ட்லைனில் டி.பி.எஸ்.-ஜெயராஜ் ஒன்றும் யோக்கியமான அரசியல் கொள்கையுடையவரல்ல. எனினும் முதலில் புலிகளின் ஆதரவாளராக இருந்த ஜெயராஜ் கனடாவில் புலிகள் அவர்மீது பாய்ந்த பிறகு எதிர்ப்பாளரானார். அதன் பின்பு அவருக்கு புறொண்ட்லைனில் கிடைத்த இடம் பெரிது. அடிக்கடி அவருடைய கட்டுரைகள் வெளிவந்தன. சென்ற மே மாதத்தின் பின்பு ஜெயராஜின் எழுத்துக்களில் விடுதலைப்புலிகட்குச் சாதகமான பண்புகள் தெரியத் தொடங்கின. அத்தோடு ஜெயராஜின் கட்டுரைகள் புறொண்ட்லைனில் வருவதில்லை. இப்போது இலங்கையின் போர் பற்றியும் அமைதிபற்றியும் எழுதுவதற்கு அகப்பட்டுள்ளவர் றொஹான் குணரத்ன.

ஜே.வி.பிக்கு எதிரான யூ.என்.பி. அடக்குமுறையையும் 1987- 1989ல் இந்தியாவின் குறுக்கீட்டையும் எதிர்த்து ஆராய்வு நூல்களை எழுதிய குணரத்தின. வெறுமனே விடுதலைப் புலி எதிர்ப்பானர் மட்டுமல்ல இன்று சிங்களப் பேரனவாதத்தின் குரலாகவும் விளங்குகிறவர். இவருக்கு மேல்நாட்டு வலதுசாரி அரிசியல் தொடர்புகளும் அதிகம். இப்படிப்பட்ட ஒருவருக்கு புறொண்ட்லைன் களமமைத்துக் கொடுத்திருப்பது ஏன்? அது மட்டுமன்றி, குணரத்தினவின் கடந்தகால இந்திய விரோத நிலைப்பாடு புறொண்ட்வைன் வாசகர்களிடமிருந்து கவனமாக மூடிமறைக்கப்பட்டுள்ளது.

இன்று இந்திய மேலாதிக்கம் சிங்களப் பேரினவாத அரசியலுடன் சரசமாடுகிறது. பி.ஜே.பி. ஆட்சி என்றாலும் காங்கிரஸ் ஆட்சி என்றாலும் இது மாறாது. எனினும் வருத்தத்துக்கு உரியது எதென்றால், மாக்சிய முகம் காட்டுகிறவர்களும் இதேவிதமான அர்சியலில் தங்களை நாறடித்துக் கொள்வதுதான்.

ஜெயலலிதாவின் அ.தி.மு.க-வுடன் கூட்டு வைப்பதில் பிழையறியாத ஒரு அரசியற் சிந்தனையுடையோரிடம் தேசிய இனப் பிரச்சனைபற்றியும் தேசிய இனவிடுதலைப் போராட்டம்பற்றியும் நேர்மையானநிலைப்பாட்டை எதிர்பார்க்க முடியுமா என்பது நியாமான கேள்விதான்.

எனியும் உலகமயமாதல் பற்றி இவ்வளவு தெளிவாகச் சிந்திக்கவல்ல ராம், அதே சிந்தனைத் தெளிவுடனும் நேர்மையுடனும் இந்திய மோலாதிக்கம் பற்றியும் பேரினவாத ஒடுக்குமுறை பற்றியும் சிந்திக்கத் தொடங்குவாரென்றால் அவர் பற்றி நாம் வைத்திருக்கும் மதிப்பு மிகவும் உயர இடமுண்டு.

**இந்திரன்**

# அமெரிக்கச் சண்டித்தனமும் ஐரோப்பாவின் மூக்குடைப்பும்

1949ல் மக்கள் சீனக் குடியரசு உருவானது. கம்யூனிஸ்ட்டுகளின் தலைமையில் செஞ்சேனை சீனத் தலைநகரைக் கைப்பற்றியபோது, சீன மக்களால் அறவே வெறுக்கப்பட்ட ஜியங் கைசேக் தனது கையாட்களுடனும் தன் படைகளில் ஒரு பகுதியுடனும் சீனாவின் தென் கிழக்குப் பகுதியில் அமைந்ததும் சீனாவின் ஒரு [illegible] தாய்வான். [illegible]பேர்மோசா எனும் பேர்களால் அறியப்பட்ட தீவை அடைந்து தன் ஆட்சியை அங்கு நிறுவினான். அவனை அங்கு அதிகாரத்தில் வைத்திருக்க மட்டுமல்லாமல் அவன் தலைமையிலான ஆட்சியையே உண்மையான சீன அரசாங்கம் என்று அமெரிக்கா ஏற்றது. அது மட்டுமில்லாமல், ஐ.நா.சபையில் ஜியாங் கும்பலையே தொடர்ந்தும் சீனாவின் அதிகார பூர்வமான அரசாங்கமாக ஏற்க வைத்தது. சீனச் சனத் தொகையில் 1-2வீதம் மட்டுமே வாழும் தாய்வானின் ஆட்சி முழுச்சீனாவினதும் ஆட்சி என்ற அபத்தம் 1972வரை நீடித்தது. சீனாவை மேலும் ஐ.நா.சபையிலிருந்து வெளியே வைக்க இயலாத நிலை உருவான பின்பு அமெரிக்காவின் உபாயங்கள் மாறின. 1972வரை ஒரே சீனாவின் உண்மையான அரசு எது என்பதே பிரச்சனையாக இருந்தது.பல நாடுகள் மக்கள் சீனக் குடியரசு எனப்படும் ஆட்சியை ஏற்ற நிலையில் தேசிய சீனக் குடியரசு எனப்பட்ட தாய்வான் அதிகாரம் அமெரிக்க ஆதிக்கத்துக்கு உட்பட்ட சில நாடுகள் ஏற்றன. அவையும் 1972க்குப் பின் தாய்வான் ஆட்சியை ஏற்க மறுத்தன.

எந்த நிலையிலும் பெய்ஜிங்கில் இருந்த மக்கள் சீனக் குடியரசின் [illegible] தாய்-[illegible] இருந்த [illegible] குடியரசின் தலைமையோ இரண்டு சீனாக்கள் என்ற கொள்கையை ஏற்கவில்லை. ஒன்றை ஏற்ற நாட்டுக்கு மற்றதுடன் ராஜதந்திர உறவை வைத்துக் கொள்ள இயலாது என்பதே இரண்டு அரசுகளதும் கொள்கையாகும்.

சீனாவின் கம்யூனிஸ்ட் ஆட்சிக்குக் குழி பறிப்பதில் முனைப்பாக் இருந்த அமெரிக்கா முதலில் இந்திய அனுசரணையுடன் திபெத்தில் கலகத்தைத் தூண்டி விட்டது. அது தோல்வி கண்டது. அடிமைச் சொந்தக்காரர்களின் பிரதிநிதியான தலாய்லாமா இந்தியாவில் சரண் புகுந்து நேரு ஆட்சியின் ஆசியுடன் சீன விரோத அரசியலில் மும்முரமாக இயங்கினார்.

பின்பு சீனாவின் வடமேற்கில் இஸ்லாமிய தீவிரவாதிகளைக் கிளறி விடுகிற முயற்சிகளும் சவூதி அராபிய உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இஸ்லாமிய அடிப்படைவாதத்தை எதிர்க்கும் அமெரிக்கா சீனாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் எதிராக அதே மதத் தீவிரவாதத்தைப் பயன்படுத்தத் தயங்கவில்லை.

தாய்வானில் தாய்வானின் பாதுகாப்புக்காக நிலை கொண்டிருந்த தன் செயற்பாட்டை மெல்ல மாற்றியது. தாய்வானின் ராணுவ [illegible] அதிகரித்தது. சீன மிரட்டலில் இருந்து தாய்வானைக் காப்பாற்றும் நோக்கிலேயே இதைச் செய்வதாகக் கூறியது. அதே வேளை, குறிப்பாக சியாங் கைசேக்கின் பின்பு பதவிக்கு வந்த அவரது மகனின் மறைவுக்குப் பிறகு தாய்வானின் பூர்வ குடிகள் எனப்படுவோரின் நடுவே பிரிவினைவாதக் கருத்துக்களை விதைத்தது. தாய்வானில் சனநாயக சீர்திருத்தங்களை புகுத்தி பிரிவினைவாத அரசியலை ஊக்குவித்தது. இதன் மூலம் அமெரிக்கா சீனாவுடன் உறவை ஏற்படுத்தியபோது ஏற்றுக்கொண்ட ஒரே சீனா கொள்கையைக் குழிபறிக்கப் பல முயற்சிகளையும் எடுத்து வந்துள்ளது.

இரண்டு சீனாக்கள். ஒருசீனா ஒரு தாய்வான் என்றவாறு பலவேறு சூழ்ச்சிகரமான ஆலோசனைகள் அமெரிக்காவால் பல சந்தர்ப்பங்களிலும் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆயினும் கடுமையான சீன எதிர்ப்பால் இவை கைகூடவில்லை.

சீனா அமைதியான முறையில் ஹொங்கொங்கை மீளப் பெறும் முயற்சியில் 1986அளவில் வெற்றி பெற்றது. இதன்படி 1997ல் ஹொங்கொங் சீனாவின் ஆளுமைக்கு உட்பட்டது. இதன் விளைவாக தாய்வானும் சீனாவுடன் மீள இணையும் வாய்ப்பு அதிகமாகலாம் என்று அஞ்சிய அமெரிக்கா, தாய்வான் மூலம் சீன ஆட்சியைக் குழிபறிக்கும் தன் முயற்சிகளை மும்முரப் படுத்தியது.

சீனாவில் ஏற்பட்டுள்ள பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் சீனாவின் சோசலிஸ அடிப்படையையும் உழைக்கும் மக்களின் நலன்களையும் பாதித்திருக்கிறது. அதே வேளை. சீனாவை அயல் மூலதனமும் கணிசமாக ஊடுருவியுள்ளது. இருந்த போதும் அமெரிக்காவால் சீனாவை அடிபணிய வைக்க முடியவில்லை.

சீனாவுக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் சீனாவைச் சர்வதேச நிறுவனங்களிலிருந்து மறிக்கும் முயற்சிகள் இன்னமும் ஒரு புறம் தொடர்கின்றன. மறுபுறம் சீனா அமெரிக்காவில் உளவு பார்ப்பதாக ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களை முன்வைத்து ஒன்றையுமே நிருபிக்க முடியாத அமெரிக்கா சீனா மீது உளவு வேலைகளை நடத்துவதற்கு எதுவித தடையும் இருப்பதை விரும்பவில்லை.

இன்று அமெரிக்காவின் வெறுப்புக்கு ஆளாகியுள்ள ஈராக், பாகிஸ்த்தான், ஈரான் போன்ற நாடுகளுக்குச் சீனாவின் தொழில்நுட்ப உதவிகள் ஆயுத உற்பத்திக்கான உதவிகள் என்று திரித்துக் கூறப்பட்டு வருகின்றன. எனினும்

இன்று அமெரிக்காவால் சீனாவை ஒரேயடியாகப் பகைத்து மோதி வெல்ல இயலாத நிலையில் உள்ளது. ஆதவே தான் அது தாய்வானை ஆயுதபாணியாக்கிப் பலப்படுத்தும் முயற்சி அமெரிக்காவின் புதிய தலைமையால் மும்முரமாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சீனாவை மிரட்டிக் கட்டுப்படுத்தலாம் என்பது அமெரிக்காவின் நப்பாசை.

அதே வேளை தாய்வானுக்கு ஐரோப்பாவிலிருந்து பெற்றுத் தருவதாக அமெரிக்கா வாக்களித்த நீர்மூழ்கிக் கப்பல்களை வழங்க ஐரோப்பிய நாடுகள் ஒரேயடியாக மறுத்துவிட்டன. இது அமெரிக்காவுக்கு ஒரு பகிரங்க மூக்குடைப்பு. உளவு விமான விடயத்தில் கையும் மெய்யுமாக அகப்பட்டுத் திணறும் அமெரிக்கச் சண்டியன் இன்னொரு பாறையைத் தூக்கித் தன் காலில் போட்டுக் கொண்டு தவிக்கிற நிலையையே நாம் காணுகிறோம்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# குமார் பொன்னம்பலத்திற்குப் பிறகு தமிழ்க் காங்கிரஸ்

**த**மிழ்க் காங்கிரஸ் என்பது எப்போதுமே ஒரு ஆள் கூத்து அரசியல் கட்சியாகவே இருந்து வந்தது. ஜீ.ஜீ.பொன்னம்பலம் வாழ்ந்த காலம்வரை அவரே கட்சியாகக் கருதப்பட்டார். அவருடைய தலைமையைத் தமிழ் மக்கள் முற்றாகவே நிராகரித்த பின்பு அந்தக் கட்சியின் பேரில் வெற்றி பெற்றவர்கள் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பிற்குள் சங்கமமானர்கள். ஆனாலும் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்களின் தொகை குறைந்தாலும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தவிர்ந்த யாரையுமே அவர்கள் தலைவராக ஏற்க ஆயத்தமாக இருக்கவில்லை. அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தமிழரசுத் தலைவர்களால் ஆனைப்பந்தி தமிழ்க்காங்கிரஸ் என்று கேலிசெய்யப்பட்ட 1960களின் போதும் தமிழ்க் காங்கிரஸுக்கு ஒரு உயர் சாதி வர்க்க அடிப்படையிலான தளம் இருந்தது. தேர்தல்களை வெல்ல வலிமை இல்லாது போனாலும் வசதி படைத்தவர்களின் ஆதரவை உடைய கட்சியாகத் தமிழ்க் காங்கிரஸ் இருந்தது. எனவே அக்கட்சியின் இயல்பான நண்பனாக யூ.என்.பி. இருந்து வந்ததில் அதிசயம் இல்லை. தமிழரசுக் கட்சி யூ.என்.பியுடன் நேச உறவை ஏற்படுத்துவதற்கு 1965-வரை காத்திருந்தது. தமிழ்க் காங்கிரஸ் வடக்கின் தமிழர் நடுவே யூ.என்.பி. ஆதரவு தூண்போலவே எப்போதும் செயற்பட்டது.

இந்த அரசியலின் அடிப்படையில் தன் அரசியல் பாதையைத் தொடங்கிய குமார் பொன்னம்பலம் அதன் பிரச்சனைகளைத் தன் அனுபவமூலம் கண்டார். என்னும் தமிழ்க் காங்கிரஸின் இரண்டு முக்கியமான பண்புகளான தனிப்பெருந் தலைவரின் முக்கியத்துவமும் யூ.என்.பி. அனுதாபப் போக்கும் எப்படியோ தொடர்ந்தன. யூ.என்.பி. அரசாங்கத்தின் பச்சையான தமிழர் விரோத நிலைப்பாட்டின் வெளிப்பாடான 1983வன்முறையை அடுத்தே குமார் பொன்னம்பலத்தின் நிலைப்பாடு மாறத் தொடங்கியது. எனினும் யூ.என்.பியினுள் இருந்த சில தனிமனிதர்களுடன் அவருடைய நெருக்கமான உறவு தொடர்ந்தது. எவ்வாறாயினும் 1988ம் ஆண்டு சனாதிபதி தேர்தலில் அவர் ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சியை ஆதரித்தது தமிழ்க் காங்கிரஸ் பாரம்பரியத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய முறிவு.

எனினும் அவரால் ஸ்ரீ.ல.-சுதந்திரக் கட்சியுடன் நல்ல உறவைத் தொடர்ந்து பேண முடியவில்லை.1994ல் பதவிக்கு வந்த புதிய பொதுசனமுன்னணி ஆட்சி தேசிய இனப் பிரச்சினையில் நடந்துகொண்டவிதம் நல்லுறவுக்கு வசதி செய்யவுமில்லை. இந்தச் சூழ்நிலையில் பொதுசன முன்னணிக்கு எதிரான சக்திகளுடன் குமார் பொன்னம்பலத்தின் உறவு வலுப்பட்டது. யூ.என்.பியின் சந்தர்ப்பவாதத்தை அவர் அதிகம் தாக்கியதாகச் சொல்வது கடினம். இதைத் தந்திரோபாயம் என்று தட்டிக் கழித்துவிட முடியாது. எப்படியாயினும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடிய அடக்குமுறைக்கு எதிரான மிகவும் தைரியமான தமிழ்த் தேசியவாதக் குரலாக குமார் பொன்னம்பலத்தின் குரல் அமைந்தது என்பதும் யூ.என்.பி. ஆட்சிக் காலத்தின்போது சனநாயக மீறல்கள் பற்றிப் பிரதான அரசியற்கட்சிகளே பேசத் தயங்கிய விடயங்களை அவர் பேசியது அவரது வரலாற்று முக்கியமான பங்களிப்புக்கள்.

இப்போது குமார் பொன்னம்பலத்தை நினைவு கூரும் கூட்டங்களில் யூ.என்.பி. பிரமுகர்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. அதைவிட யூ.என்.பிக்கு நேரடியாவோ மறைமுகமாகவோ ஆதரவு வழங்குகிற மனோ கணேசன் போன்றவர்கள் தமிழ்க் காங்கிஸுக்கு நெருக்கமானவர்களாக இருக்கிறார்கள்.

இதை விட இன்று தமிழ்க் காங்கிரஸ் மற்றத் தமிழ்த் தேசிய வாதக் கட்சிகளை விமர்சிப்பதைக் கிட்டத்தட்ட வைட்டு விட்டது. அதன் பொருள் என்ன? த.வி.கூட்டணியும் ரெலோவும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் மாறிவிடனவா? தமிழ்க் காங்கிரஸ் மாறி விட்டதா?

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக அறிக்கை விட்டுச் கொண்டு மற்றக் கட்சிகளுடன் சேர்ந்து அயல் தூதரகங்களுக்குப் படையெடுப்பது தான் இன்று தமிழ்க் காங்கிரஸின் அரசியலாகிவிட்டது. வரவு செலவுத் திட்டம் பற்றி ஒரு உருப்படியான விமர்சனத்தை முன்வைக்கக் கூட அதன் பாராளுமன்ற உறுப்பினரால் இயலாத வக்கற்ற நிலையில் தமிழ்க காங்கிரஸ் உள்ளதா?

ஒரு ஆள் கூத்துக்கட்சி இன்று கூத்தாட ஆளே இல்லாத கட்சியாகி விட்டது என்று தான் கூற வேண்டும். வெகுசன ஸ்தாபன அமைப்பு இல்லாமல் தனி மனிதர் ஒருவரது செல்வாக்கிலும் அனுதாபத்திலும் தமிழ்க் காங்கிரஸ் இனியும் அரசியல் நடத்த முடியாது. தன் பேர்ப் பலகையைத் தூக்கி எறிந்து விட்டு யூ.என்.பியுடனோ வேறொரு தமிழ்க் கட்சியுடனோ சங்கமமாகிற நிலையைத் தமிழ்க் காங்கிரசால் தவிர்க்க முடியுமா? அப்படியானால் அதன் அரசியற் செயற்பாடு பிரமுகர்களின் களத்திலிருந்து வெகுசனத் தளத்துக்கு இறங்கி வரவேண்டும். அது நடக்குமா? இதுவே தமிழ் காங்கிரஸின் எதிர்காலத்தை நோக்கி நிற்கிற பெரிய கேள்விக் குறி.

# பயங்கரவாதத்தின் முகங்..... (6ம் பக்கத் தொடர்ச்சி )

5. பயங்கரவாத்திற்கு முடிவு கட்டுவது பற்றி.

பயங்கரவாதம் என்பது ஆரோக்கியமான சமூகச் சூழலில் தோன்றுகிற ஒரு நோய் அல்ல. நோயுள்ள சமுதாயத்தில் அந்த நோயின் அடையாளங்களுள் சமூக வன்முறை ஒன்று. இதில் சமூகத்தின் நோயை மாற்றுகிற நோக்கில் வருகிற வன்முறையும் அந்த நோயை மேலும் ஆழப்படுத்தும் வன்முறையும் வேறானவை.

சமூக நீதிக்கான வன்முறைப் போராட்டங்களை சமூக அநீதி தொடரும்வரை ஒழிக்க முடியாது. அது போலவே சமூக அநீதிக்குக் காரணமான சக்திகள் தாமாகவே தமது வன்முறையைக் கைவிடப் போவதில்லை. எனவே சமூக வன்முறையை ஒழிப்பதானால் சமூக நீதியை நிலைநிறுத்துவதன் மூலமே அது இயலுமாகும். சமூக ஒடுக்குமுறை வன்முறையைத் தன்னுள் கொண்டுள்ளது. அந்த ஒடுக்குமுறைக்கு எதிரான நீதியான அமைதியான போராட்டங்கள் வன்முறை கொண்டே நசுக்கப்படுகின்றன. எனவே ஒடுக்கப்பட்ட மக்கள் விரும்பியோ விரும்பாமலோ வன்முறை அவர்கள் மீது திணிக்கப்படுகிறது. இதனாலேயே சமூக நீதிக்கான போராட்டம் ஆயுதம் ஏந்திய போராட்டாமாவதும் தவிர்க்க இயலாததாகிறது.

மாக்ஸிய- லெனினியம் வன்முறையை வழிபடும் தத்துவமல்ல. அது வன்முறையை ஒரு சமூக யதார்த்தமாக அறிந்து அடையாளங் காணுகிறது. அநீதியான வன்முறைக்கு எதிராக நீதியான வன்முறையை அது ஏற்கிறது. அதே வேளை அமைதியானமுறையிலும் சட்ட வரம்புகட்கு உட்பட்டும் சமூக நீதிக்காகப் போராடுவதை அது ஏற்கிறது. பல் வேறு போராட்ட அனுபவங்கட்டாகவே விடுதலைப் போராட்டங்கள் சமூக விடுதலையையும் புரட்சிகரமான சமூக மாற்றத்தையும் வென்றெடுக்கின்றன.

விடுதலைக்கான போராட்டத்தின் பேரால் சனநாயகமின்மை மக்கள் மீதான அடக்கமுறை தனி மனித வன்செயல்கள் போன்றன முன்னெடுக்கப்படும்போது விடுதலைப் போராட்டம் பலவீனமடைகிறதை மாக்ஸிய லெனினியவாதிகள் அறிவார்கள். எத்தகைய பிணக்குக்களுக்கு வன்முறை அல்லாத தீர்வுகள் இயலும் என்பதோடு அவசியம் என்பதை அவர்கள் ஆராய்ந்து கவனிப்பில் எடுக்கிறார்கள். அதே வேளை வன்முறை மூலமே தீர்க்கக் கூடிய பிணக்குகளையும் சரிவர அடையாளங் காணுகிறார்கள்.

இன்றைய உலகின் அடிப்படையான முரண்பாடு ஏகாதிபத்தியத்திற்கும் உலகின் உழைக்கும் மக்களுக்குமிடையிலான வர்க்க முரண்பாடு தான். அது ஒவ்வொரு நாட்டிலும் அப்படியே தன்னை வெளிப்படுத்திக் கொள்வதில்லை. ஆயினும் எங்கெல்லாம் சமூக ஒடுக்குமுறை இருக்கிறதோ அங்கெல்லாம் ஏகாதிபத்தியம் தன் பங்கைச் செலுத்தி வருகிறது. ஏகாதிபத்தியத்தின் சார்பாக இயங்குகிற சக்திகளுடன் மக்களுக்கு உள்ள முரண்பாடுகள் அமைதியாகத் தீர்க்க முடியாதன. இதை மறுத்துச் சமூக வன்முறையை முடிவுகட்டுவது பற்றியோ பயங்கரவாத்தை ஒழிப்பது பற்றியோ பேச இயலாது.

உலகின் மிகக் கொடுமையான பயங்கரவாதம் அரச பயங்கரவாதமே. அதிகம் கொடுமையான பயங்கரவாதிகள் ஏகாதிபத்திவாதிகளே. அவர்கள் ஒழிக்க முயலுகிற பயங்கரவாதத்தில் பெரும் பகுதி அவர்களுடைய பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டங்களேயாகும். இப் போராட்டங்களின் போக்கில் ஏற்படும் தவறுகளும் சில தீவிரவாதப் போக்குகளும் சமூக விரோதப் போக்குக்களும் ஏகாதிபத்திய விரோதப் போராட்டங்களை முற்றாகவே பயங்கரவாதம் என்று ஒதுக்குவதற்கு அவர்கட்கு வசதியாகி விடுகிறது.

அதற்கு மாறாக நாம் செய்ய வேண்டியது என்ன? முதலில் உண்மையான பயங்கரவாதம் எது என்பதை மக்களுக்கு விளக்க வேண்டும். நீதிக்கான போராட்டம் பயங்கரவாதம் அல்ல என்றும் விளக்க வேண்டும். அதே வேளை தீவிரவாத போக்குகள் மூலம் மக்கள் மத்தியில் பிளவுகள் வளர்க்கப்படுவதையும் மக்கள் விரோத நடவடிக்கைகளையும் விமர்சித்துத் திருத்தக் கடும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அனைத்திலும் மேலாக விடுதலைப் போராட்டங்ளைப் பயங்கரவாதம் என்று நிராகரித்துத் தங்கள் அரசியல் சீரழிவை நியாயப் படுத்துகிற சந்தர்ப்பவாத இடது சாரிகளை ஈவு இரக்கமின்றி விமர்சித்து மக்களுக்கு அடையாளங்காட்டவேண்டும்.

சமூக நீதிக்கான போராட்டங்களை ஒவ்வொரு சமூகத் தளத்திலும் இயலுமான ஒவ்வொரு விதத்திலும் முன்னெடுத்துச் செல்வதைத் தவிரப் பயங்கரவாதத்தை முடிவுகட்ட வேறு வழி இல்லை. ஏனென்றால் மக்கள் விரோத வன்முறை நேற்றுப் பெய்த மழையில் முளைத்த காளான் அல்ல. அது ஒரு விச விருட்சம். அதன் வேர்களை மண்ணிலிருந்து முற்றாகப் பெயர்ப்பது ஒரு நாளில் முடிவதல்ல.

# பலாங்கொடையில் இனவெறியாட்டம் தொடரும் அவலம்

இரட்ணபுரி, கேகாலை பலாங்கொடை,களுத்துறை போன்ற பகுதிகளிலும் கண்டி, மாத்தளை, பதுளை போன்ற பகுதிகளிலும் வாழ்கின்ற மலையகத்தமிழ் மக்கள் அடிக்கடி இனரீதியான தாக்கதல்களுக்கு உள்ளாகின்றனர். அவற்றுக்கு முகம் கொடுத்து அப்பிரதேசங்களிலே வாழவேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். அதற்காக செய்யப்படவேண்டிய நடவடிக்கைகள் எவை? அந்நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிவர்கள் யார்? என்பன பிரதான கேள்விகளாக முன்வைக்கப்படுகின்றன.

மே மாதம் 8ஆம் திகதி இராணுவத்திலிருந்து தப்பி வந்த ஒருவர் பலாங்கொடை சிசில்டன் தோட்டத்து பெண்ணொருவருடன் வண்புணர்ச்சியில் ஈடுபட முற்பட்டபோது வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். அதனை அடுத்து தோட்டத்தொழிலாளர்களும் அவர்களின் குடியிருப்புகளும் சிங்களவர்களால் தாக்கப்பட்டதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மேற்படி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு புதுக்காடு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தோட்டத் தொழிலாளர்கள் வெளியாரினால் தாக்கப்பட்டுள்ளனர். குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது அதிருப்தியை காட்டுகின்றபோது தோட்டத்தொழிலாளர்கள் இனரீதியாக தாக்கப்படுகின்றனர். இது மலையகத் தமிழ்மக்கள் சிதறி வாழ்கின்ற பிரதேசங்களில் மட்டுமன்றி செறிவாக வாழ்கின்ற பிரதேசங்களிலும் இடம்பெறுவது வழமையாக இருக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு வேவல்வத்தையில் ஒரு சிங்கள காடையன் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்தும் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் எரித்து நாசமாக்கப்பட்டன. களுத்துறையில் ஒரு கசிப்பு வியாபாரி கொல்லப்பட்டபோதும் அப்பகுதி தோட்டதொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். காவத்தையில் தோட்த் தொழிலாளர்களை இம்சைப்படுத்திய ஒரு காவல்காரன் வெட்டிக்கொல்லப்பட்டதை அடுத்தும் சிங்களவர்களால் தோட்டத்தொழிலாளர்களுக்கு அச்சுறுத்தலும் ஆபத்தும் நிலவியது.

தனியொரு சிங்களவர் கூட தோட்டத்தொழிலாளர்களை மலையகத்தமிழ் மக்களை மிகவும் கீழ்த்தரமாக நினைக்கின்ற நிலைமை சிங்கள மக்களிடம் வளர்க்கப்பட்டுள்ளது. அதனால் சமூக விரோத செயல்களில் ஈடுபடும் சில சிங்களவர்கள் இலகுவாக மலையகத்தமிழ் மக்களின் மீது அவர்களின் வெறிகளை தீர்த்துக்கொண்ட சம்பவங்கள் பல இடம்பெற்றிருக்கின்றன. அண்மைக்காலமாக அவ்வாறான குற்றச்செயல்களை புரிபவர்களுக்கு எதிராக பாதுகாப்பற்ற பலவீனமான நிலையில் இருந்தாலும் கூட சப்பிரகமுவ மாகாண, களுத்துறை மாவட்டத்தில் வாழும் மலையகத் தமிழ் மக்கள் எதிர்ப்பை காட்டிவருகின்றனர். எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர்.

நாட்டில் பேரினவாதம் தலைவிரித்தாடுவதால் அந்த எதிர்த்தாக்குதல்களுக்கு எதிராக சிங்கள மக்கள் ஏவிடப்பட்டும், திட்டமிடப்பட்டும் இனரீதியாக மலையகத்தமிழ் மக்கள் தாக்கப்படுகின்றனர்.

மலையகத்தொழிற்சங்கத் தலைமைகள் பொதுவாகவே மத்திய,ஊவா மாகாணங்களிலேயே அதிகம் கவனம் செலுத்துகின்றன. இனரீதியாக மலையகத்தமிழ் மக்கள் தாக்கப்படுகின்றபோது எதிர்த்து அறிக்கை விடுவதுடன் அவைகளின் கடமைகளை நிறுத்திவிடுகின்றன. அதற்குமேல் அவர்களிடம் எதிர்பார்ப்பதற்கு எதுவுமில்லை.

எனவே இனரீதியாக தாக்கதல்களுக்கு உள்ளாகிவருகின்ற மலையகத் தமிழ் மக்கள் அத்தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியதுடன் எதிர்காலத்தில் இனமுரண்பாடுகளை குறைக்க நவடிக்கைளை எடுத்தாகவேண்டும். மலையகத்தமிழ் மக்கள் பரந்தளவில் ஐக்கியப்பட்டு அவர்களின் சக்தியை கட்டியெழுப்ப வேண்டும். இனவாதத்திற்கு எதிராக போராடவேண்டும்.

அதே பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு அறிவூட்டும் பல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். தொழிற்சங்க, பாராளுமன்ற அரசியலுக்கப்பால் அந்நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அவற்றை முன்னெடுப்பதற்கான வெகுஜனப் போராட்ட இயக்கங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியதுடன் உரிய பலமான தலைமைத்துவமும் கட்டிவளரக்கப்படவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



## மதிப்புக்குரிய ஆசிரியர் கவனத்திற்கு.......

சென்ற புதியபூமி இதழில் சேரன் மீதான கடுமையான விமர்சனம் முன் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த விமரிசனம் எழுதப்பட்ட விதம் சேரனிடம் கேட்கப்பட்ட கேள்விகளிலிருந்து கவனத்தைத் திசை திருப்பி விட்டது. எங்கள் பரம்பரை போர் புரியட்டும் என்றும் என் மண் என் மண் என்றும் எழுதியவர் தான் சேரன். தமிழ்த் தேசியவாதத்தின் போராளிகளைக் கிளறிவிட்ட குரல்களில் சேரனின் குரலைவிட முக்கியமான குரல்கள் இருக்கவில்லையா, தமிழரசுக் கட்சிக் காலத்துத் தேசியவாதம் மிகுமிகுத்துப் போய்க் கூட்டணியின் தேசியவாதம் தோலுரிக்கப்பட்ட நிலையில் இளைஞர்கள் புதிய பாதையைத் தேடினார்கள். இந்த இளைஞர்களின் நடுவே தங்களை முக்கியப் படுத்தப்பார்த்த படைப்-பாளிகளில் சேரன் இன்னும் ஒருவர்.

தமிழ் மக்களுடைய விடுதலைக்கு இடதுசாரிகள் எல்லாருமே எதிரிகள் என்ற புனைகை முன்வெடுக்கக் காரணமான கவிஞர்களில் சேரன், ஜெயபாலன் போன்றவர்களுக்கும் ஒரு முக்கிய இடம் உண்டு. இன்று பேராசிரியர்களாக உலாவருகிற மௌனகுரு, சித்திரலேகா போன்றவர்களும் தமது பழைய முற்போக்குச் சுவடுகளை அழித்து விட்டுத் தேசியவாத முகமூடி அணிந்த காலம் அல்லவா அது. ஆகவே சேரன் மட்டுமே இவ் விசயத்தில் குற்றவாளியில்லை. மரணத்துள் வாழ்வோம் தொகுதியில் தனது கவிதையில் சில வரிகள் வேண்டுமென்றே தவறவிடப்-பட்டதாகப் பத்து வருடங்கள் கழித்துக் குற்றம் சாட்டின கவிஞர் நுஃமானும் உரிய நேரத்தில் இந்த மோசடியைச் சொல்லாமல் விட்டவர் தான். கலைஞர்களின் அரசியல் நிலைப்பாட்டை உரைபார்த்த உரைகல் அந்தக் காலம். அது ஒரு அக்கினிப் பரீட்சையின் காலமும் ஆகும். அதன் பின்பு கறையில்லாமல் வெளி வந்த புத்திசீவிகள் எத்தனை பேர்?

நமக்கு முக்கியமானது என்ன? சேரனின் அன்றைய தீவிர நிலைப்பாடா? அதிலிருந்து அவர் வழி மாறியதா? இல்லை. சேரன் இன்று தேசியவாதத்தின் எதிரியாகவும் மனிதாபிமானியாகவும் மாறியிருக்கலாம். இந்த அற்புதம் அவருக்கு மட்டும் நடந்ததா? அவருக்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தழைத்தோங்கும் சனநாயக, மனிதாபிமான விழுமியங்கள் மீது பற்று ஏற்பட்டுள்ளது. அவர் மட்டுமா அப்படிப்பட்ட மனிதாபிமானி? கனடா, ஐரோப்பாவின் சஞ்சிகைகளின் பின்-னால் உள்ளவர்கள் சேரனைவிட வித்தி-யாசமானவர்களா? சேரனுக்கு ஏன் இவ்வளவு முக்கியம் வழங்க வேண்டும்?

மார்க்சீசப் பாதைமாறி ஜெயலலிதா ஆட்சியுடன் சமரசம் செய்த தமிழவன், பார்ப்பனிய பின்நவீனத்துவவாதியான ரமேஷ், மார்க்சிய விரோதமே மூச்சாகக் கொண்ட சுந்தரராமசாமியும் அவருடைய திருலான காலச்சுவடு நிறுவனமும் சேரனுடன் நெருக்கமான உறவைப் பேணுகிறார்கள். புலி எதிர்ப்புப் பேசுகிற சில புலம் பெயர்ந்த ஏடுகள் சேரனை ஒரு பிரமுகராக்கப் பார்க்கின்றன. இது உண்மை தான். என்றாலும் இது சேரனுக்குப் புதிய பூமி முக்கியம் வழங்கப் போதுமானதா?

சேரனுடைய கவிதைகள் நமது சமூகத்தின் மீது தாக்கம் ஏற்படுத்தின காலம் ஒன்று இருந்தது. அது இன்று இல்லை. அவருடைய கவிதைகளில் ஒடுக்குமுறைக்கு எதிராக குரல் கொடுத்தவை மட்டும் இன்னும் மதிக்கப்படுகின்றன. 1987க்குப் பிறகு சேரனின் முக்கியத்துவம் மிகவும் மங்கிவிட்டது. அவர் சமீப காலங்களில் எழுதியவை அவருடைய இளமைக்காலத்தின் மறுதலிப்புத்தான். அவை எங்கே எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்குகின்றன? இந்த மண்ணிலிருந்தும் அதன் மக்களிடமிருந்தும் முற்றாக அந்நியப்பட்டுப்போன சில ஐரோப்பியத் தமிழ்ப் பத்திரிகைகளின் மிகுமிறுப்பு அட்-டைகளும் மின் அம்பலம் எனப்படும் தொடர்பு ஊடகமும் யார்யாரைச் சென்றடைகின்றன? யாருக்காகச் செயற்படுகின்றன?

தூய கலை இலக்கியம் பேசி வெகுசன இலக்கியம் என்பதை நிராகரித்துத் தங்களைப் புனிதர்களாகக் காட்டிக் கொண்டவர்கள் இன்று தி. க.சிக்குப் பரிசு கிடைத்தது பற்றிப் புழுங்குவது பற்றி ஆதவனில் ஒரு கட்டுரை வந்தது. பரிசுகளின் அரசியல் பற்றி அறிந்த இந்த ஞானிகளுக்கு ஏன் தி.க.சி. பரிசு பெற்றவுடன் இவ்வளவு ஆவேசம். இந்தத் தன்புனைப்புக் கூட்டம் சேரனை இலங்கையின் மகா கவிஞனாகக் கொண்டாடுகிறது ஏன் என்று ஆராயவும் தகுமா?

சேரனின் சீரழிவு அவருடைய காலத்து தேசியவாத அரசியலின் சீரழிவின் இன்றைய ஒரு பக்கம் மட்டுமே.இந்தச் சீரழிவு பற்றிய ஒரு கனதியான ஆய்வு தேவைதான். அதற்கு ஒரு உதாரணமாக வேண்டுமானால் சேரன் இருக்கலாம். மற்-றப்படி, புதிய பூமியின் பக்கங்களை விழுங்க அவர் தகுதியானவரா என்பதை நீங்கள் யோசிக்க வேண்டும். அதை விட, அவர் மீதான விமரிசனங்களை முன்பு அவர் நடந்து கொண்ட விதத்திலேயே முன்வைக்கத் தேவை என்ன என்பதையும் யோசிக்கவேண்டும். முடிந்தவரையும் விசயச் சார்பாகவும் சுருக்கமாகவும் விமர்சனங்கள் அமைவது நல்லது.

அன்புடன்
க. ஆறுமுகம்.

## ஆறாம் திணை சென்ற அறிஞருக்கு

-அஞ்சாந்திணைக் கவிராயர்

நாலு திணை சார்ந்து நல்வாழ்வு கண்டவர்கள்
பாலை எனுந் திணையும் பாடிவைத்துப் போனார்கள்
காலம் பல சென்றும் ஐந்திணையின் கதை இன்னும்
நீளத் தொடர்கின்ற நம்மவர்தம் நற்றிணைகள்
நாலுமொரு பாலையென நாடழியப் போரொன்று
காலத்தாற் சூழ்கையில்நம் நல்லறிஞர் பெருமகனார்,
சோராது போர் செய்க, தமிழீழம் தனை வெல்க,
போரிடுதல் தானெங்கள் பரம்பரையின் பணி யென்னச்
சொன்னவர் தான். சொன்னதன்பின் சென்றார், புலம்
பெயர்ந்தார்.
அந்நியரின் மண் மீது அகதிப் புது வாழ்வை
ஆறாத் திணையென்றோர் பேர்சூட்டி அகமகிழ்ந்து
கூறுகிறார் நற்செய்தி சனநாயகம் உண்டாம்,
மனித உரிமைகளாம், மானிடரின் சமத்துவமாம்.
இனிமேல் நம் தமிழினத்தின் பண்பாடு பேணுதற்கு
ஏழாம் திணை உண்டாம், தமிழழிந்து போகாமல்
வாழவொரு வெப்சைற்றாம் ஏழாந்திணை கண்டே
தன் சொல் மறந்ததுவும் தன் கொள்கை கெட்டதுவும்
தன்மண்மேற் பற்றறுத்துத் தடுத்தாண்டு அருளியதோர்
மின்னம்பலத்தாளும் இறைக்கே பித்தானதுவும்
என்னே புதுமை அறிவின் புலப்பெயர்வு.

3ம் பக்கத் தொடர்ச்சி

## ஜனதா விமுக்தி பெரமுன : நினைப்பும் மறப்பும்

தனித்தனிப் பிரச்சனைகளில் இடையிடை ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருவதோடு பிரம்மாண்ட-மான கூட்டங்களும் பேரணிகளும் பற்றியே கூடிய கவனம் காட்டு-கிறார்கள். இவை மூலம் ஒரு வெகுசன இயக்கத்தைக் கட்டி-யெழுப்பவோ ஒரு புரட்சிகர மாற்-றத்தைக் கொண்டு வரவோ இவர்-களுக்கு அக்கறை இல்லை என்பதைக் கடந்த சில ஆண்டு-களாகவே புதிய ஜனநாயகக் கட்சி சுட்டிக் காட்டி வந்தது. இவர்க-ளுடைய அரசியல் சந்தர்ப்பவாதம் பற்றியும் கடுமையாக எச்சரித்து வந்தது. ஆனாலும் சில இடது-சாரிகள் ஜே.வி.பியின் கூட்டங்களின் அளவு காரணமாக சபலம் அடைந்-தார்கள். ஜே.வி.பியும் அதைப் பாவித்து உண்மையான இடதுசாரி-களுக்குள் ஏற்பட்டுவந்த ஐக்கியத்-துக்கு ஆப்பு வைத்தது. இதுதான் ஜே.வி.பி. அரசியல். பேரினவாதம், சந்தர்ப்பவாதம், ஜனநாயக விரோ-தம், சூழ்ச்சி, குழிபறிப்பு என்பன அதன் நீண்ட கால முத்திரைகள். ஜே.வி.பி. தனது வீரர் தினத்தில் இந்த ஏப்ரல் மாதம் புரட்சியைக் கை கழுவி விட்டதாக அறிவித்தது. ஆனால் அதனுடைய அரசியல் அதன் பழைய சந்தர்ப்பவாதச் சேற்-றுக்குள் மேலும் ஆழமாகப் புதை-ந்து விட்டது. இன்று ஜே.வி.பி. பல கேள்விகட்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும். மக்கள் அவற்றுக்கு நேர்மையான பதிலுக்கு உரிமை உடையவர்கள். ஜே.வி.பியின் முப்பத்திமூன்று வருட அரசியல் இந்த நாட்டின் மக்களுக்குச் செய்தது என்ன என்பதை ஜே.வி.பி. தலைமை நேர்மையுடன் சுயவிமர்-சனம் செய்யாமல் இனிப் புரட்சி செய்ய மாட்டோம் என்று சொல்லி மக்களை நம்ப வைக்க முடியாது. இந்தக் கேள்விகளில் முக்கியமான சிலவற்றை இங்கே முன்வைக்-கிறேன். இவை போன்ற கேள்விகள் ஜே.வி.பியினரிடம் திரும்பத் திரும்பக் கேட்கப்பட வேண்டும். இந்த வித-மான கேள்விகள் யூ.என்.பி. அல்லது ஸ்ரீ.ல.சு.க. போன்ற முதலாளிய-தரகு முதலாளிய நலன் சார்ந்த கட்சிகளதும் அவர்களது கூட்டாளி-களதும் பார்வையிலிருந்து வருவன அல்ல. இவை இலங்கையின் ஒடுக்-கப்பட்ட, பாடுபடுகிற உழைக்கிற மக்களின் நிலைப்பாட்டிலிருந்து எழுகிற கேள்விகள்.

1971ம் ஆண்டு கிளர்ச்சியை நினைவு கூரும் போக்கில் தன் கடந்த காலத்தை மக்கள் மறக்கச் செய்ய முயலும் ஜே.வி.பி. தலைமையிடம் இன்று கேட்க வேண்டிய கேள்விகளிற் சில:

- ஜே.வி.பி. 1971ம் ஆண்டு கடைப்பிடித்த போராட்டப் பாதை தவறானது என்றால் அதற்கான காரணம் என்ன, அந்தத் தவ-றான பாதையில் ஜே.வி.பியை வழிநடத்திய தலைமை எப்படிப்-பட்டது? அதுவும் முற்றாக நிரா-கரிக்கப்படுமா? அப்படியானால் புதிய ஜே.வி.பியின் அரசியல் பாரம்பரியம் எங்கிருந்து தொடங்குகிறது?
- ஜே.வி.பி. முற்றாகவே வன்-முறையை நிராகரிக்கிறது என்றால் ஒடுக்கப்பட்ட மக்கள்-மீது ஏகாதிபத்தியமும் பிற்-போக்கு அரசும் சுரண்டும் வர்க்கத்தின் குண்டர் படை-களும் தாக்கும்போது அவர்கள் அதை எப்படி எதிர்கொள்வது?
- ஜே.வி.பி. நிராகரிப்பது ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பான வன்முறையை மட்டுமா? அரச வன்முறையையும் போரையும் அது எதிர்க்கிறதா? அப்படி-யானால் அண்மைக்காலமாக ஆதரித்து வந்த பேரினவாத அரசின் போரை எதிர்க்க ஜே.வி.பி. முன்வருமா?
- பாராளுமன்றப் பாதை வழி-சென்று தங்கள் சோசலிஸத்தை அடையமுடியும் என்று ஜே.வி.பி. நம்புகிறதா? அல்லது அது வேறு சாத்தவீக வேலை முறைகளையும் வகுத்திருக்கி-றதா? ஜே.வி.பியின் புதிய பாதைக்கும் திரிபுவாதிகளின் பழைய பாதைக்கும் இடையில், ஜே.வி.பியின் பச்சை இனவாதத்தை விட்டால் உள்ள வேறு-பாடு தான் என்ன?
- ஜே.வி.பியால் ஏமாற்றப்பட்டு உயிர் தியாகம் செய்தவர்கட்கு அஞ்சலி செலுத்துகிற ஜே.வி.பி. தன்னுடைய வன்முறைக்குப் பலியாகிய அப்பாவிகட்கும் இனி வருங் காலங்களில் அஞ்சலி செலுத்துமா?
- சென்ற வருடம் நேபாள மாக்ஸிய-லெனியக் கட்சியின் அழைப்பை ஏற்று அங்கு போய் வந்ததைத் தனது மாக்ஸிய-லெனினியத்தின் தகுதி என்று ஜே.வி.பி. தம்பட்டம் அடித்தது. இப்போதைய கொள்கை மாற்-றமும் அந்தத் தகுதிக்கு உட்பட்டதா?
- எல்லாவற்றையும் விட முக்கிய-மாக, ஜே.வி.பி. தனது முப்பத்து மூன்று வருட கால அரசியல் பற்றிய முழுமையான வரலாற்-றையும் அதுபற்றிய தனது விமர்சனத்தையும் மக்கள் முன் வைப்பது எப்போது?

-மோகன்-

## யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, சுயநிர்ணய உரிமையை வற்புறுத்துவோம்.

மே தினம் உலகத் தொழிலாளி வர்க்கத்தின் உரிமைப் போராட்ட தினமாகும். எட்டு மணி நேர வேலைக்காக அமெரிக்கத் தொழிலாளி வர்க்கம் இரத்தம் சிந்திப் போராடிய வரலாற்று நினைவு தினமாகும். அத்தகைய புரட்சிகரப் போராட்ட நினைவு தினம் உலகில் பல விதமான அடக்குமுறைகளுக்கும் எதிரான போராட்ட உறுதி கொள்ளும் நாளாக வருடா வருடம் நினைவு கூரப்படுகின்றது. இன்று இலங்கையில் தேசிய இனப் பிரச்சினை என்பது யுத்த வழியில் பிரதான முரண்பாட்டுப் பிரச்சினையாக முன்னெழுந்து நிற்கின்றது. வடக்கு கிழக்கும் அதன் மக்களும் கடுமையான ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு சகல வழிகளாலும் வாழ்நிலை நெருக்கப்பட்டுள்ளார்கள். கடந்த இரண்டு தசாப்த காலத்தில் எழுபதினாயிரம் மக்கள் தேசிய இனப்பிரச்சினை காரணமாக [illegible] மக்கள் [illegible] விட்டு வெளியேறி உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாக அல்லற்பட்டு வருகின்றனர். கோடிக் கணக்கான பல வகைச் சொத்துக்களையும் இழந்துள்ளனர். தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் அரசாங்க தனியார் துறை ஊழியர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவருமே யுத்த சூழலின் கொடிய கரங்களுக்குள் சிக்கித் தவிக்கின்றனர். தத்தமது தொழில் முயற்சி உழைப்பு அனைத்தையும் கைவிட்டு அவல வாழ்வு வாழுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். பெண்கள் எல்லாவகைத் துன்பச் சுமைகளுடன் வாழ்ந்து வரும் அதே வேளை, பாலியல் சித்திர-வதைகளுக்கும் வல்லுறவுக் கொடுமைகளுக்கும் தொடர்ந்து ஆளாக்கப்படும் அவலம் நீடிக்கின்றது. வயது வேறுபாடின்றி மேற்கொள்ளப்படும் பெண்கள் மீதான பாலியல் கொடுமைகள் எவ்வகையிலும் குறைந்த பாடில்லை. இதன் அண்மைய உதாரணச் சம்பவம் தான் மன்னார் உப்புக்குள பாலியல் வல்லுறவுச் சம்பவமாகும். மேலும் கைது, காணாமல் போதல், சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைத்தல் தொடர்ந்து கொண்டே செல்கிறது. இதுவரை காணாமல் போனவர்கள் பற்றி எவ்வகையிலும் நீதி நியாயம் கிடைக்கவில்லை. இவை அனைத்துடன் யுத்த சூழலானது அரசியலிலும் வர்த்தகத்திலும் பிற துறைகளிலும் மிகப் பெரிய சம்பாத்தியங்களை ஒரு குறிப்பிட்ட சிலருக்கு வழங்கி வருகிறது. இதனால் பாதிக்கப்பட்டு நிற்பவர்கள் வடக்கு- கிழக்கு மக்களாகவே காணப்படுகின்றனர். இவற்றுடன் ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இத்தகைய மறுப்புகளுக்கு யுத்தம் வலுவான [illegible]ப்பட்டுள்ளது. சம்பூர்ணமாகவும் இலவசமாகவும் கிடைக்க வேண்டிய வேலை வாய்ப்பு, வேலை உத்தரவாதம், சம்பள உயர்வு, சேமலாப நிதி, வேலை நேரம் போன்ற உரிமைகளுக்கான [illegible] நிற்கும் தொழிலாளர்கள், ஊழியர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனை போராடிப் பெற உரிமைகளைப் பாதுகாக்க முடியாத நிர்ப்பந்தங்களை தொழிலாளர்கள் எதிர்நோக்கி நிற்கின்றனர். இத்தகைய அவல நிலை வடக்கு கிழக்கில் தொடரப்படுவதற்கும் முழு நாட்டின் பொருளாதார அரசியல் சீர்குலைவுக்கும் யுத்தமே காரணமாகி நிற்கின்றது. இவ் யுத்தம் இன்றைய உச்ச நிலை வரைக்கும் பெறுவதற்கு ஏகாதிபத்திய வாதிகளும் பிராந்திய மேலாதிக்க வாதிகளும் பின்புலத்தில் நின்று செயற்பட்டு வருகின்றார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் [illegible] இலங்கையில் தாராளமய தனியார் மய நுகர்வுக் கலாசாரம் என்பனவற்றுக்கு ஊடாக தங்கு தடையின்றி முன்னெடுக்கப்பட்டுள்ளதற்கு பேரினவாத ஒடுக்குமுறை யுத்தம் கை கொடுத்து வந்துள்ளது. இலங்கையின் ஆளும் வர்க்க சக்திகளோடு கை கோர்த்துக் கொண்ட ஏகாதிபத்திய வாதிகளும் பிராந்திய மேலாதிக்க சக்திகளும் வடக்கு கிழக்கில் நடாத்தப்படும் யுத்தத்தின் மூலம் தத்தமது ஆதிக்க நலன்களுக்கான இலக்குகளை அடைந்த வருகின்றனர். யுத்தத்தைக் காரணமாகக் காட்டி பொருட்களின் விலையையும், சேவைக் கட்டணங்களையும் உயர்த்தி மக்கள் மீது பாரிய வாழ்க்கைச் சுமைகளை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் ஆலோசனைகளை முழுமையாக ஏற்று நாட்டை மறு காலனியாக்குவதன் மூலமாக நவகாலனித்துவ நாடாக்குவதில் அரசாங்கம் வேகமாக செயல்பட்டு வருகின்றது. இவ் விடயத்தில் ஐக்கிய தேசிய கட்சியும் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஒரே கொள்கையையே பின்பற்றி வந்துள்ளன. ஏகாதிபத்திய எசமான்களுக்கு சேவகம் செய்யும் பாதையில் தமிழ் மக்கள் மீதான யுத்தத்தை ஒரு பிரதான கருவியாக இவ்விரு ஆளும் வர்க்க கட்சிகளும் பயன்படுத்தி வந்துள்ளன. இத்தகைய பேரினவாத ஒடுக்குமுறை யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றோம். அதே வேளை இவ் யுத்தத்திற்குக் காரணமான தேசிய இனப் பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலமான தீர்வை வற்புறுத்துகின்றோம். பேச்சுவார்த்தைக்கான முயற்சியில் நோர்வேயின் ஏற்பாட்டாளர் நிலைப்பாட்டை மிக நிதானமாகவும் நியாயத்துடனும் அணுகி முன்னெடுப்பதை நாம் வரவேற்கின்றோம். அத்தகைய தீர்வானது சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வடக்கு கிழக்கு இணைந்த பிரதேச சுயாட்சியாக அமைதல் வேண்டும். அச் சுயாட்சித் தீர்வானது வடக்கு கிழக்கு மக்கள் தமது பாரம்பரிய பிரதேசத்தில் தமது இருப்பையும் வாழ்வையும் பொருளாதார அரசியல் சமூக கலாசார விருத்திகளையும் எவ்வித தலையீடும் தடைகளும் இன்றி முன்னெடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். அதனையே வடக்கு கிழக்கு மக்கள் அடிப்படை அபிலாசையாகக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய சுயாட்சித் தீர்வில் வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்களது தனித்துவம் தன்னடையாளம் பேணப்படக் கூடிய வகையில் அம் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு அமைதல் வேண்டும். அவ்வாறே மலையக மக்களது இருப்பு உரிமைகளுக்கான தீர்வு பற்றியும் [illegible] வேண்டியது அவசியமாகும். இன்றைய கொடிய யுத்த சூழலில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கு தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு தேடப்படல்வேண்டும். அது யுத்தத்தின் மூலம் சாத்தியமற்ற ஒன்றாகும். பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வே சாத்தியமானதாகும் என்பதை எமது புதிய ஜனநாயகக் கட்சி இம் மே தினத்தில் வற்புறுத்துகின்றது. வடக்கு கிழக்கையும் அதே வேளை முழு நாட்டையும் பன்முக நாசங்களுக்கு உள்ளாக்கி நிற்கும் யுத்தத்தை எதிர்த்தும் நியாயமான அரசியல் தீர்வை வற்புறுத்தியும் மக்கள் ஒன்றிணைந்த சக்தியை வெளிப்படுத்தி வெகுஜன இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும். மக்கள் சக்தி மாபெரும் சக்தி என்பதை வெளிப்படுத்த வேண்டும். அதுவே தீர்வுக்குரிய வழியாகும். புதிய ஜனநாயகக் கட்சி மார்க்சிய லெனினிச மாஓசேதுங் சிந்தனை வழிநின்று சகல வகை ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து என்றும் மக்கள் பக்கத்தில் நின்று போராடி வந்துள்ளது. இன்றைய சமூக அமைப்புச் சூழலில் வர்க்க, இன, சாதிய பெண்ணிய ஒடுக்குமுறை-களுக்கு எதிராகத் தொடர்ந்தும் கருத்தியல் அடிப்படையிலும் நடைமுறை வழிகளிலும் உறுதியாக நின்று போராட வேண்டியுள்ளது. இது வரலாற்றில் வேண்டப்படும் தேவையாகும். இக் கடமையை முன்னெடுக்க புதிய தலைமுறையானது தூர நோக்கும் நிதானப் போக்கும் கொண்ட வெகுஜனப் போராட்ட மார்க்கத்தில் அணிதிரள வேண்டும் என்னும் அறைகூவலை எமது கட்சி இம் மேதினத்தில் விடுக்கின்றது. புரட்சிகர மே தினத்தில் அணி திரள்வோம்! அரசியல் தீர்வை வற்புறுத்துவோம்!! வெகுஜன அரசியல் போராட்ட மார்க்கத்தை முன்னெடுப்போம்!!!

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
PUTHIYA POOMI
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.
පුදිය පූමි

# முஸ்லிம் சமூகத்தின் இருப்பும் சவால்களும்



மாவனெல்லையில் முஸ்லீம் மக்களின் கடைகள் வீடுகள். பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன. தாக்குதல்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த முஸ்லீம்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதால் முஸ்லீம்கள் இருவர் கொல்லப்பட்டனர் கிரனையிட் தாக்கதலுக்குட்பட்ட ஒருவர். சவரக்கத்தியினால் வெட்டப்பட்டவர் ஒருவரும் துப்பாக்கிச் சூட்டினால் காயப்பட்டவர்களும் ஏனைய தாக்குதல்களால் காயப்பட்வர்களும் முஸ்லீம்கள். அவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்

முஸ்லீம் கடையொன்றில் சில சிங்களவர்கள் கப்பம் கேட்டதையடுத்தும் முஸ்லீம் ஹோட்டலொன்றில் சாப்பிட்டுவிட்டு காசு கொடுக்காததை அடுத்தும் பொருட்களை வாங்கிவிட்டு காசு கொடுக்காததையும் அடுத்து முஸ்லீம் ஒருவர் தெருவிளக்கு கம்பத்தில் கட்டப்பட்டு சவரக்கத்தியால் வெட்டப்பட்டுள்ளனர்

அச்சம்பவங்களுக்கு நீதி கேட்டு பொலிசில் முறையிட்டும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமையால் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் ஆத்திரமடைந்த சிலர் சில அத்துமீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறப்படுறது.

ஆனால் மே இரண்டாம் திகதி திட்டமிட்டப்பட்ட வகையில் மாவனெல்லையில் முஸ்லீம்களுக்கு எதிராக வெறியாட்டம் நடைபெற்றுள்ளது. முஸ்லீம்களை ஆத்திரமூட்டி நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே அவ்வெறியாட்டம் நடைபெற்றுள்ளது. ஆத்திரமூட்டிய நடவடிக்கைகளோ வெறியாட்டமோ தற்செயலான சம்பவங்களாக காட்டுவதிலேயே அரசாங்கமும் பௌத்த சிங்களத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தீவிர இனவாதிகளும் தெரிவிக்கின்றனர். அரசாங்த்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் முஸ்லீம் தலைவர்களும் இரண்டு கோஸ்டிகளுக்கான மோதல்களாகவே மாவனெல்னை வெறியாட்டத்திற்கு அர்த்தம் கற்பிக்கின்றனர் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர்கள் மாவனெல்லை தாக்குதலை திட்டமிட்ட இனரீதியான தாக்குதல்கள் என்று கூறத்தயங்கவில்லை. அவ்வாறு கூறினாலும்

அத்தாக்குலுக்கு அவர்களின் எதிர்ப்பு வரையறுக்கப்பட்டதாவே இருந்தது. ஐ.தே.கட்சியுடனும், பொதுஜன ஐக்கிய முன்னணியுடனும் இணைந்திருக்கும் முஸ்லீம் தலைவர்கள் மாவனெல்ல சம்பவத்தை சிங்கள இனவாதத்தின் திட்டமிட்ட தாக்குதல் என்று கூறுவதில் தயக்கம் காட்டுகின்றன

மாவனெல்ல சம்பவம்பற்றி தனியார் தொலைக்காட்சி நிறுவனமான ரி.என்.எல் இல் ஆங்கிலத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் முஸ்லீம் மக்கள் சார்பில் முறையான வெளிப்படுத்தல்களும். அறிக்கைகளும் செய்யப்படவில்லை. சிஹல உறுமய தலைவர் திலக் கருணாரட்னவும் அவரின் ஆதரவாளர்களும் மாவனெல்லை சம்பவங்களால் சிங்களவர்களே அதிகம் பாதிப்படைந்ததாகவும், முஸ்லீம்களே அங்கு நடைபெற்ற சம்பவங்களுக்கு காரணம் என்றும் ஆணித்தரமாக கூறினர். அந்நிகழ்ச்சியில் முஸ்லீம்கள் சார்பில் கலந்து கொண்ட சட்டத்தரணியொருவரும். எம்.பி.ஒருவரும். சபையோரும் சரியாக விடயங்களை முன்வைக்கவில்லை. காரணம் அவர்களுக்கு மாவனெல்லை தாக்தகுதல்களையும். தற்போது முஸ்லீம் மக்களுக்கு எதிராக செயற்படும் பேரினவாதத்தின் பன்முகங்கள் பற்றியும் தெளிவான பார்வை இல்லை. அவற்றை எதிர்கொள்வது எப்படி என்பது பற்றியும் அவர்களுக்கு அக்கறை இல்லை. முஸ்லீம் மக்களுக்கு அவப்பெயர் வந்துவிடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருந்தனரேயன்றி பேரினவாதத்தினால் முஸ்லீம் மக்கள் மீது புரியப்பட்டுவரும் அநீதிகள்பற்றி அவர்களுக்கே தெரிந்த காரணங்களினால் பேச மறந்தனர்.

முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணியாலும் சில முற்போக்கு எண்ணம் கொண்ட முஸ்லீம்களுமே அநீதிகளை ஓரளவுக்கு எடுத்துக் காட்டமுடிந்தது. ஆனால் அவர்களும் இன்னம் முதிர்ச்சியற்ற தேடல் நிலையியேயே இருக்கின்றனர்.

இலங்கையின் பௌத்த சிங்கள பேரினவாதம் நாட்டின் அரசு இயந்திரமே பௌத்த சிங்கள பேரினவாதத்தின் அடிப்படையிலேயே நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இதனை முஸ்லீம் தலைமைகள் எனப்படுபவைகள் உணர தவறக்கூடாது. அவற்றின் இருப்புக்காக மக்களை பிழையான வழியில் நடத்திச் செல்லக்கூடாது. எல்லா அரசியல் கட்சிகளிலும் முஸ்லீம்கள் அங்கம் வகிப்பது தமிழ்தேசிய இனத்தின் மீதான அரசாங்கத்தில் ஒடுக்கலினால் விரிவடையும் முரண்பாடுகளை தந்திரோபாபயமாக பயன்படுத்திக் கொள்வது போன்ற நிச்சயமான அரசியல் மார்க்கமாக இருக்முடியாது

ஐ.தேத.கட்சியுடனும், பொது ஜன ஐக்கியமுன்னணியுடனும் சேர்ந்திருப்பது என்பதனால் முஸ்லீம் மக்கள் நீண்டதூரம் செல்லமுடியாது என்பது நிருபிக்கப்பட்டுள்ளது. ஆளும்கட்சியுடன் பேரம் பேசுவதற்கான முஸ்லீம் காங்கிரஸ் போன்றவற்றின் நிலைப்பாட்டினால் சில சலுகைகளை மேலதிகமாக பெற முடிந்திருந்தாலும் ஏகாதிபத்திய சார்பு, முதலாளித்துவ, பௌத்த சிங்கள அரசின் வரையறைகளுக்:குள்ளேயே அச்சலுகைகளைப் பெற முடியும். முஸ்லீம் பிரதிநிதித்துவத்தை அனுசரித்துப் போகாவிட்டால் பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கம் நிலைத்திருக்கமுடியாது என்பதுபோல் தோற்றமளிப்பதால் பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கத்திடமிருந்து முஸ்லீம்கள் நீதியை பெற்றுக் கொள்ள முடியுமென்பதில்லை.

அரசாங்கத்திற்குள் மட்டுமன்றி வெளியில் சிஹல உறுமய. சிங்கள வீரவிதான போன்ற அமைப்புகளின் தீவிர இனவாத பாசிச நடவடிக்கைகளால் முஸ்லீம்மக்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர். அச்சக்திகள் இந்திய இந்துத்துவத்துடன் கைகோர்த்துக் கொண்டிருக்கின்றன.

முஸ்லீம் மக்களினூடாக இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலையெடுப்பதாக மேற்படி சிஹல உறுமய போன்ற பிரசாரம் செய்து முஸ்லீம் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டி வருகின்றனர். இலங்கை அரசுடன் கைகோர்த்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியமும் இந்திய மேலாதிக்கமும் பொதுவாக இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றி பேசிவருகின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கையில் வாழும் முஸ்லீம்களின் அரசியல் மார்க்கம் மிகவும் தெளிவானதாக இருக்க வேண்டும். வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லீம்கள் தமிழ்மக்களுக்கு எதிரான வேரினவாதத்தின் கைகளுக்குள் அகப்படாமல் இருப்பது போன்று அப்பிரதேசங்களுக்கு வெளியில் வாழும் முஸ்லீம்களும் பேரினவாத சக்திகளுடன் இணைந்த அவர்களின் கைகளுக்குள் அகப்படாமல் இருக்கவேண்டும் சிங்கள மக்களுடன் ஐக்கியப்பட்டிருப்பது வேறு. பேரினவாதிகளுடன் இணைந்திருப்பது வேறு. முஸ்லீம் இஸ்லாம் என்ற மத அடிப்படையில் ஒன்றிணைந்திருந்தாலும் மத, இன அடிப்படையிலான முரண்பாடுகள் அடக்குமுறைகள் என்பவற்றுக்கு வர்க்க அடிப்படை இருக்கிறது. முஸ்லீம் மக்ளிடையே ஆதிக்கம் செலுத்தும் முதலாளித்துவ, சிறுமுதலாளித்ததுவ வர்க்கங்களின் அணுகுமுறையால் முஸ்லீம்களுக்கு நீதி கிடைக்காது என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.

சிங்களத் தலைவர்களுடன் முஸ்லீம் தலைவர்கள் ஐக்கியப்பட்டு இலங்கையின் சுதந்திரத்திற்கு போராடியமையும் வரலாற்றுக்காலத்தில் சிங்கள மன்னர்களின் கீழ் முஸ்லீம் தளபதிகள் நாட்டைக் காக்க போரிட்டமையும் இன்று செல்லுபடியானதாக இல்லை.

முஸ்லீம் மக்கள் ஒரு தேசிய இனமாக தலைநிமிர்ந்து வாழ்வதற்கும், சிங்கள மக்களுடன் ஐக்கியப்பட்டிருக்கவும் புதிய அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன.

# போலி தொழிற்சங்க கூட்டணிகளால் மலையக மக்களுக்கு விமோசனம் இல்லை.




மலையகத் தொழிற்சங்கத் தலைமைகள் தன்னளவில் கையாலாகாதிருப்பதுடன் பேரினவாத முதலாளித்துவ, ஏகாதிபத்திய சார்பு ஐ.தேத.கட்சி , பொதுஜன ஐக்கிய முன்னணி என்பவற்றுக்கு துணை போகின்றன. நாட்டையும் மக்களையும் அழிவுக்கு இட்டுச் சென்று கொண்டிருக்கும் அக்கட்சிகளால் மலையகத்தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி எந்தவொரு தேசிய இனத்ததுக்கும் விமோசனம் இல்லை. இன்று நினைவுகூரப்படும் 115வது மேதினம் மலையகத் தமிழ்மக்களை மக்கள் போராட்டப்பாதையில் அணிதிரட்டி செல்வதற்கான மாக்சிய லெனினிஸ புரட்சிகர சக்திகளுடன் அணிதிரள்வதற்கான சத்தியத்தை நடைமுறைப்படுத்துவதற்கான புரட்சிகர மேதினமாகும்! என்று புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ.தம்மையா இராகலையில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் தலைமையுரையாற்றும்போது குறிப்பிட்டார்.

புதிய ஜனநாயக கட்சியின் மேதின ஊர்வலம் இராகலை நடுக்கணக்கு பஜாரிலிருந்து தோழர்கள் இ.தம்பையா, சோ.தேவராஜா. வசந்த திஸாநாயக்க. பீ.ஏ.ஞானரட்ன. சி.நவரட்ணம். க.சூடாமணி, எஸ். மனோகரன் ஆகியோரின் தலைமையில் இராகலை நகருக்கு வந்து சேர்ந்தது.

தோட்டத்தொழிலாளர்களுக்கு 400ரூபா சம்பள உயர்வு உட்பட புதிய சம்பளத்திட்டத்தை வென்றெடுக்க வாழ்க்கைச் செலவு உயர்வுக்கேற்ற நிவாரணத்தை வென்றெடுக்க.. மலையகத் தமிழ்மக்களுக்கான சுயாட்சி உரிமைகளை வென்றெடுக்க, சிறைகளில் வாடும் இளைஞர் யுவதிகளை விடுதலை செய்ய. யுத்தத்தை நிறுத்தி தமிழ். முஸ்லீம். மலையகத்தமிழ் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க ஏகாதிபத்திய பூகோளமயமாதல். முதலாளித்துவம் . இனவாதம் என்பவற்றை தோற்கடிக்க புதிய தலைலமையை கட்டி வளர்ப்போம் என்ற அறைகூவலுடன் மேற்படி மேதினம் நடைபெற்றது.

அம்மேதினத்தில் உரையாற்றிய தம்பையா மேலும் கூறியதாவது

அட்டனில் ஐக்கிய மேதினம் கொண்டாடும் அமைப்புகள் யாவும் கூட்டாக சம்பளஉயர்வு போராட்தை காட்டிக்கொடுத்ததை மறந்குவிட முடியாது. எல்லா அமைப்புகளிலுமுள்ள மக்கள் ஐக்கியப்பட்ட நிலையிலும் 400ரூபா சம்பள உயர்வுப் போராட்டத்தை காட்டிக் கொடுத்தன. 30வருடங்களுக்கு மேல் மலையக மக்களுக்கென அமைச்சர்களும் எம்.பிக்களும் இருந்தும் அடிப்படைத் தேவையான வீட்டுத் தேவையைக் கூட பூர்த்தி செய்யமுடியாத நிலையிலேயே தோட்டத் தொழிலாளர்கள் உள்ளனர். இன்னும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் நாடற்றவர்களாக இருக்கின்றனர்.

அரச கருமமொழிச் சட்டத்தின் கீழ் தமிழ்மொழி மலையகப்பகுதிகளில் அமுலாக்கப்படலாம் என்று ஜனாதிபதி பிரகடனஞ் செய்திருந்தபோதும் மலையகத் தமிழ் மக்கள் அவர்களது அலுவல்களை தமிழ் மொழியில் செய்து கொள்ளமுடியாது. இந்நிலையில் எத்தனை தொழிற்சங்கங்கள் சேர்ந்து கூட்டு மேதினம் நடத்தினாலும் நேர்மையான தலைமைத்துவமும், சரியானமார்க்கமும் நோக்கமும் இல்லாவிடின் மலையகத் தமிழ்மக்களுக்கு எவ்வித விமோசனமும் கிட்டப்போவதில்லை.

தொழிற்சங்கத் தலைமைகளிடம் நேர்மையும். சரியான நோக்கமும் கொண்ட வேலைத்திட்டமும் இல்லை. சரியான நோக்கத்தையும் வேலைத்திட்டத்தையும் மார்க்கத்தையும் புதிய ஜனநாயக கட்சி கொண்டிருக்கிறது. அக்கட்சியே மலையகத் தமிழ் மக்களினதும் விடுதலைக்கான தெரிவாக முடியும்.

வடக்கு கிழக்கிலே தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் யுத்தம் ஏகாதிபத்தியமாக மாறியுள்ளது. மேலாதிக்க சக்திகளினாலுமே அரசாங்கத்தின் யுத்தம் நடத்தப்படுகிறது. அவ்யுத்தம் எதிர்க்கப்படவேண்டியதுடன் தோற்கடிக்கப்படவும் வேண்டும் இனப்பிரச்சினைக்கான சமாதான வழியில் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தோழர் வசந்த திஸாநாயக்க உரையாற்றியபோது இன்று உலகில் சோசலிசம் தற்காலிகமான பின்னடைவை சந்தித்துள்ளது. அதேபோன்று எமது நாட்டில் இனவாதம் தலைவிரித்தாடுகிறது. அதுவும் தற்காலிகமானதே. அதற்கு எதிரான இயக்கங்கள் சிறியனவாகத் தோன்றினாலும் பலமுடையவை. சிறுதுளி பெருவெள்ளம். சிறுபொறி காட்டுத்தீ என்பது போல் இனவாதத்திற்கும் முதலாளித்துவத்திற்கும். ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான சக்திகள் நம்பிக்கையூட்டக் கூடியனவாக வளரும். வளராவிட்டால் எமது நாட்டிற்கும், மக்களுக்கும் எதிர்காலம் என்பதே இருக்கமுடியாது எனக் குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டத்தில் தோழர்கள் சோ.தேவராஜா, சி.இராஜேந்திரன். எஸ்.பன்னீர்செல்வம், ஜெ.சற்குருநாதன், பி.சந்திரகுமார். கே.சுப்பிரமணியம், எஸ்.மகேந்திரன், கலைச்செல்வி, எஸ்.சண்முகராஜா, பி.ஏ.ஞானரத்ன ஆகியோர் உரையாற்றினர்.

# புரவலரின் தமிழ்சேவை

இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான தொலைக்காட்சி நிறுவனமொன்றில் தமிழ் நிகழ்ச்சியொன்றை நடத்துவதா இல்லையா என்பது தொடர்பாக அத்தொலைக்காட்சி இயக்குனர்சபை உறுப்பினரான தமிழ்பேசும் ஒருவருக்கும் நிகழ்ச்சித் தயாரிப்பாளரான தமிழர் ஒருவருக்குமிடையில் கடும் போட்டி நடைபெற்றது. அதில் தமிழ்பேசும் இயக்குநர் வென்றுவிட்டார். அந்த தயாரிப்பாளர் அங்கு வேலை செய்தால் தான் வெளியேறப்போவதாக சாவால்விட்டு வென்றுவிட்டாராம். அத்தமிழ் நிகழ்ச்சிக்கு அந்தோ கதிதான்.

தமிழ்பேசும் மக்களின் ஐக்கியம் பற்றி பேசும் பொதுமேடைகளில் அடிக்கடி தோன்றும் சமூக சேவை செய்யும் புரவலர் பெருமானின் அருளும், சேவையும் தமிழ்மக்களுக்கும் தமிழ்மொழிக்கும் அவசியம். சில்லறைகளால் சம்பாதிக்கப்புடும் பெயர்கள் சில்லறைத்தனங்களால் அம்பலப்பட்டே தீரும். அவரின் சில்லறைத் தனங்கள் அம்பலப்பட்டாலும் இல்லாவிட்டாலும் அத்தொலைக்காட்சியன் தமிழ் பார்வையாளர்களுக்கு பாதிப்பு. தமிழ் நிகழ்ச்சிக்காக ஒதுக்கப்படும் நேரமும் பறிபோகிறது.

வெளியிடுபவர்-இ.தம்பையா. இல.47. 3ம் மாடி. கொழும்பு மத்திய சந்தைக் கட்டடத்தொகுதி. கொழும்பு-11. அச்சுப்பதிப்பு-யூ. கே. பிறின்ரேர்ஸ். 98ஏ. விவேகானந்த மேடு. கொழும்பு-13.

படிப்பகம்